Registered as a News Paper
பக்கம் - 26

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-31 01-07 ஒக்டோபர் 2004



## தியாகிகளுக்கு அஞ்சலி



## புலிகளின் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணம்

# திருமுக அறிமுகம்

1863 ஆம் ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதி பிறந்தார் சுவாமி விவேகானந்தர். தாய் தந்தையர் இட்ட பெயர் நரேந்திரன் ஆகும். உலக மானிடர்களுக்கு சேவையாற்றும் மகத்தான சேவையினைச்செய்து சுவாமி விவேகானந்தர் என பெயர் பெறுவர் என்பதை பெற்றோர்கள் அறிந்திருக்கவில்லை.

இவர் இளம் வயதிலேயே மிகவும் துடிப்புமிக்க குழந்தையாக விளங்கினார். மூர்க்கத்தனம் மிகுந்த வாலிபப்பருவத்திலேயே இவரது தந்தையார் விஸ்வநாதத்தார் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவரது குடும்ப கஷ்டம் வருத்தியபோதும் கடவுளை அறியவேண்டும் என்பதில் தணியாத தாகம் கொண்டிருந்தார். இதனால் தியானத்திலும் பிரார்த்தனையிலும் தனது மனத்தை தீவிரமாக ஈடுபடுத்திவந்தார். நரேனைக்காணவில்லை என்று தாயார் தேடும்போதெல்லாம் இவர் தனிமையான இடம் தேடி தியானத்தில் ஆழ்ந்திருப்பர். தாயார் புவனேஸ்வரி அம்மாள் இவரது தெய்வீகத்தன்மையை அறிந்து தம்மால் இயன்ற உதவிகள் பலவும் அளித்துவந்தார். துறவு மனப்பான்மையும் மனவுறுதியும் கொண்டு விளங்கியபொழுது இராமகிருஷ்ணருடைய தொடர்பு கிடைத்தது. இராமகிருஷ்ணரைக்கண்டவுடன் இவர் கேட்ட கேள்வி "கடவுள் இருக்கிறாரா" என்பதுதான் "ஆம் குழந்தாய் என்ற ஒரு சொல்லே இவரை ஆன்மீகத்துறையில் நுழையவைத்தது. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தாம் எந்தக்காரியத்தை நிறைவேற்றுவதற்கு அவதரித்தாரோ அவைகளை நிறைவேற்ற சுவாமி விவேகானந்தரை ஒரு கருவியாகப் பாவித்தார்.

அமெரிக்காவில் "சிக்காக்கோ" என்ற நகரத்தில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் 1893 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ஆம் திகதி உரையாற்றியதன் மூலம் இந்து மதத்தின் பெருமையை உலகம் அறியும் படி செய்தார். "கனவான்களே" என்று அழைப்பதை விடுத்து "அன்பான சகோதர சகோதரிகளே என்று அழைத்ததனால் அமெரிக்க மக்களும் இவர்பால் ஈர்க்கப்பட்டனர். இவர் யாழ்ப்பாணம் வந்தபொழுது யாழ் இந்துக்கல்லூரியில் "வேதாந்தம்" என்ற தலைப்பிலே சிறந்த சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தி தமிழ் மக்கள் அனைவரையும்



## சுவாமி விவேகானந்தர்

தன் வசப்படுத்தினார். "நம் இயல்புக்குத்தக்கவாறு நம் கருத்துக்கள் இருந்தால் அதன் மூலம் நாம் வளர்ந்து வருவோம். முதலில் கீழ்படியத்தில் இருந்து கொண்டால் அதிகாரம் எமக்குத்தானே கிடைக்கும். தொண்டர் களாக இருக்கக்கற்றுக்கொண்டால் தலைவராகும் தகுதிதானே கிடைக்கும். பொறாமையை மனதில் இருந்து அகற்றினால் மகத்தான காரியங்களை சாதிப்பீர்கள்" என்று யாழ் மக்களுக்கு நல்உபதேசம் செய்தார். இவர் 1898 ஆம் ஆண்டு வங்காளத்தில் கல்கத்தாவுக்கு நான்கு மைல் தொலைவில் கங்கைக்கரையில் பேலூர் என்ற இடத்திலே முதலாவது இராமகிருஷ்ண மடத்தை நிறுவினார். அதற்கு உல கெங்கும் 134 கிளைகள் உள்ளன. லண்டன், நியூயோர்க் நகர்களின் நிலையான வேதாந்த சங்கத்தை நிறுவி 'லெக்கெட்" என்பவரை தலைவராக்கி இந்து மத உயர்ச்சிக்கு வழிவகுத்தார். ஆசியா, ஐரோப்பா அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் மடங்கள் அமைக்கப்பட்டு சொற்பொழிவு வகுப்புக்கள் புத்தகங்கள் வெளியிடுதல் போன்ற பணிகளும் நடைபெறுகின்றன. தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம், ஆங்கிலம், வங்காளம், குஜராத்தி,சமஸ்கிருத மொழிகளில் நூல்கள் வெளியிடப்பட்டன.

தற்கால மக்களை ஆன்மீகநெறியில் வாழ்வதற்கு ஊக்குவிக்கும் முகமாக எல்லா மடங்களிலும் விரும்பி வருபவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் 39 ஆண்டுகள் வாழ்ந்துள்ள போதிலும் அவர் ஆற்றிய பணியோ பல்லாண்டு தொடர்கின்றன. இவரது வருகையின் நூற்றாண்டு விழா 1997 ஆம் ஆண்டு மிகப்பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. 1902 ஆம் ஆண்டு ஆடி மாதம் 08 ஆம் திகதி விவேகானந்தர் இவ்வுலகவாழ்வை நீத்தார்.

அட்சயன்

# தாரசாரம்

## மண்ணும் மொழியும் முகத்துக்கு இரண்டு விழிபோல...!

எங்கும்தமிழ். எதிலும் தமிழ் தமிழுக்காக உயிரையும் கொடுப்போம் என்று ஒரு பக்கம் உயிர் கொடுக்கும் வீரர்கள். மொழியின் தொன்மை பற்றியும் சிறப்புப் பற்றியும் ஒரு புறம் ஆய்வுகள். மொழியின் வளர்ச்சிக்கு என்ன செய்யலாம் என்பது பற்றிய ஆய்வுகள் செயற்பாடுகள் ஒருபுறம்.

தமிழ் தனித்த மொழி, பல மொழிகளைப் பிரசவித்த தாய் மொழி. தமிழ் செம்மொழிகளுள் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சிறப்புப்பெற்றது. ஆனால் ஒருபுலவர், தனது வாயால் மெல்லத்தமிழினி சாகும் என்று சொல்லிவிட்டார். அப்படிச் சொல்லலாமோ? என்று பலர் அடிதடியிலும் இறங்கினார்கள். பாவம் தமிழை ஆங்கிலமாகவோ, சமஸ்கிருதமாகவோ பேசும் வல்லமை பெற்றோரை அவர்கள் மன்னித்து விட்டார்கள்.

தமிழில் முத்தமிழ் இருப்பது பழைய தமிழில். நவீன தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், தொலைக்காட்சித்தமிழ், அறிவியல்தமிழ், விமர்சனத்தமிழ் எனப்பலவகை மாற்றங்களை வளர்ச்சியைப் பெற்று வருகிறது. பேச்சிலும் மூச்சிலும் தனி இலக்கணமுடையது தமிழ்.

ஆனால் நவீனபோக்கில் தமிழை ஆங்கில இலக்கணத்தில் பேசும் தன்மை அதிகரித்து வருகிறது. அண்மையில் ஒரு அறிவிப்புப் பலகையில் காணப்பட்ட வாசகம் இது. "இவ்விடத்தில் மிதிவண்டிகள் நிறுத்தம் செய்யவேண்டாம்"

"Don't parking bicycles here"

செய்யவேண்டாம் நிறுத்துதல் சைக்கிள் இங்கே.

அருமையான மொழி பெயர்ப்பு என வியக்கவேண்டாம். அதையே அழகு தமிழில்

"இவ்விடத்தில் மிதி வண்டிகள்

நிறுத்த வேண்டாம்" என்று எழுதுவதே தமிழ் இலக்கணமாகும். ஒரு குழந்தை நோயியல் நிபுணர் வானொலியில் படுக்கையில் சிறுநீர் கழிக்கும் குழந்தைகளைப்பற்றி உரையாற்றினார். இறுதியில்... "இவ்வாறு செய்வதன் மூலம் அந்தப் பிள்ளை படுக்கையில் சிறுநீர் கழித்தல் என்ற செயற்பாட்டை செய்வதிலிருந்து தவிர்க்கலாம்."

என்று 'இழுத்துப்பறிச்சு' சொல்லி முடித்தார். கேட்டுக் கொண்டிருந்த ஒரு கிழவி சிரித்து விட்டு "பேய்ப்பொடியன், படுக்கையில் சிறுநீர் கழிப்பதைத்தவிர்க்கலாம்."

எண்டு சொல்ல, ஏன் இவளவில நீட்டி முழக்குது

என்றார். "அவரணை இங்கிலீசில சிந்திச்சு தமிழ்ழில கதைக்கிறார்." என்றாள் பேத்தி.

இது கதையில்லை. தமிழுக்கென்றுள்ள பல சொற்கள் அருமையான முறையில் வகுக்கப்பட்டிருக்கும் போது அவற்றைக்கூட திரிபுபடுத்திப் பார்க்கும் தன்மை அதன் தொன்மையைக்கேள்விக்குள்ளாக்கும். உதாரணமாக பயணம் செய்பவர், பயணி என்றிருக்க, பயணவர் என்று ஏன் குறிப்பிட வேண்டும். இப்ப இன்னுமொரு தமிழ் எழுத்தாளர் குறிப்பிட்ட சொல்லையும் குறிப்பிடவேண்டும். "வணக்கம்" ஒன்று தான். காலை வணக்கம் மாலைவணக்கம் என்பதெல்லாம் ஆங்கில வரவு. குட்மோனிங், குட்ஈவினிங் என வேளை தெரியாத பொழுதுகள் அவர்களுக்கு. எங்கள் நாட்டுக்கு கடிகாரமே தேவையில்லை என்று கவிஞர் தேசிய விநாயகம்பிள்ளை மிகஅழகாக கூறியுள்ளார். சேவற்கோழியுண்டு காகமுண்டு வானம் செக்கச் சிவந்து தெரிவதுண்டு.

என்று தொடங்கி ஒவ்வொருவேலையையும் அதற்கான சிறப்புடன் விளக்கியுள்ளார். (கவிதை மலரும் மாலையும்)

தமிழைப்பேசும் முறையைக் கொச்சைத்தமிழ் என்பர். இந்தக்கொச்சைத்தமிழும் ஊருக்கூர் வேறுபடும் என்றால் தற்போதைய யாழ்ப்பாணம் பல இடங்களையும் கலந்த ஒரு மசாலாத்தமிழுக்கு தன்னை மாற்றிவருகிறது. ஒரு பதினேழு வயதுப்பெண் பக்கத்து வீட்டுக்கு வந்து.

"ச்செல்லம்மக்காக் கொஞ்சம் பூத் தாறிங்களே. அம்மாகேட்டுக்கொண்டு வரச் சொன்னவா ப்ளீஸ்" இதைக் கேட்பதற்குள் சண் ரீவீ அறிவிப்பாளர் போல தலை இப்புறமும் அப்புறமும் குலுங்கியதுடன் கைகளும் பரதநாட்டியம் போல ஒரு "விசுக்கல்" முத்திரையைக் காட்டின. "பிள்ளை கொழும்பால வந்தது."

இதே வீட்டில் இருந்த பெண் வெளியே வந்து பார்த்து விட்டுக் கூறினாள். நைட்டுக்கு கோவிலுக்கு போகணும் ஹஸ்பண்ட் கூட்டிட்டுப் போறார். கனகாம்பரத்தவுட்டு மத்ததப்புடுங்கிக்கலாம்.

பிள்ளை இந்தியாவால இப்பதான் வந்தது.

"ஒங்கட டீவ்வீல என்ன ப்ரோக்கிராம்போவுது" என்ற சிறுமி லண்டனால இப்பதான் வந்தவள்.

இப்படித்தமிழர் எந்த நாட்டுக்குப்போனாலும் அந்த நாட்டவரைப் போல பேச்சால் மட்டுமல்ல உடையாலும் மாறிவிடுகின்றனர். தமிழ் உலகம் முழுதும் பரந்து விட்டது பெருமைதான்; தேய்ந்து கொண்டு போவது எப்படிப் பெருமையாகும்.

இதைவிட இன்னும் மோசமான நடவடிக்கையை எங்கள் இளைய தலைமுறை கொண்டுள்ளது. மதிய இடைவேளை என்றால் என்ன?

மாசில் வீணையும் மாலை மதியமும்- வீசு தென்றலும்...

மாலை மதியம் மதி (சந்திரன்) தோன்றும் நேரம். காலை மாலை இரண்டு வேளைக்கும் நடுவான பொழுது மத்தியான பொழுது. மத்தியானம் நடுப்பகலை மத்தியானம் என்பதே சரி ( தேவநேயப்பாவாணர்) இதைவிடுத்து நடுப்பகலை மதியம் எனலாமோ இன்னுமொன்று பிரிவு எதிர் பிரியாமை.

பசி-பசியாமை

பொறு-பொறாமை


அருகு- அருகாமை பாடசாலைக்கு அருகாமையில் கூட்டம் நடைபெறும் என்றால் பாடசாலைக்குத் தொலைவில் என்பதே கருத்து.

பாவி என்ற வடசொல் கொடுமை செய்பவன் என்பதாகும். அபபாவி என்றால் நல்லவன் நீதி - அநீதி,நியாயம், அநியாயம் என்பது போல.

தீமையை கொடுமையை செய்யாதவன் அபாவி. இது முற்றாக மருவி 'அப்பாவி' என்றாகிறது. இதன் சரியான கருத்து அந்தப்பாவி. இதை மனதில் வைத்துக்கொண்டு வாசித்துப் பாருங்கள். அப்பாவியொருவன் கொல்லப்பட்டான். சரியா? தப்பா?

இது தவறுதான் தமிழுக்குள் தற்போது இது போன்ற தவறான சொற்பதங்கள் பெருகி வருகின்றன.

இவை தவிர எழுத்துக்களில் நாம் சிங்கள எழுத்துக்களை மிக விரும்பி ஏற்கத் தொடங்கியுள்ளோம். அழகாக எழுதுவதாகக் கருதிக்கொண்டு எழுதும் போது வந்த சொற்களை நீங்களும் பாருங்கள்.



மாயா

இத்'த'ாவை த எனவே கையெழுத்தில் எழுதுவர். சிங்களவர் எழுத்துக்களின் வரி வடிவத்தை புதுவடிவத்துக்கு மாற்றும் உரிமை தனிப்பட்ட யாருக்கும் கிடையாது.

ஆனால் இவ்வகையில் எழுத்துக்களை ஓவியமாக்குபவர்களுக்கு அந்த உரிமை உண்டு எனலாம். சாதாரணமாக இவ்வடிவங்களில் எழுதிக்கை தேர்ந்த பயிற்சி பெற்றவர்கள் தமிழீழத்திலேயே பெருகி வருகிறார்கள். காரணம் இவை நிராகரிக்கப்படாமையேயாகும்.

தமிழ் என்பது மட்டுமல்ல எந்த மொழியும் ஒரு வரையறைகளை இலக்கணம் என்ற பெயரில் கொண்டுள்ளது. பிற மொழிகளை இலக்கண வழுவாகப் பேசுகிறோமோ? எழுதுகிறோமோ,

ஐ ஆம் எ கேள் என்பதை நான் ஒரு சிறுமி என்ற வகையில் பேசுவோமோ? அதாவது ஐ ய பசைட -ஐஎ கேள் மாட்டோம். அப்படி இருக்கத் தமிழை மட்டும் ஏன் அலட்சியப் படுத்துகிறோம்.

இந்த மொழிதானே எங்கள் நாட்டுக்கான அத்திவாரம். மொழியின் அடிப்படையில் தானே கலாசாரம், மொழியின் அடிப்படையில் தானே மண், மொழியின் அடிப்படையில் தானே போராட்டம். மொழியின் அடிப்படையில் தானே இனம், தேசியம் எல்லாமே பல்லாயிரக்கணக்கான வீரர்களின் குருதியும் வியர்வையும் உறுப்புக்களும் விலையாகக்கொடுத்த, ஒரு வீர வரலாற்றின் அடிநாதமே இந்த மண்ணும் மொழியும்தானே மொழியும் நாடும் முகத்துக்கு இரண்டு விழிகள் போல இதை அலட்சியமாக இருக்காமல் காப்பாற்ற வேண்டியது.எங்கள்கடமை. எங்கள் என்றால் எனதும் உனதும் இது வரையின்றி இனியும் தவறி விடாது காத்துக்கொள்வோம். என்ன நான் சொன்னது சரியா? தப்பா?



# எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள புலிகளின் ஐரோப்பிய பயணம்



புலிகள் இயக்கம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபினை அரசிடம் சமா்ப்பித்த பின்னா் ஏற்பட்ட குழப்பங்களுக்குப் பின்னா் புலிகள் இயக்கத்தின் உயா்மட்டக் குழு ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தைக் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்திருந்ததைத் தொடா்ந்து பல எதிா்பாா்ப்புக்கள் மேலோங்கியுள்ளது.

அத்தோடு, புலிகளின் அரசியல் விவகார குழு ஜெனீவாவில் கூட்டவிருக்கும் மாநாட்டின் பின்னா் நின்று போயிருக்கும் சமாதான முயற்சியில் மாற்றங்கள் ஏதேனும் நிலவக்கூடும் என்கிற ஊகங்கள், ஊடகங்கள் மற்றும் சமாதான முயற்சியின் ஆா்வலா்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

இந்த எதிா்பாா்ப்பு இரண்டுவிதமாக பொதுவாக நிலவுகிறது.

முதலாவதாக:- அரசிடம் சமா்ப்பித்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைபில் ஏதேனும் மாற்றங்களைப் புலிகள் கொண்டு வரக்கூடுமா என்பது.

இரண்டாவது:- புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்ற நிலையில் அரசு இதற்கு மாறாகப் பேச்சுக்களை இதனடிப்படையில் ஆரம்பிக்கத் தயாரில்லாத நிலையில் பல்வேறு குழறுபடிகளை ஏற்படுத்துவதோடு, புலிகள் மீது சமாதான முயற்சிகள் நின்று போயிருப்பதற்கான குற்றங்களைச் சுமத்தி வரும் நிலையில், புலிகள் தமது அடுத்த நடவடிக்கையாக வெளிப்படுத்தப்போகும் செய்தி என்ன?

**சிறி.இந்திரகுமாா்**

என்ற எதிா்பாா்ப்பும் நிலவுகிறது.

இந்த நிலையில் இத்தகைய சந்தேகங்களைக் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட அரசியல்துறைப் பொறுப்பாளா் சு.ப. தமிழ்ச்செல்வன் அவா்களிடம் தெரிந்துகொள்ளும் பொருட்டு பல்வேறு கேள்விகளை ஊடகவியலாளா்கள் முன்வைத்தனா்.

• அங்குஇடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைவு தொடா்பாக ஊடகவியலாளா்களின் கேள்வி ஒன்றுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளா் சு.ப.தமிழ்ச் செல்வன் அவா்கள் பதிலளிக்கும் போது " முழு ஆணையைப் பெற்ற ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவு என்ற வகையில் அதில் மாற்றம் செய்ய வேண்டியதேவையில்லை. நாம்அதை ஒரு பேச்சுவாா்த்தை ஆலோசனை வரைவாக கையளித்து இருக்கிறோம். பேச்சுக்களின் போது அவை விவாதிக்கப்படலாமே தவிர அதில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை இல்லை" என தெரிவித்திருந்தாா்.

இந்தப் பின்னணியில் சமாதான முயற்சி தொடா்பில் புலிகளின் இந்த உயா்மட்ட குழுவின் ஐரோப்பிய பயணம் சமாதான முயற்சிகளில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தப்போகிறது?

இதற்கு முன்னா் நாம் புலிகள் இயக்கத்தால் இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவு அரசிடம் சமா்ப்பித்த பின்னா் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் முன்னெடுக்கப்படும் சில விடயங்களைக்கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைவின் அடிப்படையில் பேசுவதற்கு தயாரானபோது அரசு அதற்கு எதிா்மாறான சமாதான முயற்சிகளைக் குழப்புகின்ற நடவடிக்கைகளில் தொடா்ச்சியாக ஈடுபட்ட அதேவேளை திட்டமிட்டவகையில் சில நடவடிக்கைகளையும் ஆரம்பித்தது.

அதாவது புலிகளுக்கு எதிராகவும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராகவும் இனவாதப் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்த அதேவேளை அது தொடா்பான நடவடிக்கைகளுக்குத் தனது ஆதரவினை வழங்கியது.

புலிகள் இயக்கம் மீது அரச பயங்கரவாத நடவடிக்கைகளை ஆரம்பித்ததோடு அதனைத் தீவிரப்படுத்தவும் செய்தது.

இதன் தொடா் நடவடிக்கையாக இலங்கைக்குள் ஜே.வி.பி. ஹெல உறுமய, மற்றும் சில இனவாத அமைப்புக்களையும், புத்தபிக்குகளையும் பயன்படுத்தி எதிா்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதேவேளை சனாதிபதி சந்திரிகா நேரடியாக ஐக்கிய நாடுகள் சபை முதல் ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் புலிகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளாா். இந்தச் சமாதானமுயற்சியின் இறுக்கநிலைக்கான காரணங்கள் அத்தனையையும் புலிகள் மீது ஒருமுகமாக சுமத்துகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறாா்.

இதன் ஒரு விளைவாக புலிகள் சற்றுக் கீழிறங்கி அரசு முன்வைத்துள்ள திட்ட ஆலோசனையின் அடிப்படையிலும் சமாதான முயற்சியினை ஆரம்பிக்க முன்வந்தால் என்ன என்ற வகையில் சில இராஜதந்திரிகள் மட்டத்தில் கருத்துக்கள் நிலவிய நிலையில் அது தொடா்பாக புலிகளோடு பேசவும் முற்பட்டனா்.

இந்த நிலையில் தான் சமாதான முயற்சிகளின் உண்மையான தடைகளையும் இடா்களையும் தெளிவான முறையில் சா்வதேச சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்லவேண்டிய ஒரு தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையில் ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென சா்வதேச சமூகம் விரும்பியதற்கு அமைவாக செயற்பட்ட புலிகள் மீது மேற்கொள்ளப்படும் அரச பயங்கரவாத நடவடிக்கைகள் தொடா்பாக காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்புசா்வதேச சமூகத்திற்கு உண்டு.

இதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீா்க்க பின்னிற்கும் இந்த அரசின் நடவடிக்கைகளுக்கு சனநாயக வரையறைக்குள் எவ்வாறு எதிா்ப்பைத் தமிழ்மக்கள் காட்டுவது என்பதற்குத்தெளிவான முடிவை எட்டவேண்டிய தேவை உள்ளது. இதன் காத்திரத்தை உலக அரங்கில் கொண்டு சொல்லப்படவேண்டியுள்ளது.

அந்தவகையில் புலிகளின் இந்த உயா்மட்டக் குழுவினா் அரசின் திட்டமிட்ட வகையில் மேற்கொண்டு வரும் பிரச்சார நடவடிக்கைகளை விளக்கி சமாதான முயற்சியினை முன்னெடுக்கப் புலிகள் தயாராகவே உள்ளனா் என்கின்ற செய்தியைச் சா்வதேச சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்லவுள்ளனா்.


சமாதான முயற்சிகள் முன்செல்வதில் தடையாக அரசு செயற்படுவதோடு சமாதானமும் இன்றி எந்தத்தீா்வும் இன்றி தமிழரின் பிரச்சினைக்கு தொற்றிய தொழுநோயாய் நீடிக்கும் இக்காலப்பகுதியை அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்துகின்ற நிலைமையை மாற்றியமைக்க முயலுவதை முறியடிக்க வேண்டிய எதிா்ப்பிரச்சார அரசியல் நடவடிக்கையாக அமைதல் அவசியமாகிறதல்லவா?



வெகுவிரைவில் எதிா்பாருங்கள்...!
நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடா்
தமிழ் தேசியமே தமிழா் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...

## வீட்டுக்கொல்லையில் குளறி என்ன பயன்



'மிலிந்த மொறகொடவை நினைவிருக்கிறதா?' அவரேதான்... முன்னாள் ஐ.தே. முன்னணி அரசின் முக்கியஸ்தர், ரணிலின் பொருளாதார ஆலோசகர், முன்னாள் அமைச்சர், கறைபடியாத கைகளுக்குச் சொந்தமான அரசியல்வாதியெனத் தன்னைத்தானே தேர்தல் காலங்களில் பிரசாரம் செய்துகொண்ட பிரமுகர்... அமெரிக்காவுக்கு மிக நெருக்கமான உறவுக்காரர்... இப்போது புரிந்திருக்குமே... இதே மொறகொடதான் இப்போது ஒரு கருத்தைத்தெளிவாக முன்வைத்துள்ளார். நாத்தாண்டியா என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் ஆற்றிய உரையில் இக்கருத்தைக் கூறியுள்ளார்.

அதாவது " விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவுக்கமைய இனப்பிரச்சினையைத் தீர்க்காவிடின் இலங்கை இரண்டாகப் பிளவுறுவது" தவிர்க்க முடியாததாகிவிடும் என்று அவர் அங்கு கூறியுள்ளார்.

மொறகொடவின் இந்தக் கருத்து அவரின் ஆத்மார்த்தமான கருத்தா அல்லது ஆட்சியாளருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தவெனக் கூறிய கருத்தா என்பது திடமாகக் கூறமுடியாது.

எனினும் சரியான கருத்தொன்றைப் பொருத்தமான சமயத்தில் முன்வைத்தற்காக அவருக்கு நன்றி கூறவேண்டியது அவசியமேயாகும். ஆனால் ஒரு விடயத்ததைக் கூறவேண்டியே உள்ளது. கடந்த அரசின் காலத்தில் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெற்று வந்த சூழலில் இதே இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப்புலிகள் வலியுறுத்தியபோது இதே மொறகொடதான் ரணிலின் நெருங்கிய நண்பராகவும், பிரதம ஆலோசகராவும் இருந்தார்.

அப்போது அவர் இந்தக் கருத்தை ரணிலுக்கு முன்வைத்திருக்கலாமல்லவா, சரி அப்போதுதான் தவறிவிட்டார். இப்போது இக்கருத்தை அவர் வெளிப்படையாகக் கூறவேண்டிய இடம் நாத்தாண்டியா அல்ல... வாஷிங்டன்,டில்லி , லண்டன்,ஒஸ்லோ, போன்ற இடங்களில் வைத்தல்லவா இதனை ஓங்கி உரைக்க வேண்டும்.

வீட்டுக் கொல்லைவில் நின்று குளறி நிர்வாகசபை என்பது நிரந்தர தீர்வு நோக்கி பரஸ்பர புரிந்துணர்வுடன் நகர்வுகளை மேற்கொள்வதற்கான அடித்தளம்தான் என்பதை தேசிய மட்டத்தில் சிங்கள மக்களுக்கும் சர்வதேச மட்டத்தில் அவருக்கு மிக நெருக்கமான அமெரிக்காவுக்கும் வலியுறுத்தி இது தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கச் செய்யலாமே....

மிஸ்ரர் மொறகொட நாடு பிளவுபடுவதைத் தடுக்க தேசிய அக்கறையுடன் நீங்கள் இதனைச் செய்யலாம்தானே.

---

## பொங்கி எழுந்த மக்களும் அடங்கிப்போன சங்கரியும்



தமிழ் மக்களின் எழுச்சி நிகழ்வான பொங்குதமிழுக்கு அதன் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை உலகெங்கும் அது நடை பெற்ற வேளைகளில் அதற்கு புலிச்சாயம் பூசி குழப்ப முயன்ற பொறுக்காத பேரினவாதிகளும் அவர்களின் எடுபிடிகளும் கைக்கூலிகளும் தொடர்ந்து அவர்கள் முயற்சிகளில் மக்களின் எழுச்சிக்கு முன்னால் படுதோல்வி கண்டே வந்துள்ளனர்.

இம் முறை கனடாவிலும் அது மிக வெற்றிகரமாக வரலாறு காணாத வகையில் உயிர்ப்புணர்வு மிக்க ஒன்றாக நடந்தேறியுள்ளது.

லட்சத்திற்கும் அதிகமான மக்களின் தமிழுணர்வு கரை கடந்த வெள்ளமென அலையெறிந்து திரண்டபோது எதிர்ப்பாளர்களின் வெற்றுக்கோஷம் அர்த்தமற்றதாகிப் போயிற்று.

இப்பகுதியில் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இம்முறை இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் தீவிரம் காட்டிய ஜாதிக ஹெல உறுமயவின் இனவாத பிக்குகளும் இனவெறிப்புத்திஜீவிகளும் இப்போது எங்கே மொட்டாக்குப்போட்டுக்கொண்டு தலைமறைவாக இருக்கிறார்களோ தெரியவில்லை.

மக்கள் வேறு விடுதலைப்புலிகள் வேறு எனப் பேதம் பார்க்க முடியாது என்பது கள நடவடிக்கைளின் போது சரியான விடயமே... விடுதலைப்புலிகள் வழிநடத்த மக்கள் தான் போராடினார்கள், போராடுவார்கள், இதில் ஒளிவு மறைவுக்கே இடமில்லை. ஒடுக்கப்படும் மக்கள் அடக்குமுறையாளர்களுக்கு எதிராகப் போராடாவிடில் அவர்கள் எதிரிகளால் அழிக்கப்பட்டு விடுவார்கள். எனவே அவர்கள் போராடியே தீரவேண்டும். அதனை பயங்கரவாதம் எவரும் கூறுவார்களேயானால் அவர்கள் பைத்தியக்காரர்களாக அல்லது மேலாதிக்க லாதிக்க சிந்தனை கொண்ட ஆக்கிரமிப்புணர்வுடன் கூடிய அரச பயங்கரவாதிகளாக இருக்கவேண்டும்.

அது வேறு விடயம்; கனடிய பொங்கு தமிழுக்கு கடும் எதிர்ப்பை தன் பின்னணி சக்திகளின் உந்துதலுக்கேற்ப சுயபுத்தியின்றி காட்டமுயன்ற அந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கர தேரர் (ஆச்சரியப்படாதீர்கள் ஆனந்த சங்கரியாரை இனி இப்படித்தான் அழைக்கவேண்டியுள்ளது) இந்த பொங்கு தமிழ் எழுச்சியால் எந்த மூலையில் புழுங்கிக்கொண்டும் புலம்பிக்கொண்டும் இருக்கப்போகிறார் என்று தெரியவில்லை. தமிழ் பொதுமக்கள் மத்தியிலேயே அவரது பிரசாரப் பொய்மைகள் எடுபடவில்லை. தேர்தலில் தமிழ் மக்கள் அவரைத் தங்கள் இனத்தின் துரோகியாக அடையாளப்படுத்தி தூக்கியெறிந்து விட்ட நிலையில் தனது வரலாற்றுத் தவறுகளை சுயவிமர்சனம் செய்து பார்த்து திருந்திக்கொண்டிருக்கலாம்.

ஆனால் அயலார் புத்திகேட்டு இப்படி அலறிக்கொண்டிருக்கவேண்டிய நிலையாகிவிட்டது. பொங்குதமிழ்வேகம் சங்கரதேரரின் அகமுகத்தை முழுமையாகவே அம்பலப்படுத்திவிட்ட நிலையில் இனி என்ன செய்யப்போகிறாராம்?

பேசாமல் ஹெலஉறுமயவுடன் இணைந்து அவர்களுக்கு 'ஜால்ரா' போட்டாலாவது ஏதாவது பயன் இருக்கும்.... அல்லது அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு அஞ்ஞாத வாசமாவது போகலாம்... ஆனால் கெடுபுத்தி சொற்கேளாதே! ஆனந்த மாக இருக்கவேண்டியார் அயலார் அடிபணிந்து சங்கரா என்று சொல்லி அரசியல் சன்னியாசம் கொள்ள வேண்டியதாயிற்று.

---

# சமாதான காலத்தில் புதிய கோயபல்ஸ்



தனது இராணுவ ரீதியிலான யுத்தம் தோற்கடிக்கப்பட்டு , ராஜதந்திர ரீதியிலான யுத்தம் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் இப்போது மீண்டும் பிரசார யுத்தத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ள அரசை தன் வழியிலேயே சந்திக்க விடுதலைப்புலிகள் தயாராகிவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

முறியடிப்பு பிரசார யுத்தம் இன்று தமிழர் தரப்பிற்கு தவிர்க்க முடியாத அவசியமாகியும் விட்டது.

தமிழர்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பிரசாரங்களை மேற்கொள்வதென்பது ஒன்றும் புதியவிடயமல்ல... தேசியபந்தோபஸ்து அமைச்சராக லலித்அத்துலத் முதலி பதவியேற்ற காலம் முதல் தீவிரமான தமிழின எதிர்ப்புப் பிரசார நடவடிக்கையானது ஆட்சிபீடம் மாறமாற மூர்க்கம் கொண்டு வந்ததேயன்றி குறைந்தது கிடையாது.

சிறிலங்கா அரசு தனது பிரசார நடவடிக்கைகள் மூலம் தனது மக்களை ஏமாற்றவும், சர்வதேசத்தைப் பேய்க்காட்டவும் வேண்டிய அவசியம் போர்நடவடிக்கைகள் தீவிரம்கொள்ளக் கொள்ள அதிகரித்துக்கொண்டே வந்தது என்றால் அது மிகையில்லை.

கிட்லர் ஆட்சியில் பொய்ப்பிரசாரத்திற்கென கோயபல்ஸ் என்ற உலக மகா பொய்யரை அவர் பணியில் அமர்த்தியிருந்தார். அவர் கிட்லர் தோல்வியடைந்த களங்களையும் மகா வெற்றியென நாக்கூசாது பிரசாரம் செய்து உலகைக் குழப்பவைத்த சாதனை (?!)யாளர்.

ஆனால், சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் அவ்வப்போது லலித் அத்துலத்முதலி ,ரஞ்சன் விஜேரத்னா, சரத் முனசிங்க, ஜி.எல்.பீரிஸ்,லக்ஷ்மன் கதிர்காமர், அநுருத்த ரத்வத்தை என எத்தனையோ கோயபல்ஸ்களை உருவாக்கிய சாதனையாளர்களாக தம்மை இனங்காட்டியுள்ள போதும், இந்த உள்ளூர் கோயபல்ஸ்களின் பொய்கள் சிலமணி நேரத்துள்ளேயே வெட்ட வெளிச்சமாகி அரசுகள் அவமானப்பட்டதுதான் மிச்சம்.

ஆனையிறவின் வீழ்ச்சியுடன் சிறிலங்கா கோயபல்ஸ் கள் வாயடைத்துப்போக... உலகம் அவர்களை ஏளனமாகப் பார்க்கத் தொடங்கியது வேறுகதையாகும்.

இப்போது- கடந்த இரண்டாண்டு சமாதானச் சூழல் கோயப்பல்ஸ்களின் தேவையைக் குறைத்த போதிலும் தற்போது புதிய அரசில் மீண்டும் அவர்களின் தேவை ஆரம்பமாகியுள்ளது... சனாதிபதியே அண்மையில் தன்னை ஒரு பெண் கோயபல்ஸ்ஸாக இனங்காட்டத் தொடங்கியுள்ளார் என்றார் அதில் மிகையில்லை.

அவர் அண்மைக்கால ஐரோப்பிய -ஐ.நா விஜயங்கள் அவர் தனது பொய்ப்பிரசார நடவடிக்கைகளுக்கான பொறுப்பினை தானே எடுத்துச்செயற்பட ஆரம்பித்துள்ளமைக்கு சிறந்த உதாரணமாகும்....!

அம்மணி...'உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்'என்ற பழமொழிகள் உங்கள் பொய் மொழிகளை கேட்கும் போது நினைவுக்கு வருகிறது.

---

# மனித உரிமைகள் மதிக்கப்படும் பாங்கு



அப்பாடா! இனிமேலாவது மனித உரிமை அமைப்புகளுக்கும் ங்கு பணி புரியும் அதிகாரிகளுக்கும் இலங்கையில் எவ்வா மனித உரிமைகள் பேணப்படுகின்றன, மதிக்கப்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

அத்தகையதொரு அருமையான வாய்ப்பினை அவர்களுக்கு அளித்துள்ள யாழ் பொலிஸ் நிலையத்திற்கு நன்றி கூறியே ஆகவேண்டும்.

மனித உரிமைகள் அமைப்பின் அதிகாரிகளை யாழ் பொலிசார். அடித்து விரட்டிய சம்பவம் பற்றித்தான் சொல்கிறேன்.

யாழ்பொலிசாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரின் நலன் குறித்து விசாரணை செய்யச்சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் அதிகாரிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் யாழ் பொலிஸ் நிலையத்தில் வைத்தே பொலிசாரால் தாக்கப்பட்டு விரட்டப்பட்டுள்ளனர்.

இதனை ஒரு சாதாரண் நிகழ்வாக்கி மூடி மறைக்கவோ அல்லது அப்படியெதுவும் பாரதூரமாக நடக்கவில்லை என்று காட்டவோ அதிகாரவர்க்கத்தினருக்கிடையில் சமரசம் ஏற்படுத்தும் நகர்வுகளும் நடக்கக்கூடும்.

எனினும் உண்மை உண்மையாகத் தான் இருக்கும்.

ஊடகங்கள் அதனை வெளிப்படுத்திவிட்டன. சம்பந்தப்பட்ட பொலிஸர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் ( தண்டனை இடமாற்றம் என்று சாக்குச்சொல்லி) பிரச்சினையை சுலபமாக முடிக்கும் வழமையான நகர்வுகள் மேற்கொள்ளவும் இடமுண்டு...

ஆனால் மனித உரிமை அதிகாரிகள் பொலிஸ் நிலையத்தில் பொலிசாரால் தாக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை மூடி மறைக்கமுடியாது.

மனித உரிமை அதிகாரிகளுக்கே இந்த நிலையென்றால் சாதாரண அப்பாவி மனிதர்களுக்கு என்ன நடக்கும் என்று அதே அதிகாரிகள் மனித உணர்வுடன் நியாயமாகச் சிந்திப்பார்களேயானால்... சிறிலங்காவில் பௌத்ததர்மம் பேணப்படுவதாகக்கூறப்படும் நாட்டில் இதுவரை காலமும் மனித உரிமைகள் எந்த வகையில் மதிக்கப்பட்டுவந்துள்ளன என்பதை சுலபமாகப் புரிந்து கொள்ளமுடியும்.

கைதாகி காணாமல் போனோர் விவகாரம்
சிறைச்சாலை மனித உரிமை மீறல் செயற்பாடுகள். செம்மணிப்புதைகுழி விவகாரம்,
விசாரணைகளும் விடுதலையுமற்ற கைதிகளின் துயரம்..
என நீளும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளின் சூத்திரதாரிகள் அத்தகைய வெறிபிடித்த ஆயுதப்படை பொலிஸ் படை போன்றவற்றின் உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் தான் என்பதை இந்த அடி மூலமாவது தேசிய சர்வதேசிய மனித உரிமை அமைப்புகளும் அதன் உத்தியோகத்தர்களான அதிகாரிகளும் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

சிறிலங்காவில் அதிகார வர்க்கம் அப்பாவி மக்களின் மனித உரிமைகளை எவ்வாறு நிராகரித்து மறுத்து வந்துள்ளது என்பதற்கும் அதனை வலியுறுத்தி கேட்பவர்க்கு என்ன நடக்கும் என்பதற்கும் 'இந்த அடி' ச்சம்பவம் ஒரு சான்று.... மனித உரிமையாளர்களும், அமைப்புகளும் இதனை கவனத்தில் எடுப்பது மிக அவசியமாகும்.

*செங்குட்டுவன்*

# பெண் உளவாளிகளும் உளவுப்பணிகளும்



***இளமையைப் பலியிட்ட மூன்று இளங்கன்னிகளின் பாலியல் இன்பத்தை நுகர்ந்தும் பாலியல் இன்பத்தில் திளைத்தும் ஒய்யாரமாக வாழ்ந்த அரச உயர்மட்டத்தினர்களால் அந்நாடுகளின் ஸ்திரத்தன்மை சீர்குலைந்து போயின. அவர்கள் 'காதல் லீலைகளுக்கு இணையாக உலகில் வேறு ஒன்றுமில்லை' என்கிற பாலியல் மயக்கத்தால் தங்களது நாட்டினது தேசிய நலன்களை பலிகொடுத்தார்கள்.***

***அந்த அபலைப் பெண்களின் பின்னே இருந்த வேதனை அவமான வலியென ஏகப்பட்ட துன்பங்கள் இருந்தன. இத் துன்பங்களைச் சுமந்த பெண்களை பன்னாட்டு உளவு நிறுவனங்கள் பயன்படுத்திவிடுவது போன்றே சிங்கள உளவு நிறுவனமும் பெண்களை உளவுப்பணிக்காக களத்தில் இறக்கியுள்ளது.***

உலகில் ஆண்டாண்டு காலமாக் நாடுகளது அரசியல் மையங்களுள் ஆழமாக ஊடுருவி அரசியல் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் சூழ்ச்சிகரமான உளவுப்பணிகளில் பெண்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இதற்கப்பாலும் தமது தாய்நாட்டையும் அதன் சுதந்திரத்தையும் பாதுகாத்துக்கொள்வதற்காக மேன்மையான உளவுப்பணிகளையும் செய்கின்றார்கள்.

வெளிநாடுகளில் உளவுப்பணிகளை வெற்றி கரமாக முன்னெடுக்க தம் அழகுக் கவர்ச்சி யைக் காட்டியும் அறிவைப் பிரயோ கித்தும் அரச உயர் மட்டத்தினரை தம்வசப்படுத்திக் கொள்கின்றனர்.

அவர்களின் அழகுக் கவர்ச்சியால் செல்வாக்குமிக்க பல காதலர்கள் அவர்களுக்கு கிடைக்கின்றார்கள்.

அக்காதலர்களை நாட்டுக்குத்துரோகம் செய்யத் தூண்டி அவர் களிடமிருந்து மிகமுதன்மையான உளவுத்தகவல்களை கறந்தெடுப்பதில் மிகத் தேர்ச்சியுள்ளவர்களாக பெண் உளவாளிகள் இயங்குகின்றனர்.

உளவு நிறுவனங்களால் தீமானிக்கப்பட்டு இலக்குவைக்கின்ற மையங்களுள் சுலபமாக ஊடுருவுவதில் பெண் உளவாளிகள் சாதுரியமானவர்கள். அவர்களின் ஊடுருவலால் தாராளமான பெறுபேறுகளை உளவு நிறுவனங்கள் பெறுகின்றன.

பெண் சமுதாயத்தினுள் உள அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களும் நிதிவள அடித்தளத்தினைக் கொண்டிராதவர்களும் இருக்கின்றனர்.

அவர்களில் சிலர் சமூக பண்பாட்டு ஒழுங்கு வரம்பு எல்லையைத் தாண்டி பணத்தாசைக்காகவும், சுயநலத்தேவைக்காகவும், பொதுநல நோக்கங்களுக்காகவும். பாலியல் இன்பத்தை உளவுப்பணிக்காக வழங்குகின்றார்கள்.

இளமைக்கனவுகளைச் சுமந்த இவர்கள் தினம்தினம் பால் கவர்ச்சிக்குள் சிக்கி காமலீலைகளில் ஈடுபடுகின்றனர்.

இப்படி வாழ்க்கை வாழ்ந்து உளவு நிறுவனங்களின் செயல் வீரியத்தை வலுவூட்டி உளவுச்சாதனைகளை நிகழ்த்திய மூன்று பெண் உளவாளிகள் பற்றி உளவு வரலாற்று நோக்கில் இங்கு அலசுவோம்.

உளவுவலைக்குள் வீழ்த்தி திறமைமிக்க உளவுப்பணியை செய்த சிந்தியாவை முதலாவது எடுத்துக்காட்டாக பார்ப்போம்.

சிந்தியா தன் அழகுக் கவர்ச்சியால் எவரையும் கவர்ந்திழுக்கும் பாலியல் மையமாக மட்டும் இருக்கவில்லை. அவள் அறிவுபூர்வமான, துடிதுடிப்பான பெண்ணாகவும் இருந்தாள்.

அவள் அமெரிக்க பெண்ணாக இருந்த போதிலும் பிரித்தானிய அரசியல்வாதியின் மனைவியானாள். அந்த அரச அங்கீகாரம் அவளுக்கு பல நாடுகளில் சுதந்திரமாக சுற்றித்திரிய வாய்ப்பளித்தது.

அவள் பிரித்தானிய உளவுத்துறையில் இணைந்து உளவுப் பணியில் முழுமூச்சாக செயற்படத் தொடங்கினாள். அவள் தன் காதல் வலைக்குள் போலந்துநாட்டு உயர் அதிகாரியொருவரை வீழ்த்தினாள்.

போலந்து அதிகாரி தனக்கு அழகியொருத்தியின் பாலியல் இன்பம் கிடைத்தது உண்மையில் தான் கொடுத்து வைத்தவன் என்கிற இன்ப மகிழ்ச்சியில் மூழ்கினார். அவளோ தன் உளவுப்பணிக்காக தகவல் வளமுள்ள ஒருவர் கிடைத்தது, தான் அதிஷ்டசாலி என்கிற மன எழுச்சியில் மகிழும் வண்ணம் கலந்தாள்.

அவள் அவ்வதிகாரியிடமிருந்து ஜேர்மன் நாட்டினது இரகசியமான, பெறுமதி வாய்ந்த தகவல்களை கறந்தெடுத்து பிரித்தானிய உளவுத்துறையினருக்கு கொடுத்தாள்.

சிந்தியா பிரித்தானியாவிற்காக உளவுப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்த பிற்பாடு அமெரிக்கா விற்காக பணியாற்ற அமெரிக்க தலைநகருக்கு வந்து சேர்ந்தாள்.

அமெரிக்க தலைநகர் விடுதியொன்றில் நடைபெறும் மதுபானக் கேளிக்கை விருந்துகளில் கலந்துகொள்ளும் அரசியல் உயர் மட்டத்தினருடன் அவளுக்கு மிக நெருக்கமான உறவு உருவாகியது.

உயர்மட்டத்தினருள் இத்தாலி கடற்படை அதிகாரி வைஸ்சும் ஒருவராக இருந்ததனால் அவர் சிந்தியா மீது காதல் கொண்டு காதல் மயக்கத்திலே திளைத்தார்.

சிந்தியாவின் காமக்களியாட்டத்தில் வீழ்ந்த வைஸ் பித்துப் பிடித்தவனைப் போல் சிந்தியாவிற்காக எதனையும் செய்யத்தயாராக இருந்தார்.

பாலியல் இன்பவெறியில் மூழ்கி இருக்கும் “வைஸ்” இற்கு அவள்தான் அமெரிக்காவிற்கு உளவாளியாக பணிபுரிவதாகச் சொல்லி இத்தாலி கடற்படை தொடர்பான தகவல்களை தரும்படி மலர்ந்த முகத்தில் உண்டாகும் புன்சிரிப்போடு கேட்டாள்.

அவர் அவளுடன் ஒய்யாரமாக இருக்கும்போது அவள் கேட்ட தகவல்களை கூற அவர் மறுத்ததால் அங்கு ஊடலே உண்டாகியது. ஊடலின் பின் இரக்கம் பிறப்பது போல், இத்தாலி கடற்படையின் சங்கேத மொழிபற்றிய அனைத்தினையும் அவர் சிந்தியாவின் உளவிற்கு கொடையாக வழங்கினார்.

—— நீலன் ——

சிந்தியா வழங்கிய சங்கேத மொழியை பயன்படுத்தி இரண்டாம் உலகயுத்தத்தின் போக்கை மாற்ற அமெரிக்க உளவுத்துறையினர் பங்களித்தனர்.

சிந்தியாவின் உளவுப் பணியை ஒத்த இன்னுமொரு பெண் உளவாளியான பண்டாவை நோக்குவோம்.

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானியர்கள் இந்தோனேசியாவிலுள்ள சில தீவுகளை ஆக்கிரமித்திருந்தார்கள்.

ஜப்பானியர்களின் இரும்புப் பிடிக்குள் இந்தோனேசிய மக்கள் சிக்கித்தவித்தார்கள். அவர்களின் வன்முறைக் கொடூரம் எல்லைக்கப்பால் போனதால் இந்தோனேசிய மக்கள் பயந்து ஒடுங்கி வாழ்ந்தார்கள்.

இம்மக்களுக்குள் “பண்டா” தனது வீட்டில் பாடசாலை ஒன்றை நடாத்தி வரும் ஆசிரியையாக வாழ்ந்தாள்.

பண்டா தனது பாடசாலை மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் சமயங்களில் ஜப்பானியர்களுக்கு எதிராக கிளர்ந்தெழக்கூடிய கருத்தூட்டல்களை ஊட்டினாள். அதாவது இன்று நசுக்கப்படுபவர்கள் ஒரு நாள் கிளர்ந்தெழுந்து தங்களை இன்று நசுக்குபவர்களை நசுக்கி ஒடுக்குவார்கள் என்கிற கருத்துக்களாக அவைகள் வெளிப்பட்டன. இதை ஜப்பானியர்கள் அறிந்ததும் அவளது பாடசாலையை மூடிவிடும்படி அச்சுறுத்தினார்கள்.

அவள் தனது பாடசாலையை மூடியதனால் ஏற்பட்ட துயரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவளின் வாழ்க்கை விரக்தியின் விளிம்பில் இருக்கும்போதுதான் அவளின் தாய்மாமனார் ஒரு நாள் அவளின் வீட்டிற்கு வந்தார்.

அவரின் வருகை ஜப்பானியர்களுக்கான உளவு உதவியை அவளிடம் பெற்றுக்கொள்வதாகவே இருந்தது. அவளும் அதற்கு சம்மதம் தெரிவித்ததனால் ஆடம்பர கேளிக்கை விருந்துகளை நடாத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஆடம்பர கேளிக்கை விருந்துகளில் கலந்துகொள்ளும் உயர் சமூகத்தை சேர்ந்தவர்கள் பலரினது உறவு அதிகரித்தது. அவளது அழகிலும், வசீகரிக்கும் உரையாடல் கலையிலும் அவர்கள் அவள் மீது பிரியமாக இருந்தார்கள்.

ஜப்பானியர்கள் தங்களுக்கு எதிராக இந்தோனேசிய மக்கள் கிளர்ந்தெழாவண்ணம் இருக்க அந்நாட்டு மக்களைக் கொண்ட ஊர்காவற்படையொன்றை உருவாக்கினார்கள். ஊர்காவல் படையில் இணைந்த இந்தோனேசியர்களுக்குள் “அப்துல்” ஜப்பானியர்களுக்கு எதிராக போராடும் இலட்சியத்தோடு மறைமுகமாக இயங்க ஆரம்பித்தார்.

அப்துல் தனது மறைமுக பணிகளுக்கு பண்டாவையும் இணைத்துக்கொண்டார். அவள் அப்துலுக்கு முழுமனதுடன் உளவு உதவி செய்யும் ஒரு இரட்டை முகவராக பணிபுரியத் தொடங்கினாள்.

ஒருபுறம் ஜப்பானியர்களுக்கு பெறுமதி குறைந்த தகவல்களைப் பரிமாறியும் மறுபுறம் அப்துலுக்கு பெறுமதி வாய்ந்த தகவல்களைக் கொடுத்தும் வந்தாள். பண்டாவின் உளவுப்பணித்திறன் இந்தோனேசியர்களின் சுதந்திரப்போர் வெற்றிகரமாக நகரபெரும்பங்காற்றியுள்ளது.

ஜேர்மனிக்காக உளவுப் பணியில் ஈடுபட்ட மேலுமொரு பெண் உளவாளியான “மாற்றாஹரியை” பற்றிப் பார்ப்போம்.

அவள் திருமணம் முடித்த கணவன் ஒரு சூதாட்டக்காரன். அவனால் ஏற்பட்ட கடன் சுமையினால் அவள் அவல வாழ்வினுள் தள்ளப்பட்டாள். இவ்வாழ்வை அவள் கொஞ்சம் கூட நினைத்திருக்கவில்லை.

அவள் பெரும் செல்வந்தர் ஒருவரின் ஆசைநாயகியாக மாறி செல்வச் செழிப்புள்ள பெண்ணாக வாழும் சூழல் அவளுக்கு உருவாகியது. காலநகர்வில் அவள் பாலியல் கவர்ச்சிநடனங்களை சில நாடுகளின் நகரங்களில் அரங்கேற்றினாள். அதே காலப்பகுதியில் தான் அவள் ஜேர்மன் உளவுத்துறையினருக்கு உளவுப்பணி செய்ய ஆரம்பித்தாள்.

அவளுக்கு பாரிஸ் நகரப் பெரும் புள்ளிகளிடம் மிகுந்த செல்வாக்கு இருந்தது. அதாவது உயர் அதிகாரிகள் பலரின் காமநோயைத் தீர்க்கும் பருவமும், எழிலும் பொருந்திய ஆசை நாயகியானாள்.

அவர்கள் அவளிடம் பாலியல் இன்பத்தை நுகர அவள் அவர்களிடம் இராணுவத் தகவல்களை கறந்தெடுத்து ஜேர்மன் உளவுத் துறையினருக்கு அனுப்பி வைத்தாள்.

அவள் அவர்களுக்கு பாலியல் மகிழ்ச்சியையூட்டி, மனக் கிளர்ச்சியை ஏற்படுத்தி அவர்கள் முணுமுணுக்கும் பெறுமதிமிக்க தகவல்களை ஜேர்மனியர்களுக்குக் கொடுத்தாள்.அவள் அனுப்பிய தகவல்களுக்காக ஜேர்மன் உளவுத் துறையினரால் 40,000 மார்க்குகள் அவளுக்கு கொடுக்கப்பட்டது.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 01. 10 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# பொருத்தமற்றவர்கள்...!

புலிகள் இயக்கத்தினால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவு ஆலோசனைக்கு எதிரான இனவாதிகளின் தொடர் நடவடிக்கையின் அடுத்த கட்டமாக தென்னிலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு எதிரான இருவேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வுள்ளன.

ஒன்று-எதிர்வரும் ஆறாம் திகதி அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பிக்குமார் ஒன்றியத்தின் ஆதரவில் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து களனி பல்கலைக்கழகம் வரை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைவு ஆலோசனையை எதிர்த்து பாதயாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளமை.

இரண்டு- இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடுவதை நோர்வே முற்றாகத் தவிர்த்துக் கொண்டு வெளியேற வேண்டும் என்பதோடு, சமாதான பேச்சுவார்த்தைகளில் நோர்வே அனுசரணையாளர்களாகச் செயற்படுவதற்கான எதிர்ப்பை தெளிவுபடுத்தும் வகையில் ஐந்து மில்லியன் கையெழுத்துக்களைப் பெறுவதென ஹெல உறுமய தீர்மானித்திருக்கின்றமை.

இந்த இரண்டு நடவடிக்கைகளையும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கான ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக மட்டும் கருதாது பேச்சு மூலமான தீர்வுக்கான எதிர்ப்பு நடவடிக்கையாகவும் இதனை நோக்க வேண்டும்.

ஏனெனில் அரசு- புலிகளுக்கிடையில யுத்தம் நடைபெற்ற போது இரண்டு தரப்புமே உயிர் மற்றும் உடமை ரீதியாக பெரும் அழிவுகளை சந்தித்த போது யுத்தத்தை நிறுத்துமாறு கோரி இத்தகைய பெருமெடுப்பிலான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். அவ்வாறாயின் இந்த பௌத்த பிக்குகள் இலங்கையில் ஒரு யுத்தம் நீடிக்க வேண்டுமென்பதையே விரும்புகிறார்கள்.

உலகின் உயரிய தத்துவக் கோட்பாடுகளில் அன்பையும், கருணையையும் வலியுறுத்துகின்ற மதத்தைத் தழுவுகின்ற இந்தப் பிக்குமார் இலங்கைத்தீவில் வாழும் ஒட்டுமொத்த மக்களின்சுபீட்சமான வாழ்வுக்கான ஒரு நடவடிக்கையாக முன்னெடுக்கப்படும் இந்தச் சமாதான முயற்சியினை எதிர்ப்பதானது இலங்கைக்குக் கிடைத்த ஒரு சாபக்கேடேயாகும்.

இந்த நிலையில் நாள் தோறும் அதிகரித்துச் செல்கின்ற மக்களின் வாழ்க்கைச் செலவு தொடர்பாக எந்த அக்கறையையும் கொள்ளாது சமாதான விரோதப் போக்கை வெளிப்படுத்துவதிலேயே முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் பட்சத்திலேயே நாடு பொருளாதார ரீதியாகச் சந்தித்துவரும் பெரும் நெருக்கடிகளைத்தீர்க்க முடியுமென்பதையோ, மக்கள் இதன் மூலமே சாதாரண வாழ்க்கையை வாழ முடியும் என்பதையோ சந்தித்துத்தானும் சிந்தியாத இந்தத் துறவிகள் இலங்கையில் பௌத்த மதத்தை தழுவியுள்ள சிங்கள மக்களுக்கு எதனைத்தான் போதிக்கப்போகிறார்கள்?

தத்துவங்களும், மதங்களும், மக்களின் வாழ்க்கைக்கே வழிகாட்ட வேண்டிய நிலையில் அந்தத் தத்துவங்களையும் மதங்களையும், பிரதிநிதித்துவப்படுத்து கின்ற இந்தத் துறவிகள் மக்களின் அழிவுக்கு காரணமாக இருப்பது பெரும் வேதனைக்குரியதே.

இந்த நிலையில் தென்னிலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும், அதனை முன்னெடுக்கின்ற நோர்வேக்கு எதிராகவும் நடத்தப்படுகின்ற போராட்டங்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்கு சிங்கள அரசபீடத்திலிருந்து எத்தகைய தீர்வையும் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப் போவதில்லை என்பதையே தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் உணர்த்துகின்றது.

# உலக முன்றலில் பொங்கி எழுந்த தமிழர்



அமெரிக்க, இந்திய அதிகாரிகளால் தமிழினத்தைப் பணியவைக்கமுடியுமா? சந்திரிகா நாடு திரும்பிவிட்டார். சமாதானப் பேச்சுக்கள் விரைவில் தொடங்கும். செப்டெம்பரில் பேச்சுவார்த்தைக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்பன போன்ற செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தன. ஆனால் நடந்ததுதான் என்ன? சந்திரிகா தனது வெளிநாட்டுப்பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய பின்னர் அவர் ஆற்றிய உரை கூர்ந்து கவனிக்கத்தக்கது. தமிழ்மக்களை ஓர் ஆயுதக்குழு அடக்கி வைத்திருக்கின்றது. அக்குழுவினர் கைகளிலே எறிகுண்டுகளை வைத்துள்ளார்கள் பயங்கர ஆயுதங்களை வைத்திருக்கின்றார்கள். இவ்வாறு வைத்துக்கொண்டு வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களை அடக்கி வைத்திருக்கிறார்கள். இவர்களிடமிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க வேண்டும். பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்த அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரவேண்டும். இதர கட்சிகளை அழைத்துப் பேசி அதனடிப்படையில் புலிகளுடன் சமாதானப் பேச்சுத்தொடங்கும் என்று காலிநகரில் நடந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 53ஆவது ஆண்டு மாநாட்டில் சந்திரிகா பேசியுள்ளார். பின்னர் மகியங்கணையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய சந்திரிகா புலிகள் பேச்சுவார்த்தைக்கு ... கிறார்களில்லை அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

*புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறல்ல*

சந்திரிகாவின் சூழ்ச்சியால் தடுமாறும் அமெரிக்க இந்திய அதிகாரிகளால் தமிழினத்தை பணியவைக்க முடியுமா? தான் பதவிக்கு வந்தால் சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்று கூறி பதவிக்கு வந்தவர் சந்திரிகா.

ஆனால் பதவியை அடைந்தபின்னர் அவர்தனது முகமூடியைக் கழற்றி எறிந்துவிட்டு பௌத்த சிங்கள அரசின் காவல் தெய்வமாக தனது உண்மையான தோற்றத்தைக் காட்டி நின்றார். சமாதானம் பேசியவர் தமிழ்மக்களைப் புலிகளிடமிருந்து மீட்கப்போவதாக அறிவித்தார். பதவி ஏற்றநாளிலிருந்து தமிழ்மக்களைப்புலிகளிடமிருந்து மீட்கப்போராடிய சந்திரிகா தனது இரண்டாவது பதவிக்காலம் முடியப்போகும் காலத்திலும் கூட அந்தப் பழைய பல்லவியை மீண்டும், மீண்டும் பாடிக்கொண்டிருக்கிறார். இவ்வாறு இவர் கூறிவருவதிலிருந்து இவர் சமாதானத்தின் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களைப் புலிகள் ஆயுதங்களைக்காட்டி அடக்கி வைத்திருக்கிறார்களா? 1987ஆம் ஆண்டு ரஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் பின்னர் சுதுமலையில் தமிழீழத் தேசியத் தலைவர் என்னசொல்லப் போகின்றார் எனக்கேட்பதற்காகத் திரண்ட மக்கள் வெள்ளம் ஆயுதக்குழுவின் அடக்கு முறைக்குப் பயந்தா திரண்டது? 1987 செப்டெம்பரில் ரஜீப் -ஜெயவர்த்தனாவின் ஒப்பந்தம் தமிழ்மக்களுக்கு நன்மைதரவில்லை என்பதை உலகுக்குக்காட்ட தியாகதீபம் திலீபனின் உண்ணா நோன்பில் கலந்தமக்களின் உணர்வலைகள் ஆயுதத்தால் ஏற்பட்டதா? இளம் புலிவீரர் வேண்டவும் இந்த உண்ணாநோன்பு ஆயுதப் போராட்டம்தான் வேண்டும் என்று அந்த மேடையிலே மக்கள் ஆற்றிய உரை ஆயுதத்தால் அடக்கப்பட்ட மக்களினுடையதா? இவ்வாறு இந்த மேடையிலே நீங்கள் பேசவேண்டாம், எமது போராட்டம் அதாவது சாகும் வரையான உண்ணாநோன்பு தொடரும் என்று திலீபன் ஆற்றிய உரையைக் கேட்ட மக்கள் அதற்குக்கட்டுப்பட்டது ஆயுத ஆக்கிரமிப்பிலானதா? இவ்வாறு எங்கும் மக்களே புலிகள் புலிகளே மக்கள் என்றிருந்ததை மறைக்கமுடியுமா? சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் யாழ்ப்பாண மண்ணிற்குப் புலிகள், வருகின்றார்கள் என்றவுடன் திரண்டமக்கள் கூட்டத்தை என்னவென்று கூறுவது. தங்கள் பிள்ளைகள் தங்களிடம் இருந்து பிரிந்திருந்த செல்லப் பிள்ளைகள் வருகிறார்கள் என்று முகமாலையிலிருந்து நல்லூர் வரை திரண்டமக்கள்கொண்ட எழுச்சி புலிகள்வேறு மக்கள் வேறு என்று காட்டிடவா திரண்டது. தங்களின் சொந்தப்பிள் ளைகளையல்லவா வரவேற்கத் திரண்டது போல் யாழ்ப்பாண மாவட்டமே எழுச்சிபெற்றிருந்தது. அரச இராணுவத்தின் அச்சுறுத் தல்களுக்கு மத்தியில் பொங்குதமிழ் நிகழ்வுகளை நடத்தித் தனது அடிப்படை இலட்சியத்தை உலகுக்கு பறைசாற்றும் தமிழினத்தைப் பார்த்து புலிகளால் அடக்கப்பட்ட இனத்தை மீட்கப் புறப்பட்டதாகப் பத்து ஆண்டுகளாக பிதற்றும் சந்திரிகாவின் பிதற்றலை 1995 அக்டோபரில் சிங்கள இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தபோது தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக புலிகளுடன் சென்றமையை எவ்வாறு கூறுவது. ஆயுத ஆக்கிர மிப்பு என்று கூறமுடியுமா? 2004 நடைபெற்ற தேர்தலில் இடைக்கால தன்னாட்சி வழங்கி புலிகளுடன் பேசவேண்டும் என்று தீர்ப்பளித்தார்களே தமிழ்மக்கள். இதுவும் ஆயுதஅடக்குமுறையால் நடந்ததா? எவராவது ஏற்றுக் கொள்வார்களா?

இவ்விடத்தில் நாம் இன்னொரு விடயத்தையும் எடுத்து நோக்கவேண்டும் இவ்வாரம் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் சில தேச விரோத இனவாத சக்திகளின் எதிர்ப்புக் குரலின் மத்தியிலும் அலையென எழுந்த உலகத் தமிழர்களின் உள்ளக் குமுறல்கள் சொல்லும் செய்தியை சர்வதேசம் நன்றாக புரிந்திருக்கும். "தமிழர்களோ புலிகள் புலிகளே தமிழர்" என ஓங்கி ஒலித்த ஒற்றுமைக்குரல் தேச விரோத இனவாத சக்திகளின் தலையில் சம்மட்டியால் அடித்ததற்கு சமமான குரல் என்றே சொல்லவேண்டும். அத்துடன் உலகமுன்றலில் பொங்கி எழுந்த தமிழர்களின் அலை சர்வதேச நாடுகளின் புலிகள் மீதான ஒருபுதிய பார்வைக்கு வழி வகுத்திருக்கும் என்பதும் உண்மையே.

-சிலம்பு-



# இல்லாத இடத்தில் தேடுவோர்!



பு.சத்தியமூர்த்தி

எதிர்பார்த்தபடியே காரியங்கள் நடந்தேறுகின்றன எரிபொருட்களுக்கு விலைகள் அதிகரிக்கப்பட்டுவிட்டன. அத்தி யாவசியப் பொருட்களுக்கான விலை அதிகரிப்பு தடுக்கப்படவோ, குறைக்கப்படவோ எதுவித காரிய சாத்தியமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மறுவளமாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் டீசல் மானியம் வழங்குமாறும் அல்லது கட்டண அதிகரிப்புக்கு அனுமதிக்குமாறும் வலியுறுத்தியுள்ளதுடன் 27ஆம் திகதிக்குள் இதற்கான பதில் கிடைக்காவிடில் 28ஆம் திகதி நள்ளிரவுமுதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவ தாகவும் எச்சரித்துள்ளது, எதிர்க்கட்சியோ தன் பங்குக்கு, விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும் தவறினால் அதிகாரபீடங்கள் சுற்றிவளைக்கப்படுமென்றும் அறிவித்துள்ளது.

ஆக, எல்லாமே கடந்தவாரம் இதேபத்தியில் நாங்கள் பேசிக்கொண்டது போலவே அனைத்தும் நடந்தேறியுள்ளன. எரிபொருட்களுக்கான விலைகள் பிரதேச ரீதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்துக்கு ஏனைய பகுதிகளைவிட 2 ரூபாவால் அதிக அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் டீசலுக்கு 8ரூபாவும் பெற்றோலுக்கு 4ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மாறாக அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பைத்தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பிரதமர் மகிந்தராஜபக்ஷ ஒரு திட்டத்தை அமைச்சரவைக்கு முன்வைத்துள்ளார். அத்தியாவசியப் பொருட்களான அரிசி,சீனி,பருப்பு போன்ற வற்றுக்கான வற்(பெறுமதி சேர் வரி)வரியினை நீக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இதன்மூலம் மக்களின் அன்றாட நுகர்வுப் பொருட்களான இவற்றின் விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கமுடியும் என்பது மஹிந்தராஜபக்ஷவின் எதிர்பார்ப்பு.

உண்மைதான் ஏனெனில் ஒரு கிலோ அரிசிக்கு 9 ரூபா வற் வரி விதிக்கப்படுகிறது. இது நீக்கப்பட்டால், அரிசியின் விலை 9ரூபாவால் குறையக் கூடும். இவ்வாறே பருப்பு, சீனி ஆகியவற்றுக்கான 15 வீத வற் வரியும் நீக்கப்படுமாயின் நிகழ்வது இதுவாகவே இருக்கும். அப்படிப் பார்க்கும் போது சிறிலங்காப் பிரதமரின் திட்டம் நல்லதாகவே தோன்றுகிறது.

இதன் மறுபக்கம் என்ன? அரசாங்கத்தின் இறை வரி வருமானம் மிகவும் குறைந்துபோக நேரிடும் ஏனெனில் அத்தியாவசியப் பொருட்களின் மீதான வரிவிதிப்பு மூலம் அரசாங்கத்துக்கு மிகவும் விரைவாகவும், இலகுவாகவும்,அதிகளவிலும் வருமானம் வந்துசேரும். இது நீக்கப்படும்போது திறைசேரி மிகவும் பாதிக்கப்படும். ஏற்கனவே திறைசேரி ஒட்டவற்றிக்கிடக்கும் நிலையில் இந்த இழப்பைத்தாங்கிக்கொள்ளும் சூழல் இல்லையென்றே பொருண்மிய அவதானிகள் கருதுகின்றனர். ஆனால் உடனடித் தப்பித்தலுக்காக அரசாங்கங்கள் சில வேளைகளில் இத் திட்டத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்ளவும் கூடும்.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷவின் இத்திட்டத்துள் எரிபொருட்கள் உள்ளடங்கவில்லை, மாறாக அவற்றின் விலைகள் மீண்டும் பெருமளவுக்கு அதிகரித்துவிட்டன, உடனடியாகவே தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கட்டண உயர்வுக்கான அனுமதியைக் கோரிவிட்டது "15 வீத கட்டண அதிகரிப்புக்கு அனுமதி வழங்குங்கள் அல்லது எரிபொருள்(டீசல்) மானியம் வழங்குங்கள் என்று அரசாங்கத்தைக் கழுத்தில் பிடித்துக் கொண்டுவிட்டது. இதற்கு சரியான பதில் கிடையா விட்டால்28 செப் டெம்பர் நள்ளிரவு முதல் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்த நிலையில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்துக்கும் போக்குவரத்துக்கு அமைச்சருக்குமிடையில் நடை பெற்ற சந்திப்பால் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் பேருந்து கட்டணங்களை அதிகரிப்பதில் வெற்றிகண்டு விட்டது.


இதே நேரம் இனி வரும் சிலவாரங்களிலோ சிலமாதங்களிலோ மேலும் எரி பொருட்களுக்கான விலை அதிகரிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக்கோரிக்கைகள் குறித்து பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் பீளக்ஸ் பெரேரா "எரிபொருளுக்கு மானியம் வழங்குவது என்பது சாத்தியமே இல்லை''என்று வெளிப்படையாகவும் உறுதியாகவும் தெரிவித்துவிட்டார். அப்படியாயின் அமைச்சர் சொல்ல வருவது என்ன? கட்டண அதிகரிப்பை மேற்கொள்ளுங்கள் என்று பச்சைக் கொடி காட்டுகிறாரா?

அரச பத்திரிகை களை அண்மைக் காலமாகப் பார்த்து வந்தால் தொழிலதிபர்களும் முதலாளிகளும் வர்த்தகர்களும் தேசிய ரீதியாக நெருக்கடியை ஏற்படுத்தக்கூடாது என்றும் பொருண்மியச் சுமையில் ஒரு பகுதியைத் தாமும் தாங்கிக்கொள்ள வேண்டும் என்ற கோதாவில் எழுதிவருகின்றன. யதார்த்தத்தில் இது சாத்தியமானதல்ல என்பது நாமறிந்ததே. "செட்டி நட்டம் ஊர்மேலே" என்பது பிரசித்தம்.

அப்படியானால் என்னதான் அடுத்ததாக நடைபெறவுள்ளது? எதிர்க்கட்சியின் நடவடிக்கை இதற்கு ஒருவேளை பதிலளிக்கக்கூடும். அவர் ஆக ஒட்டுமொத்தத்தில் மக்கள் மீதான சுமைகள் இன்றும் அதிகரித்ததே கடந்த வாரத்தில் சிறிலங்காவில் ஏற்பட்ட மாற்றமேயன்றி, மக்க ளின் சுமைகளைக் குறைப் பதில் எவ்வித முன்னேற் றங்களும் ஏற்படவில்லை.

எப்படி வரமுடியும்! இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடந்தேடி எங்கெங்கோ அலைபவர் எப்படித் தேடியடையமுடியும் தமக்கான தீர்வினை!



# சந்திரிகாவின் தேவை சர்வசனவாக்கெடுப்பு



இலங்கையில் அரிசி, பாண், பருப்பு என்பன அரசாங்கத்தை நிர்ண யிக்கும் ஒரு முக்கிய காரணியாக அமைந்து வருகின்றது. ஏனெனில் தென்பகுதி மக்களின் உணவுப்பழக் கத்தின்முக்கியமான பொருட்களாக இவை அமைகின்றன. இனவாதம் பேசுவது என்பதும் ஒரு காரணியாக இருப்பினும் இம் மூன்று பொருட்களும அரசியலையே தீமானிப்பவையாகும்.

1970 ஆம் ஆண்டு நடை பெற்றதேர்தலில் தற்போதைய சனா திபதி சந்திரிகா குமாரதுங்கவின் தாயா ரான சிறிமாவோ பண்டார நாயக்க இலவசஅரிசி வழங்குவதாகவும் அதற்காக சந்திரமண்டலத்திலி ருந்தாவது அரிசியைக் கொண்டு வருவேன் என்றும் வாக்குறுதி வழங் கினார். அதனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிபீடம் ஏறினார்.

ஆனால் அவரின் ஆட்சி யில் மக்கள் பாணுக்கு மட்டுமல்ல அனைத்து உணவுப்பொருட்களுக் கும் வரிசையில் நிற்கவேண்டியேற் பட்டது. பொருட்களின் விலை நள் ளிரவு வேளைகளில் திடீர் திடீரென வர்த்தமானிஅறிவித்தல் மூலம் உயர்ந் தது. இதன் விழைவு அவர் 17 வரு டங்கள் ஆட்சியேற முடியாதநிலை ஏற்பட்டது.


அதேவேளை 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் உணவுப் பஞ்சத்தில் அடிபட்டுக் கிடந்த மக்களுக்கு எட்டு இறாத்தல் தானியம்' வழங்குவதாக ஜே.ஆர். ஜெயவர்த்தன வாக்குறுதி வழங்கி னார். இதன் மூலம் அவர் ஐந்தில் நான்கு பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சிபீடமேற முடிந்தது.

பின்னர் திறந்த் பொருளா தாரக் கொள்கை தாராள இறக்குமதி என்பவற்றின் மூலம் பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைத்தனவாயி னும், விலைஉயர்வுகடையில் போய் விசாரிக்கும் போது தான் தெரியு மளவிற்கு இருந்தது.

எனினும் சிறிமாவோ பண்டார நாயக்கவின் 7 வருடகால "வரிசை யுகத்தை" ஞாபகமூட்டியும் சனாதிபதி பதவியின் அதிகாரம் மூலமும் 17 வருடங்கள் ஐ.தே.க. வினால் ஆட்சி புரிய முடிந்தது.

பின்னர் ஐ.தே.க நடத்திய 12 வருடகால யுத்தம் மற்றும் ஊழல் மோசடிகள் என்பன காரணமாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. 3.50சதத்துக்கு பாண் வழங்குவதாக கொடுத்த வாக்குறுதியும் அவரை 52 சதவீத வாக்குகளுடன் சனாதி பதி பதவியில் அமர்த்தியது. ஆனால் அவர் கூறியவாறு 3.50 சதத்துக்கு ஒரு சில மாதங்களுக்கு மட்டுமே பாணை வழங்க முடிந்தது.

கடந்த தேர்தலின் போதும் கூட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விலைவாசி ஏற்றம் குறித்த குற்றச் சாட்டை முன் வைத்தும் அரச ஊழியர் களுக்கு 70 வீத சம்பள உயர்வு வழங்குவ தாகக் கூறியுமே நாடாளுமன்றத் தைக் கைப்பற்றினார்.



ஆனால் அவரது கூட்டு முன்னணி ஆட்சியேற்று முதல் எதிர்கொண்ட நெருக்கடி மாவின் விலை ஏற்றம் குறித்த பிரிமா நிறுவ னத்துடனான முரண்பாடாகும். இது தொடர்பாக வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளேயும் பிரிமா நிறுவனத்தினரும் முரண்பட்டுக் கொண்டனர் எனினும் மாவின் விலை ஏற்றத்தைத் தடுக்க முடியவில்லை.

இப்பொழுது தென் பகுதி யில் மாவுக்குத் தட்டுப்பாடு பாணின் விலை ஏற்றம், தட்டுப்பாடு என்பன நிலவி வருவது ஏழை, நடுத்தர மக்கள் மற்றும் அரச ஊழியர்களுக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும் விடயமாகும். அண்மை யில் அங்கு கத்தியைக் காட்டி பாண் வழிப்பறி செய்யப்பட்ட சம்பவத்தை ஒருசாதாரண விடயமாக எடுத்துவிட முடியாது.

அதேவேளை எரிபொருள் விலை யேற்றம் என்பது இந்த அரசாங்கம் பதவியேற்று ஐந்து மாதங்களுக்குள் 3 தடவைகள் இடம்பெற்றுவிட்டது. இதனால் வாழ்க்கைச் செலவு அதி கரிப்பதை எவராலும் தடுத்துவிட முடி யாது எரிபொருள் விலையேற்றத் தின்பாதிப்பைக் குறைக்கவும் அரசாங்கத்தால் முடியாத நிலையில் நிதி நிலைமை உள்ளது.

அதேவேளை அரிசியை இறக்குமதி செய்தாலும் கூட 35 ரூபாவுக்கு கீழ் விற்பனை செய்ய முடியாதென அரசாங்கமே கூறுகிறது. பருப்பு, பால்மா என்பவற் றின் விலையும் அதிகரிக் கும் போக்கிலேயே சென்றுகொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கட்டுப் படுத்த முடியாததால் வாழ்க்கைச் செலவு அதிக ரிப்பு ஒரு புறமிருக்க அரச ஊழியர்களுக்கு வழங்குவதா கக் கூறப்பட்ட 70 சதவீத சம்பள உயர்வு "விடயம் வெடிக்கத் தயார் நிலையி லிருக்கும் குண்டுக்கு ஒப்பானநிலை யில் உள்ளது.

ஆட்சிபீடம் ஏறியவுடனேயே சம்பள உயர்வு என வாக்குறுதி வழங்கப்பட்ட போதும் அது இப்போது வரவு செலவுத்திட்டம் வரை தள்ளிப்போடப் பட்டுவிட்டது. எனினும் சம்பள உயர்வுகிடைக்கும் ஆனால் 70 வீதம் கிடைப்பது சாத்தியமில்லை என சம்பளமீளாய்வுக் குழுவின் தலைவர் திஸ்ஸ தெய்வேந்திரா இப் பொழுதே அறிவித்துவிட்டார்.

சம்பள உயர்வுக்கு முன் இடைக்கால கொடுப்பனவாக 3000 ரூபா வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் போராட்டம் நடத்து வோம் என அரச ஊழியர்கள் சங்கம் கூறி வருகிறது.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அரசியல் எதிர் காலம் குறித்த கேள்விக்குறியில் இருக்கிறார். இன்னமும் 14 மாதங் களில் அவரது பதவிக்காலம் முடியப் போகிறது. ஏதாவது தில்லு முல்லுச் செய்தாலும் - அதாவது முன் னைய பதவிக்காலத்தின் மீதியைக் காரணம் காட்டி நீடித்துக்கொண்டாலும் அடுத்த சனாதிபதி தேர்தலுக்கு முன் அரசியலமைப்பில் உகந்த மாற்றம் செய்யவேண்டியுள்ளது.



இதற்குப் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை. இதனால் மக்களிடம் சர்வசனவாக்கெடுப்பு என்ற ரீதியிலாவது செல்லவேண்டும். அதற்கு இன்றைய நிதி நிலைமை விலைவாசி ஏற்றம் உகந்ததாக இல்லை என்பதும் வெளிப்படை இதனைச் சீர்செய்ய பாரியளவு நிதி தேவை. இதனைப் பெறும் நோக்கத் துடன் சனாதிபதி சந்திரிகா இனப் பிரச்சினை விவகாரத்தை கையாள முயல்கிறார். பேச்சுவார்த்தையைத் தொடங்காமல் நிதி உதவியைப் பெற்றுக்கொள்ள வியூகம் வகுப் பதே இன்றைய அவரின் தேவையாக உள்ளது.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# அங்கவீனமுற்றோர் கவனிக்கப்படவேண்டும்

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக நாம் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்ட வர்களாகவே உள்ளோம். உறவினர், நண்பர்களின் இறப்புகள் காய முற்றிருத்தல் ஊனமுற்றமை மற்றும் எமது கருத்து சுதந்திரம் பறிக் கப்பட்டமை, சுதந்திரமாக நடமாடும் உரிமை பறிக்கப்பட்டமை, பாதுகாப்பு இன்மை மூலமாகவும் மற்றும் பல் வேறு வகையிலும் நாம் யுத்தத்தின் விளைவுகளுக்கு ஏதோ ஒரு வகை யில் பலியாகியுள்ளோம்.

யுத்தத்தின் மூலம் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் என்பதை விட ஊனமாக்கப்பட்டு அவர்களின் வாழ்வில் போரின் மாறாவடுவை ஏற்படுத்திய செயல் என்பது எந்த காலத்திலும் மாறாத நிலையில் இருந்து வரும். அந்தவகையிலே வவு னியா மாவட்டத்தில் அண்மையில் மேற்கொண்ட புள்ளிவிபரத்தின் அடிப் படையில் 919 பேர் அங்கவீனர்களாக வாழ்ந்து வருகின்றனர் என அரச செயலக புள்ளி விபரம் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த அங்கவீனர்கள் என் பது யுத்தத்தினால் நேரடியாக பாதிக் கப்பட்டும் பிறப்பினால் பாதிக்கப் பட்டும் போசாக்கின்மையால் பாதிக் கப்பட்டும் அங்கவீனர்களாக உள் ளனர்.

சிறிலங்காப்படை ஆக்கிர மிப்பு நடவடிக்கைகளினால் 129 பேர் நேரடியாக யுத்த பாதிப்பிற்கு உள் ளாகி அங்கங்களை இழந்த நிலை யில் போரின் வடுவை சுமந்து வாழ்ந்து வருகின்றனர்.

இவற்றைவிட போரினால் ஏற்பட்ட அனர்த்தங்கள், வெடி பொருட்கள் என்பவற்றின் பாதிப்புக்களால் 305 பேர் பிறப்பின் மூலம் அங்கவீனர்களாக உள்ளனர். இவற்றைவிட அரசின் திட்டமிட்ட மருந்துத்தடைகள் பொருளாதாரத் தடைகள் என்பவற்றின் மூலம் நோய்ப் பாதிப்பிற்குள்ளாகி 232 பேர் அங்க வீனம் உற்றதுடன் ஏனைய விபத்து



கள் என்பவற்றின் மூலம் 253 பேர் அங்கவீனர்களாக உள்ளனர். இவர்க ளில் வவுனியா உதவி அரசாங்க அதிபர் பிரிவில் போரினால் 46 பேரும், பிறப்பினால் 129 பேரும், நோய்க ளால் 97பேரும், விபத்துக்கள் போன்ற காரணங்களினால் 220 பேரும் அங்க வீனர்களாக உள்ளனர்.

வவுனியா வடக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் போர் காரணமாக 65 பேரும், பிறப்பு போன்ற காரணங்களினால் 68 பேரும், நோய்கள் மூலம் 51 பேரும், ஏனைய காரணத்தினால் ஒருவரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவில் போரின் விளை வால் 07 பேரும் பிறப்பினால் 50 பேரும் நோய்களால் 55பேரும் பிறகாரணங்களினால் 21பேரும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் யுத்தம் காரண மாக 11 பேரும், பிறப்பினால் 58 பேரும், நோய்களால் 29 பேரும், வேறுகாரணங்களினால் 11பேரும் என வவுனியா மாவட்ட அரச செய லகத்தின் கீழ் உள்ள நான்கு தமிழ் உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் 919 பேர் அங்கவீனர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு யுத்தம் ஏற் படுத்திய பாதிப்புக்கள் சொல் லில் வடிக்க முடியாதவை. தொடர்ந்து இடம்பெற்ற யுத்தம் மூலம் 65000 இற்கு மேற்பட்ட அப்பாவி பொது மக்கள் கண்ட இடங்களிலும் வைத்து கொலை செய்யப்பட்டனர். பல ஆயிரக் கணக்கில் அங்கவீனர்களாக்கப் பட் டனர். கடந்த 2000 ஆம் ஆண்டு மேற்கொண்ட புள்ளி விபரத்தின் அடிப்படையில் சுமார் 12 லட்சம் பேர் தமது சொந்த வாழ்விடங்களை விட்டு புலம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 66000 பேர் தாய்நாட்டை விட்டு இந்திய அகதி முகாம்களிலும், 40000 பேர் இந்தியாவில் அகதி முகாம்களுக்கு வெளியிலும், 2 லட்சத்துக்கும் அதிகமானோர் மேலைத்தேய நாடுகளிலும், 800000 பேர் தாய்நாட்டில் அகதிகளாகவும் வாழ்ந்து கொண்டு இருப்பதாக சமா தான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட கால புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. ஆனால் இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் இவர் களில் 20 வீதமானோர் கூட சொந்த வாழ்விடங்களில் குடியமரவும் இல்லை.

இராணுவம் நிலை கொண் டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்க ளும் அகற்றப்படவில்லை. இவை ஒருபுறம் இருக்க, வலுவிழந்த வர்களை வாழ வைக்கும் நோக்கில் அரசாங்கமோ அதுசார்ந்த அதி காரிகளோ கவனம் எடுத்துக் கொள் வதில்லை. போரின் விழைவால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்கள் இரா ணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ளவர்கள் தெரு வோரங்களிலும் பொது இடங்களிலும் பராமரிப்புக்கள் இன்றி அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு மாவட் டத்திலும் ஊனமுற்றோர் சார்பான பல அமைப்புக்கள் பெயரளவில் மட்டுமே உள்ளன. அவ்வமைப் புக்கள் ஊனமுற்றோரின் நலன்களை திருப்திகரமாக மேற்கொள்வதில்லை என்றே கூறவேண்டும். வவுனியா மாவட்டத்தில் அங்கவீனர்களை மையமாக வைத்து "ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம்" மாற்று வலு செயற்பாட்டு சங்கம் வலுவிழந்தோர் பாதுகாப்பு நிதியம் என்று நிறுவ னங்களை அடுக்கிக்கொண்டு செல்ல முடியும். இவர்களின் செயற்பாடுகள் போதுமானதாக இல்லை என்றே கூறவேண்டும். இவ்வாறு போரினாலும் பொருளாதாரத்தினாலும் போர் அனர்த் தங்களினாலும் அங்கவீனர்களாக் கப்பட்டவர்களை சமூகத்தில் உயர்ந்தவர்களாக வாழவைக்க வேண்டிய பொறுப்பு எல்லோரிடத் திலும் உள்ளது என்றே கூற வேண்டும்.

**சு. பாஸ்கரன்**

# நிரவப்படாத வெற்றிடங்களால் அவதியுறும் நோயாளர்கள்

**வெளிவாசல்பாலன்**



கண்டாவளையிலிருக்கிற ஆஸ்பத்திரி பெரும்பாலும் மூடப்பட்டேயுள்ளது. அங்கேயொரு பாழடைந்த கட்டடமுண்டு. அதற்கொரு காவலாளியிருக்கிறார்.

மாங்குளத்திலிருந்த மருத்துவமனையைக்காணவில்லை. போரின்போது காணாமற் போனவைகளின் பட்டியலில் அதுவுமொன்றாகிவிட்டது. சனங்கள் மாங்குளத்திலும் அதனைச் சூழவும் குடிவந்த பின்னும் கூட அந்த ஆஸ்பத்திரி இன்னும் வரவில்லை. இரண்டரை வருடச்சமாதானத்தாலும் கூட அங்கே அதைக் கொண்டுவர முடியவில்லை.

ஒட்டுசுட்டானிலுள்ள ஆஸ்பத்திரி இன்னும் சரியாகத்திறக்கப்படவில்லை. ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் எல்லாக் கிராமங்களுக்கும் சனங்கள் மீள வந்தபின்னும் ஆஸ்பத்திரி இன்னும் சரியாக இயங்கவில்லை. அங்கிருக்கும் சனங்கள் மருந்தெடுப்பதற்கு புதுக்குடியிருப்புக்கோ முள்ளியவளைக்கோதான் போகவேணும்.

ஆனையிறவில் மருந்தகம் இருந்த இடத்தின் சுவடேயில்லை. நித்தியவெட்டையில் இயங்கிய மருத்துவமனையின் கதியும் கிட்டத்தட்ட இதே மாதிரித்தான். நாகர்கோவில் மருதங்கேணி மருத்துவமனைகளும் சீராக இயங்கவில்லை. பளையில் கூட அப்படித்தான். பூநகரியும் அவ்வாறே.

இவற்றைவிட வேறிடங்களில் இயங்குகிற ஆஸ்பத்திரிகளின் நிலையும் ஏறக்குறைய பற்றாக்குறைகள், வசதியீனங்கள், இல்லாமைகளோடுதான் உள்ளன.

மருந்துகள் பற்றாக்குறை, கட்டடங்கள் பற்றாக்குறை, உபகரணங்கள் பற்றாக்குறை , ஆட்பற்றாக்குறை என்று இந்த அத்தியாவசிய சேவை உள்ளது.

இதில் முதலாவதும் முக்கியமானதும் ஆட்பற்றாக்குறையே.

இயங்குகிற பல முதன்மையான மாவட்ட வைத்தியசாலைகளுக்குக்கூட போதிய மருத்துவர்கள் இல்லை. மருந்து கலவையாளர்கள் இல்லை. தாதி உத்தியோகத்தர்கள் இல்லை. ஆய்வுகூடப் பரிசோதகர்கள் இல்லை. எக்ஸ் கதிர் இயக்குபவர்கள் இல்லை. சத்திரசிகிச்சை நிபுணர்கள், மகப்பேற்று நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள், கண் வைத்திய நிபுணர், காது மூக்கு தொண்டை நிபுணர் எவரும் கூட இல்லை.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விட பல வேளைகளிலும் வடகிழக்கில் தான் நோய் அதிகமாக இருக்கிறது. யுத்த நெருக்கடியால் ஏற்படும் பாதிப்புகள் இதில் பிரதான காரணம்.

யுத்த காலத்திலும் இதே நிலைமைதானிருந்தது. இப்பொழுது சமாதானக்காலத்திலும் அதே கதிதான் தொடர்கிறது. ஆனால் சிறுசிறு மாறுதல்கள் மட்டும் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் அவற்றால் எந்தப்பெரிய முன்னேற்றத்தையும் தந்துவிடமுடியவில்லை. இருக்கின்ற அத்தியாவசியத் தேவைகள் பிரச்சினைகளைக்கூட தீர்க்கப்பட்டதாகவும் இல்லை.

முன்பிருந்ததைவிட கூடுதலாக சமாதான காலத்தில் சில வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் ஓரிரண்டு புதிய மருத்துவர்கள் வந்திருக்கிறார்கள். புதிய அம்புலன்ஸ் வண்டிகள் கிடைத்திருக்கின்றன. சில புதிய கட்டடங்கள் கட் டப்பட்டுள்ளன. ஆய்வுகூட உபகரணங்கள் முதல் சத்திரசிகிச்சைக்கான உபகரணங்கள் வரையில் அவையும் சிறு அளவில் வந்துள்ளன. ஆனால் இவையெல்லாம் இருக்கின்ற தேவையில் அரைப்பங்கை நிறைவேற்றவும் போதாதவை. அப்படிப் போதுமானவையாக இருந்தால் தெற்காக இயங்கிவந்த மருத்துவமனைகளையே தொடர்ந்தும் இயங்கவைக்க முடியாமற் போனது? இதைவிட இன்னும் சில பகுதிகளில் புதிதாக கிராமிய மருத்துவமனைகளை அமைக்கவேண்டிய தேவையிருந்தும் அவற்றைப்பற்றி யோசிக்க முடியாமலிருக்கிறது?

நாங்கள் பல 'இல்லை' களாற் சூழப்பட்டவர்கள். மருத்துவத்தைப்பொறுத்தவரையிலும் அப்படித்தான்; இல்லைகளின் படலம் நீண்டேயிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சனத்தொகைக்கு ஐம்பத்தைந்து மருத்துவர்களுக்கு மேல் தேவை. இலங்கையிலுள்ள சனத்தொகைக்கு மருத்துவர்களின் விகிதாசார நடைமுறைக் கணக்கின்படியே மேற்படி மருத்துவர்கள் தேவை. ஆனால் அங்கிருப்பதோ ஆகப் பத்துப்பேர் மட்டுமே. அதிலும் ஐந்துபேர் ஓய்வு பெறும் காலத்தின் பின்னான சேவை நீடிப்புப் பெற்றோர்.

இந்தப் பத்துப்பேரில் இருவர் மட்டுமே MBBS கள். இந்த இருவரும் மருத்துவத்துறையின் நிர்வாக அதிகாரிகளாகவே இருக்கிறார்கள். ஒருவர் பிரதிமாகாண சுகாதார வைத்திய அதிகாரி. மற்றவர் மாவட்ட வைத்திய அதிகாரி. ஏனையவர்கள் RMP தரத்திலுள்ளவர்கள்.

மாவட்ட மருத்துவமனைகள் இரண்டு, சுற்றயல் கூறு மருத்துவமனை ஒன்று, மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனைகளும் மூன்று. மருந்தகங்கள் பல எனவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தை மேற்படி பத்துப்பேருமே சமாளித்து வருகிறார்கள்.

மருத்துவர்களின் பற்றாக்குறை மட்டும்தான் பிரச்சினை என்று யாரும் எண்ணிவிடக்கூடாது. போதிய தாதிய உத்தியோகத்தர்கள் இல்லை. ஆய்வு கூடப் பரிசோதகர் எக்ஸ் கதிர் இயக்குநர், மருந்துக்கலவையாளர். மருந்தாளர் இல்லாததும் பெரும் பிரச்சினையே.

மருந்தாளர், மருந்துக்கலவை யாளர், தாதி உத்தியோகத்தர்கள் போதிய அளவுக்கு இல்லாதபடியால் கிராமிய மருந்தகங்களைக் கூட இயக்கமுடியாமலிருக்கிறது. இந்த உத்தியோகத்தர்களிருந்தால் மருத்துவர்கள் தவணை முறையிலாவது அங்கு போய் சிகிச்சை அளிக்க முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வைத்திய சாலைகளுக்கான தாதிய உத்தியோகத்தர்கள் நூறு பேர்கள் வரையில் தேவை. இருப்பதோ இருபதுக்குள்தான்.

இவை தவிர நோயாளர் விடுதிகள் படுக்கைகள் போன்றனவும் போதாக்குறையாகவே தான் உள்ளது.

ஒரு பக்கத்தில் அடிப்படை வசதிகள் இல்லை. மறு பக்கத்தில் மருந்து வகைகள் இன்னும் சீராகவும் முழுதாகவும் வராத நிலை. மின்சார வசதிகள் போதாமை. சில இடங்களில் இல்லாத நிலை. கிராமிய வைத்தியசாலைகள், சுற்றயல் கூறு மருத்துவமனைகளில் எல்லாம் மின்சார வசதி இல்லையெனலாம்.

இதே போல, கிளிநொச்சி மாவட்டத்தின் நிலையும் மிகவும் நெருக்கடியிற்தானிருக்கிறது.

மருத்துவர் வெற்றிடம் இப்போதும் தீர்க்கப்படாத நிலையிலேயே தொடர்கிறது. தினமும் ஆயிரக் கணக்காகக் கூடும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவலம் தீர்ந்தபாடில்லை. தொலை தூரங்களிலிருந்து வந்து நீண்ட நேரம் காத்திருப்பது என்பது சாதாரணமானதல்ல, சகிக்கக் கூடியதுமல்ல. ஆனாலும் வேறு வழியில்லையே. நோய் உபாதையுடன் காத்திருக்கத்தான் வேணும். அப்படியிருந்துதான் சிகிச்சையை பெறவும் வேண்டும்.

சில இடங்களில் மருத்துவமனைகள் இருக்கிறபோதும் அவை இயங்காததால் மாவட்ட மருத்துவமனையை நோக்கியே சனங்கள் வருகின்றன.

பூநகரியிலிருந்து முழங்காவிலுக்குப் போக வேண்டியிருக்கிறது. பளையிலிருந்தும், கண்டாவளையிலிருந்தும் கிளிநொச்சிக்கு அலைய வேண்டியுள்ளது.

ஏன் அங்குள்ள மருத்துவமனைகளைத் திறக்கலாமே என பிரதி மாகாண சுகாதார வைத்திய அதிகாரி Dr.சத்தியமூர்த்தி அவர்களை கேட்ட போது அவர் மாவட்டத்தின் ஆட்பற்றாக்குறையை தயாரித்து வைத்திருந்த பட்டியலோடு விளக்கினார்.

முல்லைத்தீவில் Dr.ஜெயகுலராஜாவும், Dr.தர்மேந்திராவும் எதிர்கொள்கிற அதே நெருக்கடிகள் அதே பிரச்சினைகள் தான் இங்கும்.

இவ்வளவுக்கும் இலங்கை முழுவதையும் அவதானிக்கும் போது வடக்குக் கிழக்கில்தான் நோய்த் தாக்கம் அதிகமாக இருக்கிறது. யுத்தமும் பொருளாதார நெருக்கடிகளும் இதற்கு பிரதான காரணம். இடப்பெயர்வு இதில் முக்கிய காரணமானது. போசாக்கின்மையும் வீதிகள் புழுதியாக இருப்பதும் நோய்த்தாக்கத்துக்கு முதன்மைக் காரணம் என பல மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

இன்னும் வன்னி முழுவதிலும் கண்சிகிச்சை நிபுணர் எவருமில்லை. அப்படியே குழந்தை வைத்திய நிபுணர், சத்திரசிகிச்சை நிபுணர்கள். மகப்பேற்று நிபுணர்கள், காது, மூக்கு, தொண்டை நிபுணர், பொதுமருத்துவ நிபுணர் என்று அடிப்படையான தேவைகளுக்குக் கூட ஒருவரில்லை.

ஆனால், இதுவரையான நெருக்கடிகளையும் இங்கே கடமை செய்து வருகின்ற ஒரு சில மருத்துவர்கள் ஒருவாறு சமாளித்து வந்துள்ளார்கள். தங்களால் இயன்றளவுக்கு ஆகக் கூடுதலாகப் பாடுபட்டு மக்களுக்குச் சேவையாற்றியுள்ளார்கள். அவர்களுடைய அந்தத் சேவையாற்றும் மனப்பாங்கும் அவர்களுடைய பாடுபடுதலுமே இந்த மக்களைக் காப்பாற்றியது. வசதியீனங்களின் மத்தியிலும் இவர்கள் செய்து வந்த, செய்துவருகிற பணிகள் மிக உயர்வானவை.

இங்குள்ள ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஆகக்குறைந்தது 25 MBBS கள் தேவை. ஆனால் கிளிநொச்சியில் ஏழு MBBS உம் முல்லைத்தீவில் இரண்டு MBBS உம் மட்டுமேயுள்ளனர். இவர்களில்தான் பிரதி மாகாண வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்திய அதிகாரி என்போரும் அடங்குகின்றனர். இவர்களுடன் முல்லைத்தீவில் எட்டு RMP களும் கிளிநொச்சியில் ஏழு RMP களுமே சேவையாற்றுகின்றனர்.

கிளிநொச்சிக்கு மட்டும் தாதிய உத்தியோகத்தர்களின் தேவை 107. இப்பொழுது உள்ள தொகை 20 மட்டுமே. இதுபோல பல வேலைகளுக்குரிய பணியாளர்களின் பற்றாக்குறை தீராதிருக்கிறது. சில பணிகளுக்கு வெற்றிடங்கள் மட்டுமேயுண்டு.

இந்த வெற்றிடங்கள் இரண்டுவகையானவை. ஆஸ்பத்திரிப் பணியாளர் முதல் ஆய்வுகூடப்பரிசோதகர், உதவியாளர், கதிர் இயக்குநர், உதவியாளர், மருத்துவர்கள்வரை இதில் அடங்கும். இது ஏழுவகை. அடுத்தது ஆஸ்பத்திரியை இயக்கிற நிர்வாகப் பிரிவு. அதற்குரிய பணியாளர் வெற்றிடங்களும் தனியாகவுண்டு.

நிலைமை இவ்வாறிருக்கையில் எத்தனைதான் முயன்றாலும் மக்களின் மருத்துவப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

இதுவரையிலும் நெருக்கடி நிறைந்த சூழலில் பங்காற்றிய பணியாளர்களும் மருத்துவர்களும் தமது பணியை விட மூன்று மடங்கு கஷ்டப்பட்டே உழைத்திருக்கிறார்கள். இது சாதாரணமானதல்ல. தமது மேற்படிப்பை தொடருவதற்குரிய வசதிகள் இல்லாத போதும், வாழ்க்கை வசதிகள் குறைந்திருந்த போதும் அவையெல்லாவற்றையும் விட்டுவிட்டு போர்ச்சூழலில் மக்களின் நலனுக்காகப்பாடுபட்ட இந்த மருத்துவர்களின் உணர்வை யாரும் மறந்துவிடமுடியாது. அது மேலான தியாகமே.

ஆனால், அவர்களை இன்னுமின்னும் அவ்வாறே கஷ்டப்படுங்கள் என்றுவிட்டு விடவும் முடியாது. அதே வேளையில் சனங்களின் அவலத்தை நீளவிடவும் முடியாது.

இதற்கு இரண்டுவகையில் தீர்வுதேவை.

01.வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அதற்கு அரசு முழுமையான கவனத்தை என்றும் தமிழ்ப்பகுதிக்கு கொடுக்கப்போவதில்லை. எனவே புலம்பெயர்நாடுகளிலிருந்தும் மருத்துவத்துறையில் படித்து விட்டு வெளியேறும் எமது மருத்துவர்களும் இந்த நிலைமையைச் சீர்செய்ய உதவவேணும்.

அவர்கள் அடிக்கடி வருகிறார்கள். உதவுகிறார்கள். ஆனால், அதற்கொரு நிலையான திட்டம் வேணும்.

02. இங்கிருந்து மருத்துவத் துறையில் பயிலப்போனவர்களாவது அவசியம் இங்கே வந்து வேலை செய்ய முன்வரவேணும். அப்படி கிளிநொச்சிக்கு வந்துள்ள மருத்துவர்களை இங்கே நாம் கவனிக்கலாம். இன்னுமின்னும் புதியவர்களின் வருகை நிகழுமானால் ஓரளவுக்கேனும் நிலைமைகளை சீர்ப்படுத்தலாம். அத்துடன் இது வரையிலும் Dr. பொன்னம்பலம் மருத்துவமனை பல சந்தர்ப்பங்களில் சிறப்பு மருத்துவர்களை அழைத்து இங்கே சிறப்புச் சிகிச்சைகளைச் செய்தது போல வேறுபல சிகிச்சைகளை இன்னும் செய்ய வேண்டிய அவசியமும் உண்டு. இப்பொழுது அப்படியொரு திட்டத்தை கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியும் பிரதி மாகாண சுகாதார அதிகாரியும் செய்வதாகவும் தகவல்.

எதற்கும் பாதித்தீர்வுக்கான முயற்சி புதிதாக வெளியேறுகிற மருத்துவ மாணவர்களின் - மருத்துவர்களின் மனதில்தானிருக்கிறது.


இப்போது திலீபன் மருத்துவ சேவையினரின் இலவசப் பங்களிப்பு விரிவடைந்து வருவதைப் போல புதிய தலைமுறை மருத்துவர்கள் மற்றும் அவர்களுக்கு வழிகாட்டிகளாக மூத்த மருந்துவ நிபுணர்களுடைய மனப்பாங்கிலும் புதிய பாதை திறக்கவேணும்.

# உலகில் சனநாயக ஆட்சிமுறை பலவீனப்பட யார் காரணம்?

ஐங்கரன்



உலகில் சனநாயக ஆட்சி முறைமையும், ஏனைய ஆட்சி முறைமைகளும் நலிவடைந்து பலவீனமடைவதற்கு அரசியல் தலைவர்களே காரணம். அரசியல் தலைவர்களின் ஆட்சி என்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், முரண்பாடுகள், பலவீனங்கள் முழுமையான கோட்பாட்டுத் தன்மையில் பலவீனத்தை ஏற்படுத்திவிடுகிறது. எந்த அரசியல் தலைமையும் நேர்மையாகவோ அல்லது தேர்தல் காலத்தில் வழங்கும் உத்தரவாதங்களையோ நிறைவேற்றியதாகக் காணமுடியாது. எல்லோரும் உண்மைத்தன்மை இல்லாதவர்களாக, ஏமாற்றும் போர்வழிகளாகவே காணப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலைமை உண்டு. இதில் கீழைத்தேசம், மேலைத்தேசம் என்றவேறுபாடு கிடையாது. தற்போது எல்லாப்பிரதேசமுமே அதிகார ஆசையில் செயற்படுகின்ற போக்கையே காணமுடிகின்றது. இதனை விரிவாக பரிசீலிப்போம்.



## தடுமாறும் இந்திய அரசாங்கம்


இந்தியப் பிரதமர் நியூயோர்க் நகரில் நடந்த ஐ.நா பொதுச்சபை நிகழ்வில் கலந்து கொள்ளசென்றிருந்தபோது பிரிட்டனுக்கு அரசமுறை விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அப்போது இராணுவம், தொழில்நுட்பம், பயங்கரவாதம், உலக அமைதி என்பன பற்றி இரு நாட்டுத்தலைவர்களும் உரையாடியதுடன் உடன்பாட்டுக்கு சென்றாலும் பொருளாதார அடிப்படையில் நெருக்கமான உறவை வளர்க்க முயன்றனர். இரு நாட்டுப் பொருளாதாரத்தையும் அதற்கான ஒத்துழைப்பையும் வலுப்படுத்த அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டுக்குழுக்கள் அமைக்க இணங்கின. கூட்டுப்பொருளாதார, வர்த்தககுழுக்கள் அமைக்கப்படுவதுடன் முதலீடு, வர்த்தகம் சம்பந்தமான விடயம் முதன்மைப்படுத்தப்பட்டது. இந்தியாவில் பிரித்தானியாவின் முதலீடு 60 சதவீதத்தை கொண்டுள்ளது. இதனளவை மேலும் அதிகரிக்க மன் மோகன் சிங் முயன்றதுடன் வர்த்தக உறவும் அதிகரிக்கப்படுமென இந்தியா குறிப்பிட் டுள்ளது.

இவ்வாறே அமெரிக்க சனாதிபதியை சந்தித்த போதும் மன் மோகன் சிங் இந்தியாவுடனான வர்த்தக உறவை அதிகரிக்கச் செய்வதுடன் முதலீட்டுக்குரிய வாய்ப்பை இந்தியா வழங்கும் என்றும், முதலீடு அதிகரிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார். அமெரிக்கா வாழ் இந்தியர்களை சந்தித்தபோது வெளிப்படையாக பிரதமர் கோரிக்கை விடுத்தார். இந்தியாவில் நேரடி முதலீட்டை அதிகரிக்குமாறு கோரியிருந்தார். 1990 களில் இந்தியா மன்மோகன் சிங் நிதியமைச்சராக இருந்த போது பின்பற்றிய பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தப்போவதாக தெரிவித்த பிரதமர் அதனை அமுல்படுத்துவதன் மூலம் இந்தியாவை அபிவிருத்திப் பாதையில் முன்னேற்ற முடியும் என்றார். இது வாஜ்பாய் அரசாங்கத்தின் கொள்கைக்கு ஒப்பானதே. ஏன் வாஜ்பாய் அரசாங்கத்தை மக்கள் நிராகரித்தார்கள் என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போது மட்டும் வாஜ்பாய் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையைக் குறைவாக மதிப்பிட்டார்கள். அவ்வாறான கருத்தையே மன்மோகன்சிங் மற்றும் சோனியா தலைமையிலான காங்கிரஸ் முன்நிறுத்தி தேர்தலை வென்றது. சாதாரண மக்கள் பின்படுத்தப்பட்ட பிரிவினருக்காக காங்கிரஸ் தியாகங்கள் பலவற்றை மேற்கொள்ளப்போவதாக பிரசாரப்படுத்திய காங்கிரஸ் கூட்டணி ஆ... யைப் பிடித்த முதல் மூன்று மாதத்திலும் அவ்வாறே அணுகுவது போன்று காட்டிக்கொண்டது. ஆனால் மன்மோகன்சிங்கின் நியூயோர்க் விஜயம் அவையாவற்றையும் முற்றாக நிராகரித்ததுடன் இடதுசாரிகளைக் கூட மௌனமாக்கி விட்டு காங்கிரஸ்சின் இயல்பான போக்குக்கு தயாராகி வருகிறது.

எனவே மன்மோகன்சிங் அரசாங்கமும் தனக்குரிய காலத்தை பூர்த்தி செய்யும் காலத்தில் மீண்டும் ஆட்சி மாற்றம் வேண்டும் என இந்திய மக்கள் கிளர்ந்தெழுகின்ற போக்கு தவிர்க்க முடியாததாக அமையும். அவ்வாறு அமையும் போதும் இத்தகைய தொடர் மாறிமாறி நிகழும் போதும் இந்தியாவின் கிராமங்கள் வறுமைகள், ஏழ்மைகள் என்றுமே தனித்து விடப்படுவதுடன் அரசியல் தலைமைகளின் போக்குகள் மக்களை அரசியலிலிருந்து அந்நியப்படுத்தும்.

## ஈராக் தேர்தல்

ஈராக்கில் அடுத்த சனவரியில் தேர்தலை நடத்தப் போவதாக கூறியுள்ள அமெரிக்காவின் செயல் பிரதேசங்களில் தேர்தல் நடைபெற வாய்ப்பில்லை என்றே கருதுகின்றது. அதன்படி ஈராக்கில் வன்செயல் இல்லாத இடங்களில் மட்டுமே தேர்தலை நடத்தலாம் என்பது ஈராக்கிய சனாதிபதியை அமெரிக்கா தேர்ந்தெடுத்துவிட்டதென்பதையே காட்டுகின்றது. தற்போதய அமெரிக்க- ஈராக்கிய தேர்தல் வேட்பாளருக்கு இசைவான பிரதேசங்களில் வாக்குப்பதிவை நடத்திவிட்டு தேர்தலை ஈராக்கில் நிகழ்த்தி விட்டோம். சனநாயகம் வென்றுவிட்டதென கூறுவதொன்றும் யதார்த்தமல்ல. வேண்டுமாயின் புஷ் விரும்பும் அரைகுறை சனநாயகம் ஈராக்கில் ஏற்படுத்தப்படுவது மட்டுமன்றி அதுவே சனநாயகம் என்ற நம்பிக்கையை ஈராக்கியரிடம் ஏற்படும். இது ஏற்கனவே சனநாயகத்திற்குள் புகுந்துள்ள ஏனைய ஆசிய, ஆபிரிக்க, பிராந்தியங்களில் காணப்படுவது போன்றது.




உலகில் அநேக பின்தங்கிய நாடுகளில் அரைகுறை சனநாயகமே கடைப்பிடிக்கப்படுகின்றது. அத்தகைய அரைகுறை சனநாயகத்தை அறிமுகப்படுத்தியவர்கள் பிரிட்டன், அமெரிக்கா போல வளர்ந்த நாட்டினரே. அவ்வாறு அரைகுறையாக சனநாயகத்தை திணித்து விடுவதன் வாயிலாக மக்களின் முழுமையான சனநாயகத்தையோ ஆட்சியையோ இனங்காண முடியாத சூழலில் வளர்ந்த நாடுகள் தமது தலையீட்டை சாத்தியப்படுத்த முடியுமெனக் கருதுகின்றன. பூரணமான சனநாயகப்பங்களிப்பில்லை. மனிதஉரிமைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. என பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக்கொண்டு அளவுக்கதிகமான தலையீட்டையும் செல்வாக்கையும் ஏற்படுத்தி தொடர்ந்து இந்தநாடுகளை அடிமைகளாக்குவதே அமெரிக்கா போன்ற சக்திகளின் நோக்கமாக உள்ளது.

எனவே ஈராக்கில், ஆப்கானிஸ்தானில் சனநாயகத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறிவரும் அமெரிக்க ஆற்றப்போவது தமக்கு விசுவாசமான தலைமையை சனநாயகத்தின் பெயரால் ஆட்சியில் அமர்த்துவதாகும். ஈராக்கும் ஆப்கானிஸ்தானும் சனநாயகத்தில் முன்மாதிரி மட்டுமன்றி அனைத்து இஸ்லாமிய நாடுகளுக்கும் முன்மாதிரியான நாடுகள் என புஷ் ஐ.நா.வில் குறிப்பிட்டிருப்பது இஸ்லாமிய உலகத்தை எச்சரிப்பது போன்றது. இஸ்லாமிய நாடுகளில் அவ்வகையான மாற்றத்தை சந்திக்கப் போவதாக கூறிவரும் அமெரிக்கா உலகத்தை அல்லது இஸ்லாமிய உலகத்தை எப்படி கையாள விரும்புகிறது என்பதை காட்டுகிறது.

வன்முறைகள் மோதல்கள் இல்லாத இஸ்லாமிய உலகம் என்பதை விட அமெரிக்காவையும் மேற்கின் கொள்கைகளையும் நிராகரிக்கின்ற இஸ்லாமிய உலகத்தையே புஷ் எதிர்க்கின்றார். அமெரிக்காவுக்கு கட்டுப்பட்ட உலகத்தில் நிகழும் சனநாயக மீறல்களையோ வன்முறைகளையோ அமெரிக்கா கண்டிப்பதாக தெரியவரவில்லை. இந்த நாடுகளுடன் பொருளாதார இராணுவ உறவுகளைக் கொண்டிருக்கும் அமெரிக்கா பெரும்பான்மை அரச பயங்கரவாதத்திற்கு எதிராக ஒரு போதும் கிளர்ந்தெழுவதில்லை அமெரிக்கா. எனவே அமெரிக்காவின் தயவில் வாழும் அரசொன்றை தேர்ந்தெடுப்பது மட்டுமே புஷ் குறிப்பிடும் சனநாயகமாகும். அது சனநாயகம் பற்றிய புஷ்ஷின் புதிய கோட்பாடாகுமா? புஷ் குறிப்பிடுவது போன்று ஈராக், ஆப்கானிஸ்தான் என்பவற்றின் கடந்தகால ஆட்சியால் உலகசமாதானம் நிராகரிக்கப்பட்டதென்பது எவ்வளவு மூன்றாம் தரமான மதிப்பீடாகும். இவ்விரண்டு நாடுகளினதும் கடந்தகால ஆட்சிக்கு வித்திட்ட நாடு அமெரிக்காவாகும். பில்லேடனை முல்லா முகமது ஓமரை சதாம்ஹுசைனை வளர்த்து விட்டதில் வெள்ளை மாளிகைக்கே அதிகமானபங்குண்டு. இதனால் உருவாக்கப்பட்டதும் ஆட்சியுமில்லை சனநாயமும் இல்லை என்பது போலவே தற்போதும் அமெரிக்கா உருவாக்கி வருவது சனநாயகமும் இல்லை ஆட்சிமாற்றத்துக்கான சரியான வழிமுறையுமில்லை எனக் கூறலாம். மக்களையும் உலகத்தையும் தமக்கு ஏற்ப திசைதிருப்பும் ஆட்சியாளர்களே தற்காலத்தில் அதிகம்.

## யதார்த்தவாதக்கோட்பாடு


சர்வதேச அரசியல் கோட்பாட்டில் ஒன்றாகப்பேசப்படும் யதார்த்தவாதக் கோட்பாடு நிகழ்வின் உண்மைகளைக் அப்படியே பிரதிபலிக்கும் சர்வதேச அரசியல் சம்பவங்களை கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இந்த வரிசையில் ஈராக்கின் யதார்த்தம் மறைக்கப்பட்டபோது தற்போது வெளிவரத்தொடங்கிவிட்டது. அண்மையில் பிரித்தானிய பிரதமர் ரொனிபிளேயர் ஈராக் மீது படையெடுத்தமைக்கு வலுவான காரணம் எதுவுமில்லை எனினும் புலனாய்வுத்துறையின் தகவலைக் கொண்டு தவறாக எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயே போர் நிகழ்ந்ததென்றும் உண்மையை தெளிவுபடுத்தியுள்ளார்.

(17 ஆம் பக்கம் பார்க்க..)

**பயணம் 05**






















# கண்ணகைபுரம் கிராமத்தின் மீது அதிகாரிகளின் கவனம் திரும்புமா?

**அ.அருள்**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கண்ணகைபுரம் கிராமம் 1974ஆம் ஆண்டு படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கிராமமாகும். இக்கிராமத்திற்கு அக்கராயன் இடது கரை வாய்க்கால் மூலம் மேட்டு நீர்ப்பாசனம் வழங்கப்பட்டது. இவை தற்போது அழிந்து போயுள்ளன. முன்னைய காலங்களில் மரக்கறிப்பயிரில் அதிகப்விளைச்சலைபெற்ற கிராமமாகும். குறிப்பாக இப்பிரதேசத்தில் வெங்காயப் பயிர்ச்செய்கையில் பிரசித்தி பெற்ற ஓர் கிராமமாகும். நான்கு பக்கங்களும் வயல் நிறைந்து இயற்கை எழில் கொஞ்சும் இக்கிராமத்தை தரிசிக்கும் நோக்கோடு அங்கே சென்றோம். அக்கிராமத்தின் திட்டக்குழுவின் பொருளாளர் சுதாகரன் அவர்களின் கருத்து பின்வருமாறு

"எங்கட கண்ணகிபுரம் கிராமத்திலை 150 குடும்பங்களுக்கு மேல இருக்கிறம். ஆத்துக்கு அங்கால இருந்த 50 குடும்பங்களுக்குக் காணி கொடுத்து வடக்குப் பக்கமா குடியமர்த்தியிருக்கினம். இவையளுக்கு இப்ப கிட்டடியில நிறுவனத்தால கிடுகு குடுத்தினம். எங்களுக்கு தண்ணி பெரிய பிரச்சினையாத்தான் இருந்தது.இப்பபௌசரிலை தண்ணி கொண்டுவந்து தருகினம். எங்களுக்கு இப்ப போக்குவரத்து பிரச்சினைதான். இந்த றோட்டால போய்வாறதுதான் கஷ்டம். நாங்கள் இந்த முறை பூசணித் தோட்டம் செய்தோம். இந்த பூசணிக்காய சந்தைப்படுத்த முடியாம இருக்கு.

இஞ்சயிருந்து மெயின் றோட்டுக்கு வண்டிலில கொண்டு போய் அங்காலதான் வாகனத்தில ஏத்தவேணும். இதால எங்களுக்கு தோட்டம் செய்யிறதிலையும் நட்டந்தான் ஏற்படுது.

உலக உணவுத் திட்டத்தால றோட் ஒண்டு திருத்தினவை அதுவும் முழுசா செய்யேல்லை எங்களுக்கு இந்த றோட்டை வடிவா திருத்தித்தந்தா உதவியா இருக்கும். சனங்கள் சிரமதானம் மூலமா பற்றையெல்லாம் துப்புரவு செய்து போட்டினம். மண் வெட்டிப் போட்டு கிடங்குகளை நிரவினாக் காணும்" என்கிறார்.

தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் தயாலசோதி அவர்கள் பாடசாலையின் தற்போதைய நிலைவரம் பற்றி கருத்து தெரிவிக்கையில்

"எங்கட பள்ளிக்கூடத்தின்ர நிலைதான் பரிதாபம். இங்கை இரண்டு கட்டடம் இருக்கிது. அதில ஒண்டு தற்காலிகம் மற்றையது நிரந்தரம். நிரந்தர கட்டடத்திலையும் உடைவு இருக்கு. தற்காலிகக் கட்டடத்தில தார்சீற் கிழிஞ்சுபோய் சுவரெல்லாம் வெடிச்சுப் போட்டுது. அதுக்க பிள்ளையள் இருந்து படிக்கிறது கஷ்டம். வெடிச்ச சுவர் விழுந்தால் பிள்ளையளுக்கு சேதம் ஏற்படும். சில நேரம் மேல இருக்கிற தடிகள் விழுந்தாலும் பிள்ளையளின்ரமண்டையளை உடைச்சுப் போடும். நாங்க வலயக்கல்விப் பணிப்பாளரிட்ட கன கடிதம் குடுத்தம். இப்பதான் சொன்னவையள் ஒரு கட்டடம் வந்திருக்காமெண்டு. அது எப்பவேலை தொடங்குதெண்டும் தெரியாது.

உண்மையில இந்த மாரிகாலத்துக்கு பிள்ளையள் ஒழுக்குக்க இருந்து படிக்கேலாது இதுக்கு அவசரமா ஏதாவது. செய்து உதவினா நல்லது" என்றார்.

இக்கிராமத்தின் வீதிகளானது மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது பெய்து வரும் மழையினால் இவ்வீதிகளை பயன்படுத்துவதில் இப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இவ்வீதிகள் கிராம சேவையாளரின் தலைமையில் கிராம மக்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளபோதும் செப்பனிடப்படாமையால் வீதியில் உள்ள கிடங்குகளில் நீர் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் இம்மக்கள் விவசாய உள்ளீடுகளை சந்தைப் படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குடிநீருக்குப் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கும் இப்பகுதியில் முன்பள்ளிக்கு அருகாக கடந்த ஆண்டளவில் அமைக்கப்பட்ட பொதுக்கிணறு சேதமடைந்து காணப்படுகின்றது. இவற்றிற்கான காரணம் சரியான தொழில்நுட்ப பிரயோகமற்ற கட்டுமானமேஎன இக்கிராமத்தின் அனுபவமிக்க மக்களால் கூறப்படுகின்றது.

இக்கிராமத்தில் அமைந்துள்ள கண்ணகைபுரம் அ.த.க பாடசாலையின் நிலை வேதனைதரும் விடயமாக உள்ளது. இப்பாடசாலையின் தற்போதைய நிலையே இக்கிராமமக்களின் அங்கலாய்ப்பாக அமைகின்றது. தரம் 9வரையும் கொண்ட ஏறத்தால 140 மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலை ஒரு உடைந்த நிரந்தரக் கட்டடத்திலும், ஒரு முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட கொட்டகையிலும்,மரங்களின் கீழும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. தற்போது பெய்துவரும் மழை காரணமாக இம்மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படும் என்பது திண்ணம்.

இப்பாடசாலையில் தற்காலிகக் கொட்டகையில் சுவர்கள் இடிந்தும், கூரையில் உள்ள தடிகள் உக்கியும் காணப்படுவதால் இக்கொட்டகையின் உள்ளிருந்து கல்வி கற்கும் சிறார்களின் நிலை கவலைக்கிடமான அவல நிலையாகும். இந்நிலை கடந்த பல மாதங்களாக தொடர்கின்றபோதும் சம்பந்தப்பட்டவர்கள் "உரிகாலத்தில் கவனமெடுத்து செயற்படாதது ஏனோ?" என இக்கிராம மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அத்துடன் இப்பாடசாலையின் சொத்துக்கள் சில துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் நலன் விரும்பிகள் கூறுகின்றனர். இவ்வாறான பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மழைகாலத்தில் இம்மாணவர்களின் கல்வி பாதிக்காதவாறு மாற்று ஒழுக்கின் ஊடாக பின்தங்கிய இப்பிரதேச மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் நடைபெற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இக்கிராம மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இக்கிராம மக்களின் சுகாதாரவசதி மிகவும்பின் தங்கியநிலையில் காணப்படுகின்றது. இவர்களின் அநேகமான வீடுகளில் மலசலகூடவசதிகள் அற்ற நிலை உள்ளது. தாய்சேய் சிகிச்சைகள், பொதுத் தேவைகள் கருதி நடாத்தப்படும்கூட்டங்கள் என் ப ன வ ற ் ற ி ற ் கு பாடசாலையினையே இம்மக்கள் பயன்படுத்துகின்றார்கள். இதனால் இக்கிராமத்திற்கு பொது நோக்குமண்டபம் அமைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

அக்கராயன் பிரதேசத்தில் படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட ஆரம்ப குடியேற்றக் கிராமமான கண்ணகைபுரம், கிளிநொச்சி இடம் பெயர்வு காலத்தில் மக்களை, மாணவர்களை தன்னகத்தே உள்வாங்கியதுடன் அ க ் க ா ல ப ் ப கு த ி ய ி ல ் தேவைப்பட்ட மரக்கறி உற்பட்ட விவசாய உள்ளீடுகளின் தேவைகளில் பெரும்பகுதியை இக்கிரா மம் பூர்த்தி செய்தும் வந்தது.

இவ்வாறான சிறப்பு மிக்க கிராமரம் பல்வேறு குறைபாடுகளுடன் தற்போது உள்ளது, நோக்கத்தக்க விடயமாகும்.

பொதுத்தேவைக்காக அமைக்கப் படுகின்ற பொதுச் சொத்துக்கள் இக்கிராமத்தின் அடுத்தசந்ததிக்கு சிறந்த முறையில் ஊடுகடத்த கூடியதாக தரநிர்ணயம் பேணப்படல் வேண்டும் என்பதும் இவர் களின் அவா.

கண்ணகைபுரம் கிராமத்தின் மீது அதிகாரிகளின் கவனம் திரும்பி தங்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்படுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.






# பிளாஸ்டிக் ஆபத்தின் அறிகுறி

பிளாஸ்டிக்கில் இருக்கும் 'என்டோக்ரைன் டிஸ்ரப்டர்ஸ்' என்ற ஒரு இரசாயனக் குழு ஆண்மைத் தன்மையைக் குறைப்பதாகும். இவை உடலுக்குள் புகுந்தால் பெண்களின்



ஈஸ்ட்ரஜன் போல வேலை செய்யும். இதனால் பல உயிரினங்கள் இரு பாலினமும் இணைந்த நிலையை அடைந்து வருகின்றன. இது மிகவும் ஆபத்தான ஒரு அறிகுறியாகும் என்கின்றனர் அறிவியலாளர்கள்.

பிரிட்டனின் வன உயிரினங்களை பாதிக்கத் துவங்கியுள்ள இந்த பெண்மையாகும் முறை, முன்னூற்று 50 கோடி ஆண்டுகளாக இருந்துவரும் உயிரினங்களையே சீரழித்து விடும். பிரிட்டன் சுற்றுப்புற அமைப்பு 42ஆறுகளை ஆராய்ந்ததில், மூன்றில் ஒரு மீனிற்கு பெண்பால் திசுக்கள் மற்றும் உறுப்புகள் வளர்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இளம் மீன்களில் இது அதிகமாகக் காணப்படுகிறது. இதனால் அதன் எதிர்காலமே பாதிக்கும் நிலையுள்ளது.

சீல்கள், டொல்பின்கள், பெரிகிரின் பால்கன் போன்ற பறவைகள் மற்றும் தேனீக்கள் கூட இரு பாலினமும் இணைந்த வாழ்க்கையை வாழும் நிலைக்கு மாறி வருவது அழிவு நிலையை ஏற்படுத்தி விடும். பிளாஸ்டிக்கில் வைக்கப்படும் உணவுப்பொருட்கள், பாக்குகள், ஷம்புகள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் உள்ள என்டொக்ரைன் டிஸ்ரப்டர்கள் என்ற இரசாயனங்கள் உணவு வளையத்தில் புக ஆரம்பித்தால் மனிதநலன் பாதிக்கப்படும். இதனால் ஆண்கள் மத்தியில் மலட்டுத்தன்மை ஏற்படும். 'ஒரு உயிரினத்தால் இனப்பெருக்கம் செய்ய முடியாத அபாய நிலையை இந்த இரசாயனங்கள் ஏற்படுத்தி விடும்' என்கின்றனர் சுற்றுப்புற வியல் மற்றும் மூலக்கூறு மீன் உயிரியல் ஆய்வாளர்கள். செடிகளில் மகரந்த சேர்க்கைக்குக் காரணமாக இருக்கும் தேனீக்களிலும் குறைந்த பாலுணர்வு இருப்பதோடு, ராணித் தேனீயும் குறைந்தளவு முட்டைகளையிட 'என்டோக்ரைன் டிஸ்ரப்படர்கள்' காரணமாக இருக்கின்றன.

இதனால் டொல்பின்களும் வடக்கு கடல் பகுதியில் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்த இரசாயனங்களால் பிறவிக் குறைபாடுகள் பெரும்பாலும் ஆண் உயிரினங்கள் மத்தியில காணப்படுகிறது. குழந்தை இறப்புக்களும் அதிகமாகிறது.

2.இயற்கைக் காடுகளை அழித்து ஒரே இனமான மரங்களை நட்டு ஓரினக் காடுகளை உருவாக்கியதே இன்றைய தண்ணீர்ப் பிரச்சினைக்குக் காரணம் என சுற்றுச் சூழல் ஆர்வ

# ஓரினக்காடுகளினால் தண்ணீர்ப்பிரச்சினை

லரும், இந்தியாவின் 'நவதான்யா' என்ற அமைப்பின் தலைவருமான வந்தனாசிவா கூறுகிறார்.

இமயமலை சாரலில் செழித்து வளர்ந்திருந்த ஓக் மரங்கள் அழிக்கப்பட்டன. வனத்துறைக்கு ஓக் மரத்தால் இலாபமில்லை. தொழில்மயமான உலகத்திற்கு, ஆலைகளின் தேவைக்கு பைன் மரங்கள் தேவைப்பட்டன. காடுகளை வளர்க்க வேண்டும் என்பது முக்கிய



மில்லை. என்ன வகையான காடுகளை வளர்க்க வேண்டும் என்பது முக்கியம் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

சென்ற நூற் றாண்டில் காகித ஆலைகளின் தேவைக்காக யூக்லிபட்ஸ் அறிமுகப் படுத்தப்பட்டது.

யூக்லிபட்ஸ் தண்ணீர் வளம் குறைந்த நாடுகளுக்கு ஏற்றதல்ல. இது குறித்து ஆய்வு நடத் தும் நிறுவனம். "1000 மில்லி மீட்டருக்கு குறைவான மழை உள்ள பகுதிகளில் நிலத்தடி நீரையும் மண்ணின் ஈரத்தன்மையை யும் யூக்லிபட்ஸ் பெரிதும் பாதிக்கிறது என்று கண்டுபிடித்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் பெண்கள் குடிநீருக்குப் பகையாக வந்த யூக்லிபட்சை எதிர்த்துப் போராடினர். அந்நாட்டின் அரசுத்துறை 100 லட்சம் ஹெக்டரில் நடப்பட்டிருந்த யூக்லிபட்ஸ் மரங்களே நீரின் எதிரி எனக்கண்டனர். காட்டு மரங்களைவிடவும் பல மடங்கு அதிக நீரை இவை உறிஞ்சி எடுப்பதைக் கண்டு பிடித்தனர். ஆற்றோரங்களில் உள்ள யூக்லிபட்ஸ் பிற மரங்களை விடவும் 20 சதவீதம் அதிக நீரைக் குடிக்கின்றது.

மலைகளில் தோண்டப்படும் சுரங்கங்கள் மழையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளை அழிக்கின்றன. டூன் பள்ளத்தாக்கில் சுண்ணாம்புச் சுரங்கங்கள் தோண்டப்பட்டதால் அங்கு ஏற்கனவே இருந்த இயற்கை ஏரி அழிக்கப்பட்டது. டூன் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த இயற்கையான ஏரியை மீண்டும் உருவாக்க 2 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். தொழில் வளத்தினை உருவாக்க உதவும் சுரங்கங்கள், ஓரினக் காடுகள் எதிர்விளைவு களையும் ஏற்படுத்துகின்றன.

த.அருவி




# நம் சமையல்அறையே ஒரு மருத்துவமனை தான்!

நம் சமையல் அறையே ஒரு சிறிய மருத்துவமனைதான். நாம் அன்றாடம் உபயோகப் படுத்தும் சமையல் பொருட்கள் பல நம்மை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுகின்றது.

ஆனால் இன்றைய அவசர உலகில் நாம் யாரும் அதை உபயோகித்துப் பார்ப்பதில்லை. நம் முன்னோர்களின் வீட்டு வைத்திய முறையை நாம் அடியோடு மறந்து விட்டோம்.

நம் முன்னோர்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அவர்கள் பின்பற்றிய உணவு முறைகளும் காரணம் என்றால் அது மிகையாகாது. அதனால் நாமும் கீழ் வரும் எளிய முறைகளை பின்பற்றிப் பயன்பெறுவோம்.

அல்சர் எனப்படும் குடல்புண் உள்ளவர்கள் உணவு உட்கொள்வதற்கு இரண்டு மணி நேரம் முன்போ பின்போ தேன் சாப்பிட்டு வர குடற்புண் குணமடையும். குடல் இரைச்சல் ஏப்பம் உள்ளவர்கள் வசம்புடன் ஓமத்தை மென்று சாப்பிடலாம்.

இரவு தூக்கம் வராமல் துன்பப்படுவோர்கள் ஒரு கப் சூடான பாலில் சில துளிகள் தேன் கலந்து பருகினால் சுகமான தூக்கம் வரும். உலர்ந்த திராட்சை சிறிதுடன் நெய்விட்டு பொரித்துச் சாப்பிட்டால் சூடு காரணமாக தோன்றும் வறட்டு இருமல் குறைந்து விடும்.

சாதிக்காய், கசகசா இரண்டையும் அரைத்து பனங்கட்டி பாகில் நெய் கலந்து சாப்பிட உடல் சூடு தணியும்.

# கிருமிநாசினிகளை அவதானமாகக் கையாளுங்கள்

எமது சமூகம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே கிருமிநாசினிகளின் பாவனையும் அதன் ஆபத்தான விளைவுகளும் எமது சமூகத்தை மிகவும் மேசமாகத் தாக்குகிறது. இன்று விவசாயிகள் மாத்திரமின்றி வீட்டுத்தோட்டம் செய்பவர்களும், அலங்காரச் செடிகளை வீடுகளில் வளர்ப்பவர்களும் கூட கிருமிநாசினிகளை உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. எனவே கிருமிநாசினிகள் பற்றி நீங்களும் கூ! அறிந்து கொள்வது அவசியம.

கிருமிநாசினிகள், அதனைத் தெளிக்கும் உங்களுக்கு மாத்திரமின்றி உங்கள் குடும்பத்தினருக்கும். உங்கள் உற்பத்திப் பொருட்களை உபயோகிக்கும் பாவனையாளர்களுக்கும் கூட ஆபத்தை உண்டாக்கலாம் என்பதை மறந்து விடாதீர்கள். குழந்தைகள் அவற்றைத் தவறாக உட்கொள்ளக்கூடும். அல்லது கவலை, கோபம் பேன்ற உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டவர்களும், மனநோயாளிகளும் தற்கொலை நோக்கத்திற்காக உட்கொள்ளக் கூடும். எனவே கிருமிநாசினிகளைப் பாதுகாப்பான இடத்தில் வையுங்கள். பெட்டியினுள் வைத் ( பூட்டித் திறப்பைக் கையில் வைத்திருப்பது புத்திசாலித்தனமானது.

தெளித்த பல நாட்களுக்கு பின்னரும் கூட, கிருமிநாசினியின் நச்சுத்தன்மை தாவரங்களிலும், காய்கறி, பழவகைகளிலும் மறையாது இருக்கும். பொதுவாக தெளித்து 3,4 நாட்களில் நச்சுத்தன்மை குறைந்து விடும். ஆனால் சிலவற்றின் நச்சுத்தன்மை 2-3 வாரம்வரை கூட நீடிக்கும். இது பற்றிய குறிப்புகள் கிருமிநாசினிப் போத்தல்களில் இருக்கும். அதை அவதானித்து, அதற்கேற்றவாறே கிருமிநாசினி தெளியுங்கள். சம்பாத்தியத்திற்காக மனித உயிர்களை பணயம் வைக்கக் கூடாது.


கிருமிநாசினிகள் சுவாசத்தினாலும், தோலினாலும் உறிஞ்சப்பட்டு நச்சுத்தன்மையைக் கொடுக்கின்றன. எனவே தெளிக்கும்போது மூக்கையும் வாயையும், சுத்தமான துணியினால் கட்டிக்கொள்ளுங்கள். அத்துடன் உடல் முழுவதையும் மூடக்கூடிய உடைகளை அணிந்து கொண்டே மருந்து தெளியுங்கள். காயங்கள் அல்லது புண்கள் இருப்பவர் மருந்து தெளிக்கக் கூடாது.

காற்றோட்டம் குறைந்த, குளிர்மையான காலைநேரமே கிருமிநாசினி தெளிப்பதற்குப் பொருத்தமானது. வியர்வையால் நனைந்த உடல் நஞ்சை இலகுவாக உறிஞ்சும் என்பதை மறந்து விடாதீர்கள். தொடர்ந்து இரண்டு மணி நேரத்திற்கு மேல் மருந்து தெளிப்பதை தவிருங்கள்.

காற்று அடிக்கும் திசையை அவதானித்தே மருந்து தெளிக்கவேண்டும் காற்றிற்கு எதிர்த்திசையில் நின்று தெளித்தால், மருந்து தோலினாலும் சுவாசத்தினாலும் உங்கள் உடலுக்குள் சென்று ஆபத்தை விளைவிக்கும்.

மருந்து தெளிக்கும் போது எதனையும் உட்கொள்ள வேண்டாம். உணவு நீராகாரம் ஆகியவற்றை மாத்திரமன்றி வெற்றிலைபோடுதல், புகைத்தல், சிற்றுண்டிகளைக் கொறித்தல்யாவுமே கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

கிருமிநாசினி தெளித்து முடிந்தபின் நன்கு சவர்க்காரமிட்டு உடல்முழுவதையும் சுத்தம் செய்து குளியுங்கள். உடைகளையும் சவர்க்காரமிட்டு நன்கு கழுவுங்கள்.







யாரும் சத்தம் போடக்கூடாது. சத்தம் போடுவது ரவீந்திரன் மாஸ்டருக்குப் பிடிக்காது. வகுப்பு கட்டிறுக்கிய மாதிரி இருக்கவேண்டும். ஒரு சிறு சத்தம் இருந்தால் கூட வகுப்பில் படிப்பிப்பதை நிறுத்திவிடுவார். பிரம்பைத் தொடாதவர். அதில் அவருக்கு நம்பிக்கையுமில்லை. ஒரு மந்திர சக்தியின் மூலமாக வகுப்பை நடத்துவது போலிருக்கும். எப்படியோ அமைதியை அவர் பரிபாலித்தார். அவரிடம் எந்த வசீகரமும் இருக்கிறது என்று நம்புவதற்கில்லை. குரலின் தொனி, பாடங்களைச் சொல்லும் விதம், விளக்கமளித்தல் என்பவற்றிலெல்லாம் அவரில் ஒரு ஈர்ப்பு, சக்தியிருக்கின்றது என்றும் சொல்லமுடியாது. அவருடைய பெயருக்கும் இன்றைய நாகரிகத்துக்குமிடையில் கூட ஒரு நிரவ முடியாத வெளி இருந்தது. அந்த வெளியில் அவர் தனக்கென்று சிலவற்றை உருவாக்கியிருந்தார்.

ரவீந்திரன் மாஸ்டர் கணிதம், விஞ்ஞானம் அல்லது ஆங்கிலம் படிப்பிப்பது தான் அவருக்குப் பொருத்தமாக இருக்கும். அவருடைய பெயருக்கும் அதுதான் ஏற்றது போலிருந்தது. ஆனால் அவருக்கும் இந்தப்பாடங்களுக்கு மிடையில் எந்தத்தொடர்புமில்லை என்பது துரதிஷ்டமானது; வேதனைக்குரியதுமாகும். மதங்களைப்பற்றி அறிந்து வைத்திருக்கும் ஒரு மேதை என்று தான் அவரைச்சொல்ல வேண்டும். இந்துமதம், மதக்கோட்பாடுகள் எல்லாம் அத்துப்படி. ஒரு சித்தர். பக்தி நிறைந்து விளைந்த ஞான உருண்டையே அவரது மூளை. இறைவன் என்று சொல்லும் பொழுதெல்லாம் அவர் கடவுளின் மடியில் கிடந்து பேசுவதாகவே உணரமுடியும். அவர் சமய பாடம் படிப்பிக்கும் போது பாடநேர எல்லையைக்கடந்து போய்விடும். படிப்பிக்கும் வேளை ஒரு பிரசங்கம் நடத்துவது போலவே இருக்கும்.

அவர் படிப்பிப்பதைப்பற்றி வகுப்பில் பெரும்பாலனவர்கள் சலித்தபடி விமர்சிப்பார்கள். எல்லா மாணவர்களின் கணக்கெடுப்பின் படியும் சமயபாடத்தின் மீது சலிப்பதற்கு காரணம் அவர் தான் என்பது முடிவு. ஆனால் எல்லோரையும் தன்னுடன் வைத்திருந்த மாதிரி அவருக்கு ஒரு ராசி. அவர் சொன்னால் மறுபேச்சுக் கிடையாது. வகுப்பறையில் அவர் எப்படி அமைதியைத் தொடர்ந்து அமுல் நடத்துகின்றார் என்பது இன்றைக்கும் புதிராகவே இருக்கின்றது.

இன்றைக்கும் அவர் தன்னுடைய மூக்குக் கண்ணாடிக்குமேலால் பார்த்தபடி இறைவனின் மகிமைபற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். "இந்த உலகம் இறைவனின் சிருஷ்டிப்பு. பிரபஞ்சம் அவரது இரகசியம், சூரியனும் சந்திரனும் பூமியும் வானமும் எல்லாம் எல்லாம் இறைவனின் விழித்திறப்பே!" என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார். அவரது கண்கள் செருகின. ஞானத்தின் உள்நுழைவது போல் முகபாவம் காட்டியது. 'தெய்வம் இல்லையெனில் எதுவுமில்லை' யென மிக நம்பகரமாக உறுதி கூறினார். உணர்ச்சி மேலீட்டால் குரல் சமநிலையற்றுத் தளம்பியது. அவர் இதையெல்லாம் சொல்லும் போது எனக்கு கடைசித்தம்பியின் சமயபாடப் புத்தகத்தில் சந்திரன் சாபம் பெற்றமையே ஞாபகம் வந்தது. சந்திரனைப் பற்றி பல கதைகள் கேட்டிருந்தபோதும் இதுவே தவிர்க்க முடியாதவாறு முன்நிற்கிறது. பிள்ளையார் நடனமாடியதைப் பார்த்து சந்திரன் நகைத்ததும் பிள்ளையார் சந்திரனைச் சபித்ததும் சந்திரன் அழிந்துவருகையில் சிவனிடம் அடைக்கலமாகச் சிவன், சந்திரனைக் காத்தருளியதும் கதை.

இன்னுமொரு விசயமும் உண்டு. நாங்கள் சைவப்பாடத்தைப் படிக்கையில் எங்களுடன் படிக்கும் சில மாணவர்கள் கிறிஸ்தவம் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அவர்களின் கடவுள்தானே எல்லாம்? ரவீந்திரன் மாஸ்டரிடம் இதுபற்றிக் கேட்கவேண்டும் போல அந்தரமாக இருந்தது. இப்படி முன்னரும் யோசித்ததுண்டு. ஆனால் இன்றுவரை அப்படி ஒரு விபரீதமும் நடக்கவில்லை. கேட்டால் அவ்வளவுதான்

**வசந்தராசா**

சாபமும் திட்டும்தான். எல்லாம் ஒரே மாயக் குழப்பமாகவே இருந்தது. ரவீந்திரன் மாஸ்டரிடம் துணிவாகக் கேட்டால் பதில் சொல்லுவார். தான் நம்பும் கடவுளுக்கு உண்மையாகவும் விசுவாசமாகவுமே பதில் இருக்கும். தன்னுடைய கடவுளே கடவுள் என்பார். ஆதாரங்களெல்லாம் அவர் பட்டியலாக்குவார். அவரிடம் இதுபற்றி இப்போது வேண்டாம், பிறகு பார்க்கலாம்.

ரவீந்திரன் மாஸ்டர், பாடம் முடிந்து போய்விட்டார். அடுத்த பாடத்தில் பத்து நிமிடம் துண்டு. இப்போது குகதாஸ் மாஸ்டர். ரவீந்திரன் மாஸ்டரைப்போல இவரும் நல்லவர். குகதாஸ் மாஸ்டர் சமூகக்கல்வி படிப்பிப்பதில் ராசி வாய்ந்தவர். இவரிடமும் பிரம்பு இல்லை. ஆனால் இவரின் பார்வையில் எல்லோரும் கட்டுண்டு போகும் வசியமுண்டு. யாராவது பாடத்தை குழப்பினால் பாடத்தை இடைவெளியில் விட்டுவிட்டு குழம்பிய திசையைப் பார்வையால் விளாசுவார். அந்தப் பார்வையில் ஒரு கருநாகத்தின் கோபம் தென்படும். ரவீந்திரன் மாஸ்டர் விழுங்கிய பத்து நிமிடத்தை சரிக்கட்டும் ஆவலுடன் கடூரமான வேகத்தில் படிப்பிக்கத் தொடங்கினார்.

சூரியனில் இருந்து தான் பூமி பிறந்தது என்றார். பிறகோளங்களும் சூரியனின் உடைவுகளே என்றார். "இவை சூரியக் குடும்பத்தில் ஒரு ஈர்ப்புவிசையுடன் சுழல்கின்றன. சந்திரன் பூமியைச் சுற்றுகின்றது. பூமி தன்னைச் சுற்றி சூரியனையும் சுற்றிவருகின்றது......" என்றெல்லாம் இழைபிரித்தார். உயிரினங்களின் தோற்றம் பரிணாமம் மனிதனின் வளர்ச்சி, சமூக உருவாக்கம் என்றெல்லாம்சொல்லிக் கொண்டிருந்தார்.

எவ்வளவு விடயங்களின் களஞ்சியம் குகதாஸ் மாஸ்டர்? பிரமிப்பாகவும் ஆவலாகவும் இருந்தது. எல்லாப் பாடங்களையும் குகதாஸ் மாஸ்டரே படிப்பித்தால் நன்றாக இருக்குமென ஆசையாக இருந்தது எல்லாப் புதினங்களையும் அறிந்து விடலாம் என்ற ஆசைதான்.

வெளியே மழைசாரலடித்துப் பொழிகிறது. மைதானத்தில் நின்ற மூன்று மரங்களும் உறைந்து விட்டது போல் மழையில் தோய்கின்றன. காற்றில்லை. கச்சான் விற்கும் ஜோசப் அண்ணையைக் காணவில்லை. அவர் எங்கே போயிருப்பார் குகதாஸ் மாஸ்ரரின் பாடத்திலிருந்து எப்படி கவனம் பிரிந்துபோய் கச்சான் வியாபாரியைத் தேடியது? பாடத்திலிருந்து கவனம் தவறியதை குகதாஸ் மாஸ்டர் பார்த்து விட்டார். சட்டென்று மழையைப் பற்றி அவரது விளக்கம் ஒரு விஞ்ஞானப் பகுப்பாக; 'பூமியில் உள்ள நீர் மேற்காவுகையால் மேற்கிளம்பி மீண்டும் பூமிக்கே வருகின்றது. மேற்காவுகைக்கு சூரியவெப்பம் காரணம்.....' அவர் சொல்லிக் கொண்டேயிருக்கின்றார். சிந்தனை தறிகெட்டு அலைகிறது.

நீர் ஆவியாகி மீளவும் நீராகிறது. அது இயற்கையின் விதியாக இறைவனின் அருளா? இயற்கைதான் இறைவனா? இதைத்தான் ரவீந்திரன் மாஸ்டர் சொன்னாரா? புதிர்கள் கிளம்புகின்றன.

குகதாஸ் மாஸ்டர் சொல்லுகிறார்: "சந்திரனில் மனிதன் காலடிபதித்த நிகழ்வு மனித வரலாற்றின் மிகப் பெரிய சாதனை. மற்றக் கோள்களைப் பற்றியும் மனிதனின் ஆராய்ச்சி தொடர்கிறது. மனிதனின் சிந்தனை வளர வளர ஒவ்வொன்றும் புலனாகும். ஒவ்வொன்றும் உருவாகும்."

என்ன? இதெல்லாமென எண்ணங்கள் எழுகின்றனவே! கோவில்களில் புதன், வியாழன், செவ்வாய், சனி, என்றெல்லாம் கிரகதோச அர்ச்சனை செய்கிறார்களே! ஒன்றும் புரியவில்லை இரண்டுமே குழப்புகின்றன.


சிவன் சந்திரனைத் தலையில் சூடினார். சந்திரனில் மனிதன் காலடி பதித்தான். கர்த்தர் உலகத்தைப் படைத்தார். சிவனும் உலகத்தைப் படைத்தார். அல்லாவும் உலகத்தைப் படைத்தார்.

கிரகங்களை மனிதன் ஆராய்ச்சி செய்கின்றான். கிரகங்களுக்கு மனிதர்கள் அர்ச்சனை செய்கின்றார்கள்.

இரண்டிலும் எது சரி? எவை உண்மை? எல்லாமே சரியா? எல்லாமே உண்மையா? இரண்டும் சரியானதொரு புதுவிதியா?

மணி அடித்துவிட்டது. மழை இப்பொழுதும் பெய்து கொண்டிருக்கிறது. இனி, கல்தோன்றி மண் தோன்றாக்காலத்து மூத்தகுடியின் தமிழ் பொழிப்பாட மாஸ்டர் ஸ்ரீகுமரன் வருகின்றார்.

ஜோசப் அண்ணைக்கு இன்றைக்கு வியாபாரம் நடக்காது. மழை அல்லவா.?



## மண்ணின் மைந்தர்களின் கதை

பேரிரைச்சலுடன் கூவிவந்த எறிகணை ஒன்று வெடித்தது. வெடித்த அதே நேரத்திலேயே! தொடர்ச்சியாக எதிரியின் எறிகணை ஏவுதளங்களில் எறிகணைகள் ஏவப்படும் சத்தம் எல்லோருக்கும் கேட்டுவிடவே அனைவரும் காவலரணுக்குள் புகுந்துவிட்டோம்.

ஆனால், டேய் வேகமா ஓடிவாடா.... ஓடிவா என்ற சத்தம் கேட்டவுடன் காவலரண் துவாரத்தினூடாக வெளியில் பார்த்தபோது.

அங்கே மாவீரன் 2ஆம் எறிகணைகள் வெடித்த மாத்திரத்திலேயே! வெளியில் போக எத்தனித்த வெற்றியரசனை ஒரு குரல் தடுத்தது.

வெற்றி நீ சொன்னா கேட்க மாட்டியோ?

உனக்கு எத்தினை முறை சொல்றது என்று அவனது பொறுப்பாளர் மாவீரன் மேஜர் செல்வன் கண்டித்தார்.

வெடிச்சிட்டுத்தானே பிறகு ஏன் உள்ளே இருப்பான்.

இதுக்குள்ள உங்களுக்கு புளுங்கேலேயோ? என ஒரு சாட்டுச்சொல்லி வெளியேறப்பார்த்தவனை மேலும் ஒரு டப்பென்ற சத்தம் தடுத்தது. பொறுப்பாளர் கோபமுடன் பார்க்க, அவன் அமைதியாகத் தலையை குனிந்து கொண்டு நின்றான்.

சில விநாடிகள் நிசப்தத்தின் பின் பெரிய சத்தத்துடன் எதிரியின் 120 மி.மீ எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்தது. அதன் சிதறு துண்டுகள் பட்... பட் என எல்லா இடமும் பட்டுத் தெறித்தன. வெளியில் சென்று பார்த்தபோது நாமிருந்த காவலரணுக்கு அண்மித்தே அது விழுந்திருந்தது. அதைப்பார்த்துவிட்டு பொறுப்பாளர் சீறினார்.

வெற்றியின் காதை பிடித்திருத்திருகிகொண்டு நீ இனி நின்று விடாமல் ஏதேதோ பகிடியெல்லாம் விட்டு ஒருவாறு வெளியேறிவிட்டான்.

பொறுப்பாளரின் பிடியிலிருந்து விடுபட்டவன், சும்மா இருக்காமல் எறிகணை கூவுகின்ற சத்தம் போல வாயால் ஒரு ஓசையை எழுப்பினான். உண்மையாகவே அவன் எழுப்பிய அந்த ஓசை 120மி.மீ எறிகணை கூவிவருவதுபோலவே இருக்க எல்லோரும் சிறிதுநேரம் குழப்பமடைந்துவிட்டோம்.

இப்படித்தான் அவனுக்கே உரியஇயல்பான பகிடியை எந்நேரமும் விடுவான். எந்தநேரமும் அவன் துடிதுடிப்புடனும், கலகலப்புடனுமே இருப்பான்.

2ஆம் லெப். வெற்றியரசன் சிறியவயதில் இயக்கத்தில் இணைந்திருந்தாலும் அதன்பின் அவனது போராட்டவாழ்க்கை அவனை மிகவும் சிறப்பானவனாக மாற்றியது. சண்டையிலும் சரி, எந்தவேலையிலும்சரி, பயிற்சிகளிலும் அவன் சிறப்புடனேயே வாழ்ந்து காட்டியவன். எந்த வேலையென்றாலும், எந்தப்பயிற்சி என்றாலும், அதனை தெரிந்து கொள்ளவேண்டும் என்பதிலும், புதிய புதிய விடயங்களை கேட்டு அறிவதிலும் மிகவும் ஆர்வம் உடையவன்.

கிளிநொச்சி எல்லைக்

வெற்றியரசன் எப்போதுமே அவனது துப்பாக்கியில் சுடுவது குறைவு, சண்டை தொடங்கி சில நிமிடங்களிலெல்லாம் எப்படியோ தனது துப்பாக்கியை தோளில் கொளுவிக்கொண்டுவேறொரு துப்பாக்கியுடன் சண்டைசெய்வான் அது நிச்சயமாக எதிரியினுடையதாகவே இருக்கும்.

எதிரியின் சிறிய ரக துப்பாக்கிகளையும்விட இயந்திரத் துப்பாக்கிகளையே எடுத்து சண்டை செய்வான், அதில் அவனுக்கு ஒரு சிறப்பான விருப்பம் எப்போதுமே இருந்தது.

இதே போன்றதொரு நாள்தான் 04.06.98 அன்று சிங்களப்படை

காவலரணை இணைக்கும் அணிகள் உச்சக்கட்டச் சண்டையைத்தொடுத்தவாறு முன்னேறிக்கொண்டிருந்தனர்.

எதிரிக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலை... எல்லா இடங்களினூடாகவும் எதிரி ஓடிக்கொண்டே இருந்தான் எங்கள் மண்ணை ஆக்கிரமிக்கவந்தவனுக்கு மன்னிப்பே கிடையாது எனும் அள வுக்கு எங்களது துப்பாக்கிகள் அவர் களை நோக்கி சடசடத்தது.

மாவீரன் 2ஆம் லெப். வெற்றியரசன் கையில் ஒரு பீ.கே. இயந்திரத்துப்பாக்கியுடன் சடசடத்த சூட்டுக்களுடன் சுட்டுக்கொண்டே வருகின்றான். எதிரி கைப்பற்றிய எமது காவலரணை பிடிக்க இன்னும் 100யார் தூரமே இருக்க .



# ஒரு தாயின் இரு முத்துக்கள் ஒரே களத்தில் காவியமானார்கள்

லெப்.வெற்றியரசன் வேகமாக ஓடி வந்தான். வந்தவன் தாமதிக்காமல் காவலரணுக்குள் புகுந்து கொண்டவுடன்.

ஆய்... எப்படி... எறிகணைக்கு முன்னே ஓடி வந்திட்டேனே என்று கத்தி ஆரவாரப்படும் போது. சேவியர் கடைச்சந்தி ஒரு முறை அதிர்ந்தே போனது.

டப்...டப்... டப்... என பல 81மி.மீ எறிகணைகளும், 60 மி.மீ எறிகணைகளும் வீழ்ந்து வெடித்தன.



குழப்படி விடுவியோ என்று கேட்டுக் கொண்டே இறுக முறுக்கினார்.

அங்கபார் - நீ வெளியில வந்திருந்தா இப்ப சிதறி இருப்பாய் என்று சொன்னதும்.

அதனாலதான். அது வெற்றி பாவம் என முதலிலேயே விழுந்து விட்டது என நக்கல் விட்டான். அத்தோடு

காவலரண் காலங்களில் ஓர்நாள் எறிகணைகள் மாறிமாறி விழுந்து கொண்டே இருக்கின்றன. அவற்றுக்குள் இடைவெளியைப் பார்த்துப் பார்த்து ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டே இருக்கிறான். எமக்கு கிட்டவாக வந்தவன்.

**— க. மிரேசு —**

அண்ணே... நான் இனி குழப்படி செய்யமாட்டேன் அண்ணேய்..! நான் இனிகுழப்படி செய்யமாட்டேன் என்று அங்கிருந்த அனைவரிடமும் இழைக்க, இழைக்க சொல்லிவிட்டு அடுத்தடுத்துள்ள பல காவலரணுக்கும் சொல்லிவிட்டு மீண்டும் ஓட்டமும் நடையுமாக வந்தான். மூச்சுவாங்க வந்தவனை வெற்றி என்ன மச்சான் நடந்தது என்று கேட்க, ச்சீ ஒன்றும் இல்லை.

குழப்படிவிட்டதற்கு ஒரு தண்டனைதான் வேறொன்றும் பெரிசா இல்லை என்று சொல்லிவிட்டு. திடீரென

டொக்டர் நான் காயப்பட்டா மருந்து கட்டுவியலோ என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

நீ காயப்பட்டா மருந்து கட்டுவன் தானே என்று சொல்ல, நீங்கள் பொய் சொல்லுறியள், நான் காயப்பட்டவுடனேயே செத்திட்டால் என்னவென்று கட்டுவியல் என்று சொல்லிக் கொண்டே அந்தக்காவலரணை விட்டு வெளியேறினான்.

அவனது அந்தவார்த்தை எங்களைச்சுட்டுக்கொண்டே இருந்தது மட்டுமல்ல, பெரும் தீப்பிளம்பாய் எழுந்திடவும் செய்தது.

மாவீரன் 2ஆம் லெப். வெற்றியரசன் (செல்வராசா சுரேஸ்) திறமையானதொரு விடுதலைப்போராளி, அவன் சிறப்பான சண்டைக்காரன். சண்டையென்றால் உற்சாகமாக இருப்பான்.

கனகபுரத்தில் ஒரு பாரிய படையெடுப்பை மேற்கொண்டான். இரண்டு முனைகளில் எதிரியின் முன்னேற்றமிருந்தது. அதை விட திசைதிருப்பும் வகையில் வேறு முனைகளிலும் எதிரி தனது தாக்குதலை தொடுத்து இருந்தான்.

தளபதி தீபன் அவர்களின் கட்டளையின் கீழ் அனைத்து அணிகளும் களமிறங்கிவிட்டன. சண்டை உக்கிரமடைந்து கொண்டிருக்கும்போது மாவீரன் மேஜர் செல்வனின் சிறப்பு அணி களமிறங்கிவிட்டது. அதில் மாவீரன் லெப். வெற்றியரசனும் ஒருவன்.

எதிரியின் அணிகள் முன்னேறி கிளிநொச்சி,கந்தபுரம் வீதியைக் கடந்து தனது ஆரம்பநிலை காவலரணை கட்டுப்பாட்டில் கொண்டுவரவே திட்டமிட்டு மூர்க்கமாக முன்னேறினார்கள்.

விடுவார்களா புலிகள். சண்டை உக்கிரமடைந்துவிட்டது. .எறிகணை மழைகள் பொழியத் தொடங்கிவிட்டன. பால்பண்ணை தொடக்கம் மீனாட்சி அம்மன் கோவிலடிவரைக்கும், கடும் சண்டை நடந்துகொண்டிருந்தது.

எமது எல்லைக்காவலரணைக் கடந்து வந்த எந்தச் சிங்கள மிலேச்சர்களும். திரும்பி உயிருடன் போகக்கூடாது என சண்டை செய்து கொண்டிருந்தோம்.

சுடு...சுடு... ஒருவனும் திரும்பிப் போகக்கூடாது என்பதில் எல்லோரும் உறுதியோடு இருந்ததினால் எதிரியின்பாடு பெரும்பாடாகிவிட்டது.

காலை 6.00மணிக்கு தொடங்கிய சண்டை பகல்முழுவதும் பெரும் பூகம்பமாயும், பூமிஅதிர்ச்சி போலவும் இருந்தது. கிழக்கு , மேற்கு பக்கமாக

சண்டை உக்கிரமடைகின்றது.

இரண்டு பக்கங்களிலும் உள்ள போராளிகள் மாறிமாறி கை எறிகுண்டை கழட்டி எறிகின்றனர். அது வெடித்துச் சிதறப் பல எதிரிகள் மாண்டு போக, சில எதிரிகள் தப்பி ஓட்டமெடுக்கின்றனர். விடாதே அடி... விடாதே அடி. என்று எல்லோரும் ஒருமித்து கத்துகின்றனர்.

இரண்டுபக்கங்களிலிருந்தும வந்த அணிகள் இருட்டிவிடுவதற்குள் பிடித்துவிடவேண்டும் என்று ஆவேசத்துடன் முன்னேறத் தொடங்கிவிட்டனர்.

இப்போது சரியாக 5.45 அணிகள் இரண்டும் எதிரியை சிதைத்துக் கொண்டு சண்டையை வெற்றிகொண்டவ்ண்ணம் வந்துகொண்டிருந்தும் நாம் இணைய இன்னும் 25 யார் தூரமே இருந்தது. எமக்கு எதிர்ப் பக்கமாக சண்டையிட்டுக் கொண்டு வந்த சிறுத்தைப்படையணி போராளிகளும், விக்ரர் கவச எதிர்ப்பு அணிகளும் விடாதே அடி அடியென எதிரியைக் கடுமையாகத் தாக்க எதிரியும் சுட்டுக்கொண்டே ஓடிக் கொண்டிருந்தான்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

# கண்ணீர்க்காலம்

கறுப்புத்திரை மூடிய கணத்தில்
என் உணர்வும் வசந்தமும்
புதைந்து போக அழுத கண்ணீர் காலம்.

குருதியின் கறைகளில்
நிமிர்ந்தும், வளர்ந்தும், வாழ்ந்தும்
நீண்ட காலப் பெருவெளியில்.

தனித்துப் போன என் வாழ்வும்
வெற்றிடமாய் ஆன இனிமைக் காலமும்
சோகத்தின் ரேகைகள் நடுவே தெரிகிறது.

சுடும் பெருமூச்சின் நுனிவில்
அந்த கால வாழ்வு என் கண் முன்
தாயின் தாலாட்டு சோறூட்டு.

தலை தடவும் அன்புக்கரம்.
தாயின் கருவறையில் ராஜ போக வாழ்வு
மண்ணில் புது மலராய் பிறந்த போது
என் கண்ணில் குருதிக்கறைகள்.

இப்போ நரை விழுந்த முதிர்வில்
இருளின் அகழ்வுக்கும் ஒளியின்
வரவுக்கும். இனிய காலத்தை எண்ணி.

சு.அமரேசன்

# எட்டப்பா உனக்கு இறுதி எச்சரிக்கை

காட்டிக் கொடுக்கிற எட்டப்பா-உன்
கட்டுக்கதை ஏட்டைக் கட்டப்பா
நாட்டைக் கெடுப்பதை விட்டப்பா-வெளி
நாட்டுக்குக் கம்பியை நீட்டப்பா

மூட்டைச் செயலினை விட்டப்பா-உன்
மூட்டை முடிச்சினைக் கட்டப்பா
சாட்டை அடிவிழும் முன்னப்பா-உன்
சீட்டுக் கிழிந்திடும் பின்னப்பா

கோடிப் புறமாகச் சென்றப்பா-நீயும்
கும்பிட்டு வாழ்கிறாய் நின்றப்பா
பேடித் தனமிதைச் செய்தப்பா-இன்னும்
சோடித்துச் சொல்லுறாய் பொய்யப்பா

பட்டம் பதவிகள் கேட்டப்பா-நீயும்
பந்தம் பிடிப்பது ஏனப்பா?
பட்டப் பகல்போல இன்றப்பா-உன்
திட்டம் தெரிந்தது நன்றப்பா

கொட்டி முழக்கிய வீரப்பா-மனக்
கோட்டை இடிவது பாரப்பா
கெட்டித் தனமெல்லாம் வீணப்பா-நாடு
கேலிதான் செய்யுது காணப்பா

ஏமாளிக் கும்பலைக் கூட்டப்பா-உன்
கோமாளிக் கூத்தினைக் காட்டப்பா
கோடரிக் காம்பாக நின்றப்பா-தமிழ்
குலத்தைச் சிதைப்பதேன் கொன்றப்பா

திட்டிய வாயினைப் பூட்டப்பா-தமிழ்
தேசம் விழித்தது கேட்டப்பா
முட்டாள் தனத்தினை விட்டப்பா-ஒரு
மூலை முடுக்கினில் ஒட்டப்பா
துட்டுக்குத் தாளம் நீ போட்டப்பா-செய்த
தொண்டினை இன்றுடன் விட்டப்பா
வெட்கத்தைக் கக்கத்தில் வைத்தப்பா-உன்
வேடம் கலைத்து நீ ஓடப்பா.

ஆரையூர் அமரன்

# நூல் நயம்

## இருள் இனி விலகும்

இலக்கியம் என்பது இயல்பாய்ப் பிறப்பது. ஆற்றல் உணர்வு, இலக்கு, அனுபவம், சூழல், முயற்சி-இவற்றில் ஒட்டு மொத்த ஊடாட்டத்தின் பேறாய் விளைவது. நல்லிலக்கியங்களின் தோற்றுவாய்க்கு இவையாவுமே அவசியம். தமிழ்க்கவிக்கு இத்தனையும் வாய்த்திருப்பதனால்- இதுவரை அறுவடையாய்ப்- பொலிந்தவை இரண்டு, 'இனிவானம் வெளிச்சிரும்' 'இருள இனி விலகும்.'

இரு ஆக்கங்களின் தலைப்புக்கள் மட்டுமல்ல அவற்றின் தொனிப்பொருட்களுங்கூட உறுதியினதும், நம்பிக்கையினதும், எதிர்கால விடிவினதும் வெளிப்பாடுகளாய் அமைந்தவை.

'இருள் இனி விலகும்' நாவலின் கதையமைப்பு எல்லோருக்கும் வாய்க்காத ஒன்று என்பதோடு, எல்லோராலும் கையாளப்பட முடியாததுமாகும். தமிழ்க்கவிக்கு அது சாத்தியப்பட்டிருக்கிறதென்றால், அவர் போராளியாகவும் படைப்பாளியாகவும் இருக்கிற சிறப்பே அதன் மூலம்.

பெரும்பெயர்வின் பின் அடுத்து வந்த ஆண்டு வன்னியிலிருந்து பொன்னேரி தாண்டிப் பெருநிலப்பில் ஊடுருவி தம் ஓர்மத்தை நிலைநாட்டத் திட்டங்கொண்ட பெண்போராளிகளின் வீரமிகு கதைதான், 'இருள் இனி விலகும்' ஆண்போராளிகளும் அவர்தம் பங்களிப்பும் ஆங்காங்கே இடம்பெறுகின்றதெனினும்; முன்னவரின் முனைப்புக்களும், போராட்டங்களும், சாதனைக்களுமே நாவலில் குவிமையப்படுத்தப்படுகின்றன.

இந்நாவலைப் படிக்கிற போது, இரண்டாம் உலகப்பெரும் போரைப் பின்னணியாய்க் கொண்டு ருஷ்ய எழுத்தாளர் பாீஸ் வஸீலியெவ் எழுதிய 'அதிகாலையின் அமைதியில்' என்கிற நவீனம் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமைகிறது. எனினும், பின்னர் நிதானமான ஓர்ம எடைபோடலில், 'இருள் இனி விலகும்' நாவலின் கனதி மிகஅதிகமென்பதை இலகுவில் உணர்ந்துவிட முடியும்- இத்தனைக்கும் 'அதிகாலையின் அமைதியில்' வெற்றுப்படைப்பன்று; அது உண்மைச் சம்பவங்களினடியாய் எழுந்தது; முதலிற் படிக்கநேர்ந்த காலத்தில் வாசகரை மெய்சிலிர்க்க வைத்த படைப்பு இரு கோடுகள் தத்துவத்தையும், இதனால், நிரூபிக்கிற பெருமையையும் 'இருள் இனி விலகும்' எளிதில் தனதாக்குகிறது.

நாவலோட்டத்தில், பெண்போராளிகளின் அடக்கஇயலா ஆர்வத்துடிப்பு, கடும் பயிற்சிகள், கடைசியிற் களம்-என்றெல்லாமே வாசகர் மனதில் வேர்விடும் வலிமையுடன் படமாக்கப்பட்டுள்ளன. எனினும், ஆர்வம், பயிற்சி, பற்றிய சித்திரிப்புகள், களமிறங்கிய பின் இடையிடை பின்னப்பட்டு, நனவோடைக் கோலங்களாய்த் தீட்டப்பட்டிருப்பின், கதையோட்டம் மேலும் தீவிரம் பெற்றிருக்குமோ என்றும் ஓர் எண்ணம் எழுந்தது.

இருப்பினும், இக்கட்டமைப்பிலேயே கூட. எடுத்தால் படித்து முடிக்காமல் வைக்க முடியாத ஆர்வத்தூண்டல் இருப்பதை மறுக்க முடியாது. தணிகைச்செல்வி, இளவதனி, பெரிய நிசாந்தி, சின்ன நிசாந்தி பூமணி, பிரசன்னா, லோகா, தாகினி என்ற இந்த மாவீரர்களின் உள்ளங்கள் உருக்கென உரமேறி எதையும் சாதிக்கும் வலிமை பெற்ற அந்த அற்புதத்தையும், அந்த அற்புதத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிற ஆற்றலையும் எண்ணி வியக்கச் செய்கிற வகையில் நூலின் ஒவ் வொரு பக்கமும் அமைந் துள்ளமை, தமிழ்க்கவியின் வெற்றி.

இவ் வீராங்கனைகள் இறங்கிய களம், வழமைக்கு மாறானது. எந்த சாதகமுமில்லாமை மட்டு மன்றிப் பண்மடங்கு பாதகமானதுங்கூட, இவையாவும் நன்கறிந்து தம் திடமும்தீரமுமே துணையாகக் கொண்டு களமிறங்கிய இச்சாதனை சரித்திரமே. இந்நூலில் அது இலக்கியமாகவும் ஆக்கம் பெற்றுள்ளது. வரலாற்றுப் பதிவாகவும், இலக்கியப்




படைப்பாகவும் ஒரே வேளையில் மிளிரும் ஒரு நூலைப் படைத்த தமிழ்க்கவியும் வெளியிட்ட அறிவமுது பதிப்பகத்தினரும் காலத்தின் தேவையை நிறைவேற்றுங் கடமையில் பங்களித்துள்ளனர் என்பதே உண்மை.

சாந்தன்

# படித்ததில் பிடித்தது

## கலில் ஜிப்ரான்

### 'முத்துச் சிப்பி'

ஒரு முத்துச் சிப்பி மற்றொரு சிப்பியிடம் கூறியது.

''எனக்கு வயிற்றுவலி தாங்க முடியவில்லை...: வயிறு முழுக்க வலிக்கிறது"

இதைக்கேட்டுக்கொண்டிருந்த சிப்பி சொன்னது.

"அப்பாடா... நல்லவேளை எனக்கு வலி ஏதும் இல்லை. நான் சௌக்கியமாக இருக்கிறேன்"

அந்த வழியே சென்ற நண்டு, இந்த சிப்பிகள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு விட்டு, சௌக்கியமாக இருப்பதாக தம்பட்டம் அடித்துக்கொள்ளும் சிப்பியைப் பார்த்துக் கூறியது.

"ஆமாம்... நீ சொன்னதைப் போலவே நீ சௌக்கியமாகத்தான் இருக்கிறாய். ஆனால், வலியால் துடிக்கும் இந்தச் சிப் பியோ தன் வயிற்றில் ஓர் அழகான முத்தை அல்லவா சுமந்துகொண்டிருக்கிறது."

### நாகரிகம்

மூன்று நாய்கள் கூடிப்போசிக்கொண்டன... முதல் நாய் கூறியது... "இந்த உலகில் வாழ்வது மிகவும் இனிமையானது. நாம் எங்கு பார்த்தாலும் செல்லமுடிகிறது. நம் ஐம்புலன்களும் அனுபவிக்கும் வகையில் புதிய புதிய கண்டுபிடிப்புகளை நமக்குத் தந்துகொண்டிருக்கும் இறைவனுக்கு நன்றி சொல்வோமாக"

இரண்டாவது நாய், "நாம் கலைகளை மதிக்கிறோம், பாரம்பரியத்தைப் போற்றுகிறோம். மூதாதையர்களைவிட நாம் நிலவைப் பார்த்து நன்றாகவே குரைக்கிறோம். நீரில் நம்மைப் பார்த்துக்கொள்ளும்போது, நேற்று தெரிந்ததைவிட உருவம் இன்று மிகவும் தெளிவாகத் தெரிகிறது" என்றது.

இப்போது மூன்றாவது நாய் பேசியது... "எனக்கு மிகவும் பிடித்ததும் மகிழ்ச்சிதருவதும் என்னவென்றால், இந்த நாய்க்குலத்திற்கிடையே உள்ள அமைதியும் நட்புறவும்தான்."

இந்த நேரத்தில், நாய் பிடிப்பவன், அவறைப் பிடிக்கநெருங்கினான். மூன்று நாய்களும் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தன... ஓடும்போது, மூன்றாவது நாய் கூறியது

"ஓடு..ஓடு.. வேகமாக ஓடு.. நாகரிகம் நம்மைத்துரத்துகிறது"

முழுத்தீவகத்தையும் ஆக்கிரமித்து - யாழ்ப்பாண நகரை கைப்பற்றும் சிறிலங்காப்படையினரின் முதற்கட்ட இராணுவ நடவடிக்கைக்கான தயார்ப்படுத்தல் மேற்கொள்ளப்படுகையில்.

காரைநகர் சிறிலங்கா கடற்படைத்தளத்தில் ஒரு முக்கிய தாக்குதல் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

காரைநகர்:- காரைதீவு- இது வட்டுக்கோட்டை பொன்னாலை இருந்து பெருநிலப்பரப்புடன் தாம்போதி மூலம் தரைவழி தொடர்பு கொண்டதீவு. இதன் தெற்குப்பகுதியில் சீநோர் நிறுவனம் இருந்தது. இது படகு கட்டும் தொழிற்சாலையாக விளங்கி வருகின்றது. நோர்வே இதனை இயக்கி வந்தது. இது சிறிலங்காப்படையினரால் அழிக்கப்பட்டு விட்டது. இந்த தெற்குப் பகுதியில் ஒரு பக்கம் ஆழ்கடலையும் - ஒரு பக்கம் களப்புக்கடலையும் கொண்ட நீலங்காடு கிராமத்தில் பிரிட்டிஸார் ஒரு கடற்படைத் தளத்தை அமைத்திருந்தனர். 1957இல் பிரிட்டிஸார் இலங்கையின் தம்பெயரிலான றோயல் கடற்படையை சிங்கள ஆட்சியாளரிடம் ஒப்படைத்தனர். அப்போது காரைநகர் நீலங்காடு- பிரிட்டிஸ் கடற்படையின் 'எலரா' (எல்லாளன்) தளம் சிங்களப் படைகளின் கைக்கு மாறியது.

காப்புக் கடலை கொண்டதால் இது ஒரு சிறந்த ஒரு துறைமுகமாக- வெளியில் இருந்து எதிரிகளால் பார்க்கமுடியாதவாறு தீவுகளால் மறைக்கப்பட்டிருந்த ஒரு முக்கிய மறைவிடத்துறையாக பிரிட்டிஸ் கடற்படைக்கு இத்தளம் இருந்தது. இந்த எலரா பிரிட்டிஸாரின் வடபகுதி கடற்படை தலைமைத்தளமாகவும் விளங்கியது. பண்டைக் காலத்தில் இலங்கைப்படையெடுப்பில் சோழர்களின் கடற்படையின் முக்கிய துறைமுகமாக- யாழ்ப்பாணத்தின் முக்கிய பணியகத் துறைமுகமாக வணிகப்பட்டினமாக நீலங்காட்டுக்கு நேர் எதிரான ஊர்காவற்றுறை விளங்கியது.

இந்த பிரிட்டிஸாரின் எலரா கடற்படைத்தளம் சிறிலங்கா கடற்படைக்கு மாறியது. அதன் பின் தமிழ் மக்களின் மீதான அடக்கு முறைக்கான தளமாக 1970களின் கடைசியில் இது மாறியது. நீலங்காட்டின் ஒரு பகுதியில் இருந்த 'எலரா' தளம் 1980களின் நடுப் பகுதியில் விரிவானது. நீலங்காட்டில் இருந்த பொதுவேலைத் திணைக்களத்தின் படகுதிருத்தத் தளம் ஆக்கிரமிக்கப்பட்டது. சீநோர் படகு கட்டும் - நோர்வேயின் தளம் அழிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. எலரா சிறிலங்கா கடற்படையின் தலைமையகமாக (comnorth)

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

15



மாறியது 1990 திரிவிடபலய கொலைவெறி நடவடிக்கையின் பின் தளமாக இது விளங்கியது என்பது அறிந்த ஒன்று. இதன் பின்னணியில் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு சிறிலங்கா படைகள் தயாரானவேளையில் - ஒரு பலமான தாக்குதலை விடுதலைப்புலிகள் தொடுத்தனர்.

1991ஏப்ரல் 1ஆம் திகதி எலரா கடற்படைத்தளத்தின் வடபகுதி மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். இந்த பலமான தாக்குதலை விடுதலைப்புலிகள் ஆரம்பித்தபோது சிறிலங்காக்கடற் படைக்கு சிறிலங்கா வான்படை பின்னணிகொடுத்து தாக்குதலை நடத்தியது. 10ஆம் திகதி வரை காரைநகர் கடற்படைத்தளம் மீதான தாக்குதல் நீடித்தது. அவ்வேளை சிறிலங்கா கடற்படை வட தளபதியாக கப்டன் A.H.M. ரசீக் காரைநகர் தளத்தில் இருந்திருந்தார்.

பல நாள்கள் தாக்குதல் நீடித்ததில் கடற்படைக்கு பலமான இழப்புகள் ஏற்பட்டன. முதல்நாளில் 4 கடற்படையினரும், 9 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட கடற்படையினரில் ஒருவர் அதிகாரித் தரத்தை சேர்ந்தவர். இராணுவத்தில் ஒருவர் லெப்டினன் ஆவார். இந்த சூழலில் காரைநகரில் சிறிலங்கா கடற்படையுடன் இராணுவமும் இணைந்து கொண்டது. யாழ்சிறிலங்காப்படைத்தளபதி பிரிகேடியர் விஜயவிமலரத்ன (1992இல்அராலியில் கொப்பேகடுவவுடன் பலியானவர்) காரைநகரில் இராணுவத்திற்கு தலைமை தாங்கினார்.

7ஆம்திகதி காரைநகர் பெரும்போர்க்களமானது. சிறிலங்காவின் பலமான முப்படைகளுக்கு எதிராக விடுதலைப்புலிகளின் 1991ஆம் ஆண்டுகால அணி பலமாக மோதிக் கொண்டிருந்தது. இந்த தாக்குதல்களில் பிரிகேடியர் விஜயவிமலரத்ன விடுதலைப்புலிகளின் எறிகணையால் 4ஆம் திகதி காலை காயமடைந்தார். விடுதலைப்புலிகளின் 'பசிலன்' எறிகணையின் வெடிப்புச் சிதறலால் விஜயவிமலரத்ன 4ஆம் திகதி காலில் காயமடைந்தார் என சிறிலங்கா இராணுவப் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 7ஆம் திகதியன்று நடந்த தாக்குதலில் சிறிலங்கா கடற்படை 2ஆம் லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் எறிகணை ஒன்று கடற்படை தலைமையகத்துள் வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்டார். காரைநகர் எலராதளத்தின் கட்டடங்கள் பல விடுதலைப்புலிகளின் எறிகணைத்தாக்குதலில் அழிந்தன- சேதமாகின.

10ஆம் திகதி விடுதலைப்புலிகள் கடற்படைத்தள மைய கட்டடம் ஒன்றின் மீது நடத்திய எறிகணைத்தாக்குதலில் 13கடற் படையினர் கொல்லப்பட்டனர். SL கடற்படையினர் காயமடைந்தனர். 10ஆம் திகதியுடன் காரைநகர் கடற்படைத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் முடிவுக்கு வந்தது. சிறிலங்காப்படைகளுக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தி அந்தத்தாக்குதல் விடுதலைப்புலிகளுக்கு புதிய பரிணாமத்துக்காக ஒரு அடித்தளத்தையும் இட்டது.

துருவன்




# அக்கராயன் காட்டில் தொன்மைக்கால குளங்கள்

கிளிநொச்சி அக்கராயன் காட்டுப் பகுதியில் தொன்மைக் கால குளங்கள் இரண்டு அணைக்கட்டுக்கள் உடைப்பெடுத்த நிலையில் இனங்காணப்பட்டு இருந்ததாக அறிக்கை வெளியிட்டது.

இந்த வகையில் புனரமைக்கப்படாத, பயன்பாட்டில் இல்லாத நூற்றுக்கணக்கான பண்டைய குளங்கள் காடுகளில் கிடக்கின்றன.

இந்தக் குளங்கள் சிறியளவாகையால் இவற்றின் புனரமைப்பு மூலம் காடுகள் அழியும் என்ற சூழல் மாசுறுதல் பிரச்சினை இல்லை. பெரிய- நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களின் கட்டுமானத்தில் பெருமளவு காடுகள் அழிக்கப்படும் நிலைமை இருப்பதால் பாரிய நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் அமைக்கப்படுவதற்கு இப்போது உலகளவில் ஆதரவில்லை. சுற்றுச்சூழலை வலியுறுத்துகிறது. இதற்கு முன்னோடியான ஒன்றுதான் அக்கராயனில் கண்டு பிடிக்கப்பட்டு மக்களால் சுயமாக இரு குளங்கள் துப்புரவு செய்யப்படுவதாகும்.



இரு குள அணைகளும் தொல் பொருள் தேடலின் போது கண்டுபிடிக்கப்பட்டதாகும். இரு குள அணைகளும் ஒவ்வொரு இடத்தில் உடைப்பெடுத்து இருக்கின்றன. அக்கராயன் குள வலதுகரை வாய்க்காலில் இணைத்துள்ள யூனியன் குளம், சண்முகநாதன் குளம், கோணாவில் குளம் என்பன உள்ளன. கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரு அணைகளுக்குரிய குளங்களும் அதிகளவு நீரைக் கொள்ளத்தக்கவை. இவற்றின் மூலம் அக்கராயன் குளத்தின் கீழான பயிர்ச் செய்கைப்பரப்பை அவை மக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இவை சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் வகையைச் சேர்ந்தவை வன்னியில் பண்டைக்கால மக்களின் குடியிருப்புக்கள் ஆறுகளை மறித்து கட்டப்பட்ட சிறிய குளங்களுடன் இருந்திருக்கின்றன. அவற்றின் உடைப்பெடுத்த அணைக்கட்டுக்களை இப்போதும் வன்னிக் காடுகளில் காண முடியும். இப்பொழுது உள்ள பாரிய நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் கூட பண்டைய கைவிடப்பட்ட குளங்கள் ...ள புனரமைக்கப்பட்டு கொள்ளளவு அதிகரிக்கப்பட்டுள்ளவை ஆகும். அத்துடன் இப்போதுள்ள சிறிய குளங்களும் பெரும்பாலும் பண்டைய குளங்களின் புனரமைக்கப்பட்ட வடிவங்கள்தான். இந்தக் குளங்களின் கட்டுமானங்கள் 2000 ஆண்டுகட்கு முன்பே வந்துவிட்டன. தமிழ் மக்களின் பெருங்கற்கால பண்பாடு குளங்களுடன் இணைந்ததாகும். இது 2000 முதல் 3000 ஆண்டுகள் வரை தொன்மையானது. ஆரியர் வருகையுடன்தான் கி.மு 5 ஆம் நூற்றாண்டின் பின்தான் இலங்கைக்கு குளக்கட்டுமான நுட்பம் வந்தது. என்ற மகாவம்ச இனவாத கருத்துக்கு புறம்பாக- இலங்கையின் தொல்லியல் திணைக்களம் கி.மு. 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்பதாகவே உலர் வலயப்பகுதிகளில் குளக்கட்டுமான நுட்பம்



பாரிய நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் அமைப்பு பாதிக்கும். அத்துடன் பூமியதிர்வுக்கு காரணமாக இருக்கும் என்பதாலேயே இதற்கு ஆதரவில்லை.

வன்னிக்கு அடிக்கடி வந்து சென்ற ஜப்பானிய தூதுவர்கள் சிறுகுளங்களை புனரமைக்கவே தாம் விரும்புவதாகக் கூறினர். பாரிய நீர்ப்பாசன குளங்கள் அமைப்பு/புனரமைப்பு காலம் நீண்டதாகும். செலவு அதிகமானதாகும். சூழல் பாதிப்பு ஏற்படும் எனக் காரணங்களை அவர்கள் தெரிவித்தனர். இந்த வகையில் புதிதாக பாரிய நீர்ப்பாசனக் குளங்களை அமைப்பது இனி சாத்தியமில்லை ஆயினும் சிறிய நீர்ப்பாசன குளங்களை புனரமைப்பது நீர்பற்றாக்குறையைத் தணிக்க உதவும். நீர்ப்பற்றாக்குறை சம காலத்தில் குடிநீர் முதல் வேளாண்மை வரை பெரும் நெருக்கடிகளை கொடுத்து வருகின்றது. இது கைவிடப்பட்டுக் கிடக்கும் பண்டைக் குளங்கள் புனரமைக்கப்படும் அவசியத்தை அதிகரிக்க முடியும். வழமை போல வரும் வரட்சியை தணிக்க முடியும். அக்கராயன் முறிகண்டி வீதியோர குடியிருப்புக்களின் கிணறுகளில் நீர் மட்டத்தை அதிகரிக்க முடியும்.

இந்த இரு குள அணைகளையும் - மீளமைக்க முன்னோடியாக அக்கராயன் வலதுகரை மக்களே தாமே முன்வந்து துப்புரவு செய்து வருகின்றனர். தமக்குரிய கட்டுமானங்களை மக்கள் தாமே செய்கின்ற போது ஒரு உரிமைகொள்பற்று அதிகமாக இருக்கும். யாரோ செய்வார்கள் என எதிர்பார்த்திருக்காது தமக்கானதை மக்கள் தாமே செய்து கொள்ள வேண்டும். இது பற்றையும் சமூக ஒற்றுமையையும் அதிகமாக்கும். இத்தகைய பொதுப பணிகள் சமூகத்தில் அருகி விட்டன. அது மீளவேண்டும் அதன் ஒரு பகுதியாகத்தான் அக்கராயன் மக்களின் பணியும் கூட.

குரலோன்

# காதல் எங்களுக்கு மட்டுமல்ல பூச்சிகளுக்கும் தான்

நம்மைப் பொறுத்தவரை, காதல் எனப்படுவது இரண்டு இதயங்களின் சங்கமம். ஆனால் சற்றே உற்று நோக்கினால் ஓர் உண்மை புலப்படும். அதாவது காதல் எனப்படுவது, இல்லறத்தில் இணைந்து, அடுத்த சந்ததியை உருவாக்கும் ஓர் ஆரம்பத் திறவுகோல்! இது அனைத்து உயிரினங்களுக்கும் பொருந்தும். என்ன, நாமெல்லாம் திருமணமாகி, குடும்பம், குழந்தை என ஒரு கட்டுக்கோப்புடன் வாழ்வோம். மற்ற உயிரினங்களுக்கு இந்த கட்டுக்கோப்பு இல்லை. ஆனாலும் காதல் லீலைகள் எல்லாம் மற்ற உயிரினங்களுக்கும் உண்டு. அதிலும் இந்த பூச்சிகளின் காதல் விளையாட்டுக்கள் மிக மிக சுவாரஸ்சியமானது மட்டுமல்ல- சுவையானதும் கூட.

நாமெல்லாம் திருமணமான முதல் மாதம் சம்பளம் வாங்கியதும் என்ன செய்வோம்? காதல் மனைவிக்குப் பிடித்தவற்றை வாங்கி வந்து (??!!) கலக்குவோமில்லையா?(''அப்படியா'' என கேட்பது புரிகிறது; ஒரு பொதுவான கருத்தை சொன்னேன்.... அவ்வளவே!!!) ஒரு சில பூச்சிகளுக்கும் இந்த பழக்கம் உண்டு. கருமுனை தொங்கும் ஈ என்று ஒன்று உண்டு. ஒன்றுமில்லை, இவர் எப்பவுமே இலைகளின் அடியில்தான் தொங்கிக் கொண்டிருப்பார். அதனால்தான் இந்தப்பெயர்.புணர்தலுக்கு விழையும் பெண்; ஆண் பூச்சியை புணர்வுக்கு அழைக்கும். இதற்காக, பெண் பூச்சி ஒருவித பிரத்தியேக தூது வேதியை காற்றில் கலந்துவிடும். இந்த சமிக்ஞை கிடைத்தவுடன், ஆண் பூச்சி பெண்பூச்சிக் குப் பரிசு தேடி வேட்டைக்குச் செல்லும் இந்த பரிசு"காதல் பரிசு" எனப்படும். ,பெண்பூச்சிக் குப்பிடித்தமான, சுவையான உணவை ஆண்பூச்சிகள் வேட்டையாடிக் கொண்டுவரும். இந்த போட்டியில் பல ஆண்பூச்சிகள் இருக்கும். இருப்பினும், யாரொருவர் மிகப்பெரிய காதல் பரிசைக் கொண்டு வருகிறாரோ, அவரே பெண்பூச்சியுடன் புணர்ச்சிக்கு அனுமதிக்கப்படுவார். மற்றவரெல்லாம், "வாங்கமச்சான் வாங்க - வந்த வழியைப் பார்த்து போங்க'' என்று வந்த வழியே திருப்பி விரட்டப்படுவர். புணர்ச்சியில் இருக்கும் போதே, பெண் பூச்சி ஆண்பூச்சி அளித்த காதல் பரிசைச் சுவைத்துக் கொண்டிருக்கும். ஒரு வேளை, ஆண்பூச்சி புணர்ச்சியை முடிக்கும் முன்பே, பெண்பூச்சி சுவைத்துக் கொண்டிருக்கும் காதல் பரிசு முடிந்து விடுமானால், உடனடியாக பெண்பூச்சி தன்னைக் கலவியிலிருந்து விடுவித்துக் கொள்ளும். மேலும், அந்த ஆண்பூச்சியையும் அடித்து விரட்டிவிடும். எனவே, கொஞ்சம் விவரமான ஆண்பூச்சி, புணர்ச்சி முடியும் வரை தீராத அளவிற்கு, மிகப்பெரிய காதல் பரிசைக் கொண்டுவந்து விடும்.

அடுத்ததாக தட்டான் பூச்சிகள்; நாமெல்லாம் வண்ண வண்ணமாய், சிறிதும் பெரிதுமாய் தட்டான் பூச்சிகளைப் பார்த்திருப்போம். அவற்றின் வாழ்க்கையிலும் காதல் உண்டு.




இந்த தட்டான் பூச்சிகளில், ஆண்பூச்சி தனக்கென ஒரு அதிகார பரப்பை வைத்திருக்கும். இந்த அதிகார வரம்பிற்குள், மற்ற ஆண்தட்டான்கள் நுழைய முடியாது. மீறி நுழைபவர்கள், சந்தேகமின்றி விரட்டியடிக்கப்படுவர். ஆனால், மற்ற தட்டான்களின் கண் மற்றும் கைப்படாத பெண்தட்டான்கள் வந்துவிட்டால், இராஜ உபசாரம் தான்!!! ஒரே ஆட்டம் பாட்டம். கொண்டாட்டம்தான் !!!! காதலில் மூழ்கி, புணர்ச்சியில் திளைத்து எழும், ஆனால் ஆண் தட்டான், தன் காதலி இதற்குப் பின்னர், வேறு எந்த ஆண் தட்டானுடனும் பள்ளி கொள்வதை விரும்பாது.ஏனெனில்தன் காதலி மூலம் பிறக்கும் குழந்தைகள் தன்னுடையதுதான் என்பதை நிலைநாட்டவே விரும்பும். எனவே, புணர்ச்சியை முடித்த பின் ஆண்தட்டான், பெண்தட்டானின் இனஉறுப்பை ஒருவித சுரப்பியினைக் கொண்டு அடைத்துவிடும். மேலும், இந்த ஆண் தட்டான்களில் இன்னொரு ஆச்சரியமும் உண்டு. பொதுவாக பூச்சிகளைப் பொறுத்தவரை, ஆண் பூச்சிகளில் இனஉறுப்பு அடிவயிற்றின் 9ஆவது கண்டத்திலும், பெண்பூச்சிகளில் இன உறுப்பு அடிவயிற்றின் 7,8ஆவது கண்டத்திலும் இருக்கும். ஆனால் ஆண்தட்டான்களில் இன உறுப்பு அடிவயிற்றின் 2வது கண்டத்திலேயே இருக்கும்.

அடுத்து வருவது கரப்பான் பூச்சிகள் இவர்கள் எப்பவுமே பிறன்மனை நோக்கா பேராண் மக்கள்தாம்! ஆண்கரப்பான் பூச்சி,கன்னித்தன்மை மாறாத பெண் கரப்பான் பூச்சிகளையே, தன்னுடைய காதலியாகத் தெரிவு செய்யும். இது எப்படி சாத்தியம்? ஏதோ கட்டுக் கதைபோல் இருக்கிறதா? இதற்கென்றே ஆண் கரப்பான் பூச்சி ஒரு பிரத்தியேக 'பரிசோதனை' வைத்திருக்கின்றது. ஆண்கரப்பான் பூச்சிஇதற்காக அதிகநேரம் மினக்கெடாது. ஏதாவது வேலையாக போய்க்கொண்டு இருக்கும் போது, பெண் கரப்பான் பூச்சியைச் சந்திக்குமானால், இரண்டும் பரஸ்பரம் அருகருகே வந்து, (நாம் நெருங்கிய நண்பர்களைச் சந்திக்கும் போது கைலாகு கொடுப்பது போல) ஒன்று மற்றொன்றை தங்கள் தலையிலுள்ள உணர்கொம்புகளால் தடவிக் கொள்ளும், இரண்டுமே கன்னித் தன்மை மாறாமல் இருக்குமானால், இருவரின் உடலிலும் ஒரு வித மின்சாரம்பாயும். அவ்வளவுதான் !!! அடுத்த விநாடியே, "நீ பாதி....நான் பாதி.... கண்ணே" என்று ஜோடி சேர்ந்து விடும்.

இறுதியாக வருவது பழப் பூச்சிகள் நாமெல்லாம் ஏதேனும் பழம் வாங்கி, கொஞ்சநாள் பயன் படுத்தாமல் வைத்திருந்தால், ஓர்அழையா விருந்தாளி வருவாரே, அவர்தான் இந்த பழப்பூச்சி, இங்கும் கலவிக்கு விழையும் பெண்பூச்சி,தூதுவேதியைக் காற்றில் கலந்துவிட்டு ஆண்பூச்சியை புணர்ச்சிக்கு அழைக்கும் உடனே ஆண் பூச்சிகள் பெண் பூச்சியைத் தேடிப்படையெடுக்கும். பெண்பூச்சியை கண்டு பிடித்தவுடன், எல்லா ஆண் பூச்சியைக் கண்டு பிடித்தவுடன், எல்லா ஆண்பூச்சியும் அதைச் சுற்றி சுற்றிவந்து, சலங்கை ஒலி கமலஹாசன் கணக்காய் நடனம் ஆடும்.பெண்பூச்சி,ஏதோ தன்னை உலக அழகிப்போட்டி நடுவர் கணக்காய் நினைத்துக்கொண்டு, ஆண் பூச்சிகளின் நடனத்தை மதிப்பீடுசெய்யும். அதன் மதிப்பீட்டில் யார் முதலாவதாக வருகின்றாரோ, அவரே அந்த பெண்பழப்பூச்சியின் காதலர்!!!!

நன்றி:இணையம்.



---

(10ஆம் பக்கத்தொடர்ச்சி..)

இதற்கு மறுபக்கத்தில் புஷ் உண்மைக்குப் புறம்பாக வெளியிட்ட ஈராக் தொடர்பான சில கருத்துக்கள் சர்ச்சை மிக்கதாக மாறியுள்ளது. காங்கிரஸ் உறுப்பினர்கள் பலர் புஷ் கூறுவது போன்று ஒன்றும் ஈராக்கில் சாதகமான சூழல் நிலவவில்லை என்றும் அவர் குறிப்பிடுவது போல் பாதுகாப்புப்படையின் அளவிலோ பொலிஸ் பிரிவின் பாதுகாப்போ சாதகமாக இல்லை எனவும் கூறியுள்ளனர். மேலும் ஐ.நா கண்காணிப்பாளரின் எண்ணிக்கை போதாமல் இருப்பதுடன் அவர்களுக்கு பாதுகாப்புப்பணிக்கு போதிய படைகள் இல்லை என்றும் அவர்களால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இவை யாவற்றையும் புஷ் தனது சனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரமாகவே வெளியிட்டுள்ளார். போலியான உண்மைக்குப் புறம்பான தகவல்களை கொடுத்து பிழைத்துக்கொண்ட சனாதிபதியல்லவா புஷ் அந்த வரையறைக்குள்ளும் வகைப்பாட்டுக்குள்ளும் அதிக பிரயத்தனம் எடுப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெளிவுபடுத்துகின்றன. அதுமட்டுமன்றி மிகச்சிறப்பாக புஷ் உபாயம் அமைத்து தேர்தல் போட்டியில் வெற்றிபெற உழைப்பதாகக் கூறப்படுகிறது.

### லிபியாவுக்கு விடுதலை

உலகை ஆளுகை செய்யும் அமெரிக்காவின் இன்னோர் கட்டளை லிபியா மீதான பொருளாதாரத்தடையை தளர்த்துவதான அறிவிப்பு வெளிவந்துள்ளது. இதனை வரவேற்றுள்ள லிபியா தலைமை அதன் ராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றியாக கருதுகின்றது. கடாபியின் அணுகுமுறை உலகத் தலைவர்களும் சிறப்பான அனுபவமாக அமையும். அமெரிக்கா கடந்த காலங்களில் சில புதிய நாடுகள் மீது பொருளாதாரத் தடையை விதித்தது போன்று லிபியாவை நீக்கியுள்ளது. இதனால் அமெரிக்கப் பொருளாதார சமநிலை பேணப்படுவதுடன் லிபியாவின் அணுகுமுறைக்குள் உலகத்தை இழுத்துவரவே அமெரிக்கா விரும்புகின்றது.

கடாபி மிகத் தந்திரமாக கையாண்டு அமெரிக்காவை வென்றெடுத்தார் என்பது போல எல்லா நாடுகளதும் அரசியல் சூழலோ பாதுகாப்போ கிடையாது. இதனால் ஆபத்தான விளைவும் ஏற்படலாம். எப்போதும் அரசியலில் தந்திரமும் அதற்கான அணுகுமுறையும் அவசியமானது. உலகம் யதார்த்தத்தை நோக்கி செல்லுமாயின் லிபியா போன்ற நாடுகள் பொருளாதார தடையையோ ஆட்சி மாற்றத்தையோ எதிர் நோக்க வேண்டி ஏற்பட்டிருக்காது. எனவே இன் றைய அரசியல் சூழலுக்குள் அரசியல் தந்திரம் அவசியமானது.

எனவே போலி அரசியல் தலைமைகளாலும் அவற்றின் நடைமுறைகளாலும் யதார்த்தவாதக் கோட்பாடுகள் பலவீனப்பட்டு விடுகின்றன. உலகத்தை தமக்கு ஏற்பமாற்றவும் திசை திருப்பவும் முயலும் அமெரிக்க ஆட்சியாளர்கள் உலகத்திற்காக போலி யதார்த்தவாதத்தையே விட்டுச்செல்கின்றனர். அமெரிக்க நலனுக்காகவும் ஆட்சி அதிகாரத்திற்காகவும் அரசியல் கோட்பாடுகளை போலியாக்கி விடுகின்றன. அவ்வாறு அமெரிக்கர் மேற்கொள்ளும் அணுகு முறைகளைமுன்மாதிரியாகக்கொண்டு ஏனைய நாடுகளின் தலைமைகள் செயல்படமுனைவதே ஆபத்தான விளைவுகளை தரக்கூடியதாக மாறவுள்ளது. இது முழு உலகத்தையும் பீடித்துள்ள அடிமைத்தனமான சிந்தனையாகும். அமெரிக்கா பின்பற்றுவது முன்மாதிரியெனகருதும் ஏனைய தலைவர்களது இயல்பும் உணர்வும் அமெரிக்க மாதிரிக்கு ஒப்பானதேயாகும்.

# சர்வதேச சிறுவர் தினம் - 2004

**வடக்கு கிழக்கில் சிறுவர் நலனோம்புப் பணிகளில் அதீத அக்கறை காட்டும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உறவிழந்த சிறார்களுக்கு உற்ற துணை.**

**போர் மற்றும் பிற அனர்த்தங்களால் உறவுகளை இழந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு அன்பு, அரவணைப்பு வழங்கி என்றென்றும் துணை நிற்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறுவர்களுக்கு அனைத்து உரிமைகளும் கிடைக்க சர்தேச சிறுவர் நாளில் வாழ்த்துகின்றது.**

| | | | |
|---|---|---|---|
| குருகுலம் | - கிளிநொச்சி | மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம் | - மட்டக்களப்பு |
| காந்திநிலையம் | - கிளிநொச்சி | விவேகானந்தா சிறுவர் இல்லம் | - மட்டக்களப்பு |
| குழந்தைகள் பராமரிப்பு நிலையம் | - கிளிநொச்சி | விபுலானந்தா சிறுவர் இல்லம் | - மட்டக்களப்பு |
| பாரதி சிறுவர் இல்லம் | - முல்லைத்தீவு | சக்தி மகளிர் இல்லம் | - மட்டக்களப்பு |
| புனித பூமி சிறுவர் இல்லம் | - முல்லைத்தீவு | கதிரொளி சிறுவர் இல்லம் | - மட்டக்களப்பு |
| இனியவாழ்வு இல்லம் | - முல்லைத்தீவு | அம்மன் மகளிர் இல்லம் | - அம்பாறை |
| சந்தோசம் சிறுவர் இல்லம் | - திருமலை | | |

**தாயகத்தில் உறவிழந்த சிறார்களுக்கு கல்வி, போசாக்கு, பராமரிப்பு, பாதுகாப்பு வழங்கி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க அயராது பாடுபட்டு வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு பக்கபலமாக நின்று பேராதரவு நல்கும் புலம்பெயர்ந்து வாழும் எமது பாச உறவுகளின் கரங்களை நன்றியுணர்வுடனும், நெஞ்சம் நிறைந்த அன்புடனும் இறுகப்பற்றிக் கொள்கின்றோம்.**

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**
**ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கு வோம்.**

**சிறுவர் பாதுகாப்பு பிரிவு,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.**

**உறவிழந்த சிறார்களுக்கு உதவுவோம்.**

(சி-10238)






## நிலவே வா

மெல்லச் செல்லும் நிலவே வா
மிதந்து செல்லும் நிலவே வா
துள்ளிக் கொண்டும் நீயோடச்
சொல்லித் தருவேன் இங்கே வா
பாட்டும் பேச்சும் இல்லாமற்
பவனி செல்லும் நிலவே வா
பாட்டும் பேச்சுங் கற்றிடலாம்
பறந்திங் கிறங்கி வருவாயே!
சின்னஞ் சிறிய துண்டமெனத்
தேய்ந்து நிற்கும் நிலவே வா
தின்னும் பழமும் கறிசோறும்
தீற்றி யுன்னைத் தேற்றிடுவேன்

## எங்கள் மரை

எங்களுடைய காடுகளில் வாழுகின்ற மிருகங்களில் சாம்பர் மான் என்று ஒன்று உண்டு. என்ன பேர் கேள்விப்படாத ஒன்றாக உள்ளதா? இதனைத்தான் நாம் மரை என்று அழைக்கிறோம்.

இந்த மரைகள் உலகிலேயே இலங்கையிலும், இந்தியாவிலும் தான் உள்ளன. இவை சாதாரணமான்களைப் போல புல், இலை குழைகளை, உண்ணும். இவைகள் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. இம்மரைகள் யானைக் கூட்டத்தின் பின்னால் அதிகமாக திரிவதாக எமது வேட்டைக்காரர்கள் கூறுகின்றார்கள். காரணம் யானைகள் உடைத்துப் போடும் இலை குழைகளை உண்பதற்காக அவற்றிற்குப் பின்னால் திரிகின்றனவாம்

இவைகள் பெரும்பாலும் பசுமையான நீர் நிறைந்த இடங்களில் வாழும். கால்கள் ஒல்லியாகவும் நீளமாகவும் இருக்கும். வால் கட்டையானது. மோப்ப சக்தியும் கேட்கும் சக்தியும் அதிகம். இதனால் இவை எதிரிகளிடம் இருந்து இலகுவாக தப்பித்து விடுகின்றன.

ஆடு, மாடுகளின் கொம்புகள் போல இவைகளின் கொம்புகள் நிலைத்து இருப்பதில்லை. ஒவ்வொரு பருவத்திலும் உதிர்ந்து மீண்டும் முளைக்கும். ஆண்மரைகளுக்கு மாத்திரம் கொம்புண்டு. இம்மரையின் கொம்புகள் சுண்ணாம்புப் பொருளால் ஆனது. இம்மரைகளின் கொம்புகளின் இரத்த ஓட்டம் நின்று விட்டால், கொம்பை மரத்தில் உரசி விழுத்தி விடும். இதனால் காடுகளில் சில மரங்களில் இவ்வாறான உராய்வினால் ஏற்பட்ட காயங்களைக் காணலாம். ஆண் மரைகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிடும் போது கொம்புகள் சிக்குண்டால் இரண்டுமே இறந்து போய்விடும். இம் மரைகளின் ஆயுட் காலம் சராசரி 10 ஆண்டுகள். பெண் மரை ஒரு தடவையில் ஒன்று அல்லது இரண்டு குட்டிகள் ஈனும் ஆண்குட்டி எட்டுமாதத்திலும் பெண்




குட்டி பத்து மாதத்திலும் தாயை பிரிந்து வாழும்.

இம் மரைக்கு கண்களுக்கு கீழேயும் பின்னங்கால்களுக்கு கீழேயும் நாற்றச் சுரப்பிகள் உண்டு.

இந்நாற்றச் சுரப்பி மூலம் தன்னுடைய வசிப்பிடத்தை எல்லையிட்டுக் கொள்ளும். எமது காடுகளில் உள்ள புள்ளிமானைப் போல இதனால் வேகமாக ஓட முடியாது.

இவைகளை சிறுத்தை, புலி என்பன பிடித்து உண்ணுவதால் இவைகளே காட்டில் இம் மரைகளுக்கு எதிரிகள். அத்துடன் எமது வேட்டைக்காரர்கள் இவற்றை அதிகமாக வேட்டையாடுவதாலும் இவை அருகி வரும் ஒரு மிருகமாக கணிக்கப்பட்டு வேட்டையாடத் தடை செய் யப்பட்டுள்ளது. இவற்றை வேட்டையாட எமது வேட்டைக்காரர்கள் ஒரு புதிய உத்தியையும் கையாண்டுள்ளனர். அதாவது கோடைகாலங்களில் இவை வாழுகின்ற காடுகளுக்கு அருகில இம் மரைகளின் நடமாட்டம் அதிக முள்ள இடங்களை இனங்கண்டு அவ்விடங்களில் குழி தோண்டி, அதில் நீர் ஊற்றி மறைந்திருக்கும் போது, கோடையில் நீர் தேடி அலையும் மரைகள் நீரைக் கண்டதும் குசாலாக நீர் அருந்தும் போது ஒளிந்திருக்கும் வேட்டைக்காரர்களால் இம்மரைகள் வேட்டையாடப்பட்டன.

ஆனால் இலங்கையிலும், இந்தியாவிலும் மாத்திரமே காணப்படும் இந்த மரைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமல்லவா?

## சொற்சிலம்பம் - 55

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ா் | ஜ | நூ | ற | ஏ | டு |
| கி | கா | நி | ங் | கௌ | சி | த் |
| நீ | ரி | ல் | ரோ | பி | எ | ட் |
| ஆ | ட் | சி | வ | உ | ங் | யா |
| ம் | ஸ் | ம் | த் | ரா | வ | ஜா |
| க் | கை | க | இ | ன | ம் | தே |
| ண | பூ | வ | ஓ | ச | வி | னை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -53 இன் விடைகள்

01. கிரேக்கம்

02. மகாவலி

### சொற்சிலம்பம் - 53 இன் பரிசுக்குரியவர்

சௌ.பிரியங்கா,
மன்/புனித/சவேரியார்/
பெண்கள் தேசிய
கல்லூரி.

### சொற்சிலம்பம் - 53 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. த.சிந்துஜா, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
02. சு.பகீரதன், 676 அன்புவழிபுரம், திருகோணமலை.
03. நா.முரளிகரன், இல.59 கல்விளான், துணுக்காய்.
04. ஜெ.நிஜாந்தா, அ.த.க. பாடசாலை, முத்துஐயன் கட்டு.
05. தி.மகேஸ்வரன், வருவாய்ப்பகுதி, புளியங்குளம்.
06. வ.கிசோபன், மதினா நகர், வவுனியா.
07. ச.கிருசாந்த், இல 1112/3, தருமபுரம்.
08. சி.நிரோஜன், துன்னாலை தெற்கு, கரவெட்டி.

01. சந்திரனில் முதன் முதல் காலடி வைத்த மனிதனின் பெயர்?

01) ....................................

*சொற்சிலம்பம்-55*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

02. இலங்கையின் மிகப் பெரிய வனம்?

01) ....................................


பெயர் :- ....................................

முகவரி :- ....................................

....................................

## எலியாரின் வண்டில்

**பகுதி-05**



# வீடு



இன்று பெண்கள் உரிமையற்றநிலையை தாமே உணர்ந்து சிந் தித்து தம் உரிமைகளுக்காகப் போராடிநிற்கின்றனர்.

இன்று பெண்கள் உயர் கல்வியும் வேலைவாய்ப்பும் பெற்றிருந்தாலும் குழந்தைகளை வளர்த்து குடும்பப்பணிகளை தனியே சுமந்து ஆண்களுக்கு அடங்கி பணிவிடைகள் செய்யவேண்டும் என்ற சமுதாய மரபே தேவை என்ற நிலை கட்டாயப் படுத்தப் பட்டுள்ளது. இதற்கு ஏற்றவாறே பெண்குழந்தை வளர்ப்புக் காணப் படுகிறது. போசாக்கு, கல்வி, சுகாதாரம் அனைத்திலும் ஆண் குழந்தைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது. குடும்பத்தில் அனைத்திலும் ஆணுக்கே முதலிடம். இதுவே பெண்கள் அடங்குவதற்கும், அடிமைப்படுத்துவதற்கும் ஏதுவான காரணியாக அமைகிறது. பெண்,கல்வி கற்றாலும் கற்பு, தியாகம், பொறுமை சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற பண்புகள் உடையவளாக இருக்கவேண்டும் என்று சிறுவயதிலே மூளைச் சலவை செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறாள்.

சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்தும் பெண்ணின் வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. இவற்றை எதிர்ப்பது அல்லது இதற்குள் மீண்டு வருவது என்பது பெண்மைக்கு அவமானமாகும். பெண்மையை மீறும் செயலாகும் என்பதை வலியுறுத்தும்வகையில் சின்னத்திரை திரைப்படங்கள், நாடகங்கள் இதழ்கள், நாவல்கள் என்பன செயற்படுகின்றன.

ஆண் என்ன தவறு செய்தாலும் பொறுமையுடன், சகிப்புத் தன்மையுடன் வாழ்கின்றவள் தன்னிச்சையாகச் செயற்படாதவள் உடல், பொருள், ஆவி அனைத்தும் தன் கணவனுக்கு அர்ப்பணிப்பவள் இது போன்ற கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றமக்கள் தொடர்பு ஊடகங்கள் மூலமாகபுகுத்தப்படுகின்றன.

இன்று பெண்கள் சீதனக் கொடுமைக்கு ஆளாகுகிறார்கள். கருச்சிதைவு, பெண்சிசுக்கொலை, பெண்குழந்தைகளை புறக்கணித்தல் போன்ற கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறாள். மலடி, வாழாவெட்டி போன்ற அவப்பெயர்கள் எல்லாம் பெண்களுக்குமட்டுமே.

பெண்விடுதலை எனும் போது பல்வேறு அர்த்தங்களுடன் பல கோணங்களில் அது நோக்கப்படுகிறது. பெண்விடுதலை என்பது தொண்டு தொட்டு பெண்ணுக்கு எதிராக இழைத்துவரும் கொடுமைகளை எதிர்க்கும் ஒரு உரிமைப்போராட்டமாகும். ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டமாகும். இங்கு ஒரு விடயத்தில் தெளிவு பெறல் அவசியமாகும். பெண்விடுதலை ஆணுக்கு எதிரானது அல்ல ஆணாதிக்கத்திற்கு எதிரானது என்பதே உண்மையாகும். ஏனெனில் பெண் விடுதலைக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர்களுள் மார்க்ஸ், எங்கெல்ஸ்பெரியார், போன்ற ஆண்களும் அடங்குவர். வயது வந்தபின் திருமணம் மண



## பெண் விடுதலை ஆணுக்கு எதிரானதல்ல ஆணாதிக்கத்திற்கு எதிரானது.

உரிமை, மணவிலக்கு, சொத்துரிமை, தொடர்பு, சம உயர்கல்வி, வேலை வாய்ப்பு, அரச பணிகளில் பங்கு, ஆகிய வழிகளையும் ஆணாதிக்கத்திலிருந்து பெண்விடுதலை பெற வழிவகுக்கும் என்று அன்று பாரதியார் கூறினார். பாரதியார் கூறிய அந்த வழிகளில் பலவற்றை பெண்கள் இன்று ஓரளவு பெற்றிருந்தாலும் அவை சமுதாயத்தில் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதே நிஜமாகும். பெண்ணை அறிவு, ஆற்றல், தகுதி என்ற அடிப்படையில்தான் மதிக்கவேண்டும். பெண்ணை பாலியல் சின்னம், இன்பம் தரும் நுகர்பொருள் என்ற நிலையில் நோக்கப்படும் அவலம் நீக்கப்படவேண்டும். எங்கும் எப்போதும் எந்த நேரத்திலும் தனித்து பாதுகாப்புடன் வாழும் நிலை வேண்டும். சுயமாக முடிவெடுக்கும்நிலை உருவாக வேண்டும், ஆணைச் சார்ந்து செயற்படும் நிலை மறையவேண்டும். அனைத்து இடங்களிலும் ஆண் இயங்குவதைப்போல் பெண்களும் செயற்படும் நிலை உருவாக வேண்டும். இந்நிலையே பெண் விடுதலையின் வெளிப்பாடு எனலாம்.

ஆணின்றிப் பெண் இல்லை இது உண்மையான நிலைப்பாடு ஆகும். அதேபோல் பெண் இன்றி ஆண் இல்லை என்ற நிலையும் நடைமுறைவாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். கற்புநிலையை இருசாராரும் பேணவேண்டும்.

ஆண் உயர்வு, பெண்தாழ்வு என்ற நிலைமாறி ஆண்,பெண் இருசாராரும் ஒரே நிலை என்று உருவாகவேண்டும்.

**இ. றஜித்**

# உடைகளை எவ்வாறு பேணுவது...?

கறைகளிலும் பலவிதமான கறைகள் இருக்குமல்லவா? எந்தக் கறையை எப்படிப்போக்குவது என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

தேனீர்க் கறைகளுக்கு கறைபட்ட இடத்தில் கொதிக்கும் நீரை ஊற்றி நூலிழைகளின் வழியாக இறங்கச்செய்யலாம்; நீராவி முறையிலும் போக்கலாம்.

காய்கறிக் கறைகளைக் கழுவுவதற்குப் பசை போன்ற பிசுபிசுப்பை மை உறிஞ்சும் தாளினால் ஒற்றி ஒற்றி எடுத்த பின் இளம் சூடான சவற்காரத் தண்ணீரில் கழுவுங்கள்.

பழரசக் கறைகளுக்கு உப்புத்தேய்த்துக் கழுவலாம்; பிறகு வெந்நீரைச் சற்று உயரத்திலிருந்து ஊற்றினால் கரைந்து விடும்.

மழைகாலங்களில் பிள்ளைகளின் பாடசாலை சீருடைகள் நனைந்து விடுவதுண்டு. நனைந்த உடைகளை உடனடியாக கழுவ வேண்டும். நனைந்த உடைகள் கழுவாவிட்டால் கரப்பன் பேன் பிடித்து விடும். இதனால் அவ்வுடைகளைப்பயன் படுத்த முடியாது போகும். அத்துடன் மழைக் காலங்களில் இயற்கையாகவே வீட்டில் உள்ள உடைகள் ஈரலிப்பைக்கொண்டதாக மாறும். மழைநீங்கி வெயில் வரும் போது இவ்வுடைகளை வெயிலில் உலர விடுதல் வேண்டும். மழைக்காலங்களில் உடைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

# மீன் கட்லெட்




**தேவையான பொருட்கள்:-**

முள் நீக்கிய மீன் துண்டு -1 கிலோ
உருளைக்கிழங்கு மசித்தது -1/4 கிலோ
உப்பு -தேவையான அளவு
இஞ்சி, பூண்டு விழுது -2தேக்கரண்டி
பச்சைமிளகாய் -10-12
தேங்காய்ப்பால் -01 பேணி
மசாலா -1தேக்கரண்டி
முட்டை -02
எண்ணெய் -தேவையான அளவு

**செய்முறை:-**

மீனைக் கழுவி தண்ணீரில் வேகவைக்கவும், பிறகு இதன் தோலை, முள்ளை எடுத்து விட்டு மசித்துக் கொள்ளவும், எல்லாவிதப் பொருட்களையும் தனியே நன்றாக மசித்துக் கொள்ளவும், இத்துடன் மீன் உருளைக்கிழங்கு ஆகியவற்றையும் சேர்த்துக் கலக்கவும். இந்தக் கலவையிலிருந்து சிறு சிறு உருண்டைகளாக எடுத்து இறுக்கி தட்டையாக கட்லெட் போல ஆக்கி வைக்கவும். முட்டையை உடைத்து ஊற்றி அதில் இந்த உருண்டைகளை நனைத்து எண்ணெய்யின் மேலாக வைத்து இரு புறமும் பழுப்பு நிறமாகும் வரைக்கும் பொரிதெடுக்கவும்.

## வாழைப்பழ குளிர் பானம் தயாரிப்போம்

**தேவையான பொருட்கள்:-**

01 கோப்பை பால்

02 தோல் உரித்த கப்பல் வாழைப் பழங்கள்.

02 மேசைக்கரண்டி ஐஸ் கிரீம் (தேவையானால்)

02 மேசைக்கரண்டி சீனி

**செய்முறை:-**

ஐஸ்கிரீம், ஐஸ்கட்டிகள் தவிர்ந்த ஏனையவைகளை மிக்ஷியில் போட்டு அடிக்க வேண்டும். பிறகு ஐஸ் கட்டிகளைப் போட்டு சிறிது அடிக்க வேண்டும். பின்னர் கண்ணாடி டம்ளர்களில் ஊற்றி அதன் மீது ஐஸ் கிரீம் சிறிதளவு போட்டு பருகலாம், பரிமாறலாம்.

# இப்படிச் செய்யலாம்...

*பச்சை தக்காளிப் பழத்தை நறுக்கி தயிரில் போட்டுச் சிறிது உப்பையும் சிறிது பச்சை மிளகாயையும் போட்டுச் சாப்பிடுங்கள் தக்காளியில் எல்லாச் சத்துக்களும் உண்டு.*

* * *

*சமையல் செய்த உணவில் காரம் அதிகமா இருந்தால் அதில் கொஞ்சம் எலுமிச்சம் பழத்தைப் பிழியுங்கள். காரம் குறைந்துவிடும். சுவையாகவும் இருக்கும். எலுமிச்சம் பழத்தைத் தேவைக்குத் தகுந்தபடி அளவாகச் சேர்க்க வேண்டும்.*

* * *

*வெள்ளைத் துணிகளைத் தவிர மற்றக் கலர் துணிகளை வெயிலில் காயப் போடக் கூடாது. நேரிடையாகச் சூரிய வெளிச்சம் படுவதால் கலர்த் துணிகளின் கலர் மாறிப் போகின்றன. கலர்த் துணிகளை நிழலில் தான் காயப்போட வேண்டும்.*

* * *

*கண்ணாடியில் அழுக்குப் படிந்திருக்கிறதா? இந்த அழுக்கைப் போக்குவது எப்படி? கண்ணாடியில் சிறிது மண்ணெண்ணெய்யைக் கலந்து அதைக் பூசுங்கள். கண்ணாடி பளபளவென்று இருக்கும்!*

* * *

*காய்கறிகள் வாடி வதங்காமல் இருக்க எலுமிச்சம்பழச் சாறு கலந்த நீரைக் காய்கறிகளின் மீது தெளித்து வையுங்கள். காய்கறிகள் புத்தம் புதியவையாக இருக்கும்.*

* * *

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத் திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*




## குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—16**

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# முக்கோணத் தொடரில் சிறிலங்கா அணி சாதிக்குமா?

கடந்த 25ஆம் திகதியுடன் மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நிறைவடைந்துள்ளன. ரசிகர்கள் முற்றிலும் எதிர்பாராத பெறு பேறு மேற்கிந்தியத் தீவுகள் அணியை சென்றடைந்துள்ளது. இந்த வெற்றி சுமார் 25 வருடங்களின் பின்னர் அவ்வணிக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

இந்நிலையில் பலமான இந்திய அணி அண்மைக்காலமாக பெரும் வீழ்ச்சியை சந்தித்து வந்ததிலிருந்து அவ்வணி கிண்ணத்தைக் கைப்பற்றுவது பெரிதாக எதிர்பார்க்கப்படாத ஒன்றாகும். காரணம் அது ஆசிய கிண்ணப் போட்டிகளில் காட்டிய அணிகளுள் ஒன்றே கிண்ணத்தைக் கைப்பற்றும என எதிர்பார்க்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க ஆசிய கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தானையும் இந்தியாவையும் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியதுடன் தென்னாபிரிக்காவை துவம்சம் செய்து முழு எதிர்பார்ப்புடன் சென்ற சிறிலங்கா அணி அரையிறுதிக்குக் கூட தெரிவாகாமல் திரும்பி வந்தமை அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றது.


1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய அர்ஜுன ரணதுங்க போன்று அதற்குமுன்பிருந்த அணித்தலைவர்களான குருசிங்க, அரவிந்த, மகாநாம போன்றோர் சிறிலங்கா கிரிக்கெட்டில் வசந்தத்தை உருவாக்கினர். அந்த வசந்தம் அண்மைக் காலத்தில் மீண்டும் பெறப்பட்டுவிட்டதாகவே இந்நாட்டு ரசிகர்கள் எண்ணினர்.

இந்த நிலையில் பெரும் எதிர்பார்ப்புடன் அதாவது சொகைப் அக்தராக லசித மலிங்கவும் முரளியின் இடத்தை நிரப்பக் கூடியவராக உப்புள் சந்தன,கௌஷல் லொக்கு ஆராய்ச்சி போன்றோரும் இருந்தது டன் துடுப்பாட்ட வரிசையில் குமார் சங்கக்கார, மகேல, ஜயசூரிய, அவிஸ்க குணவர்தன போன்ற நம்பிக்கை நட்சத் திரங்களுடன் நிறைய கனவுகளுடன் சென்ற சிறிலங்கா அணி பாதிக்கு முன்பே திரும்பி வந்தமை மேற் கூறிய வசந்தம் மீண்டும் மறைந்து விடும் அபாயத்தைத் தோற்றுவித்துள்ளது.



சிறிலங்கா அணிக்கு அங்கு ஏற்பட்ட தோல்வி ஒருவகையில் கால நிலையும் காரணமாக அமைந்திருக்கலாம். அது போன்றே இங்கிலாந்து அணி இங்கு வந்து தோல்வியை சந்தித்தமை அவர்களுக்கு கால நிலை ஏற்றதாக இல்லாதிருந்தமையே. எனினும் கால நிலையை இங்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது பொருத்தமாகாது.

சிறிலங்கா வீரர்கள் இங்கிலாந்துடனான போட்டியில் முக்கியமான இங் கிலாந்து வீரர்களின் ஆட்டமிழப்பை நழுவ விட்டமையே அவர்கள் அரையிறுதிக் கனவை கலைத்தது என்றால் மிகையாகாது. முக்கிய வீரர்களான



பிளின் டொப், ட்ரஸ் கொதிக் ஆகியோரின் பிடிகளை விட்டதே 68 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவ வேண்டி ஏற்பட்டது.

எனினும் சிறிலங்கா அணியினர் ஆசிய கிண்ணத்தைக் கைப்பற்றியதுடன் தென்னாபிரிக்காவையும் வென்று இறுமாப்புடன் இருந்ததும் தோல்விக்கான காரணமாகும். இங்கிலாந்து அணியை பெரும் சவாலாகக் கருதி செயற்பட்டிருப்பின் இறுதிப் போட்டிக்குக்கூட தகுதி பெற்றிருக்கலாம் எனவே சிறிலங்கா அணியினர் சவாலுடனும் அவதானத்துடனும் விளையாடுவார்களாயின் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் பாகிஸ்தான் சிம்பாவே நாடுகளுடனான முக்கோண ஒருநாள் தொடருடன் நாடு திரும்பலாம்.

"திறனா" கும்.

அதுபோன்றே தென்னாபிரிக்க அணியும் சிறிலங்காவுடனான 5 ஒரு நாள் தொடரையும் இழந்ததுடன் டெஸ்ட் தொடரையும் 1-0 என்ற கணக்கில் தோற்றது. ஆக அவ்வணியும் எதிர்பார்க்காத ஒன்றாகக் கருதப்பட்டது.

இதேவேளை இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டிகள் நான்கையும் பறிகொடுத்திருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணியும் இம்முறை ஐ.சி.சி கிண்ணப் போட்டித் தொடரில் அரையிறுதிக்குக்கூட செல்ல முடியாது என்றே எண்ணத் தோன்றியது.

இவ்வாறாக மேற்படி அணிகளை தோல்விகாணச் செய்த சிறிலங்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான் உலக சம்பியனான அவுஸ்திரேலியா போன்ற

சம்பத்

# வெற்றி பெறப்போவது யார்?



விளையாட்டு என்றால் அன்று அனைவரது வாய்களும் உரைப்பது கால்பந்து. இன்று அந்த நிலை மாறி கிரிக்கெட்டாக விஸ்வரூபம் எடுத்துள்ளது.

ஆசியக்கண்டத்தை பொறுத்தவரை ஆண்டு முழுவதும் தொலைக் காட்சிகளும், வானொலிகளும் கிரிக்கெட்டுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன.


விறுவிறுப்பு பரபரப்பு கிண்ணத்தை கைப்பற்றப்போவது இலங்கையா? இந்தியாவா? பாகிஸ்தானா? அன்றி ஐரோப்பிய நாடொன்றா? என்ற போட்டித் தன்மை அனைவரையும் ஆக்கிரமித்துவிடும்.

அந்த அளவிற்கு இன்று கிரிக்கெட் ஒவ்வொரு நாடுகளுக்கும் மானப் பிரச்சினையாக மாறிவிட்டது.

நடந்து முடிந்த 4ஆவது ஐ.சி.சி மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியும் அதனையே வெளிப்படுத்தி நின்றது. ஆரம்பம் முதலே இந்த அணிக்கே வாய்ப்பு அந்த அணிக்கே வாய்ப்பு என ஆரூடங்கள் பல திசைகளிலும் முட்டி மோத கணிப்புகளையே காற்றில் பறக்கவிட்டு தோல்விகளையே நீண்டகாலமாக சுவைத்து வந்த மேற்கிந்தியத் தீவு கிண்ணத்தைக் கைப்பற்றி மகுடம் சூடிக்கொண்டது.



இதனால் அவ் அணி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.



இந்தப் பரபரப்பு ரசிகர்களின் மனதை விட்டு நீங்காத நிலையில் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் அவுஸ்திரேலிய- இந்திய டெஸ்ட் தொடர் ஆரம்பமாகப் போகின்றது.

இத் தொடருக்கான இரு அணிகளும் மெகா தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளதுடன், இரு அணி தொடர்பான விமர்சனங்களும், கருத்துக்களும் நாள் தோறும் பத்திரிக்கைகளில் பக்கங்களை நிரப்புகின்றன.

வாங்கிக் கட்டப் போவது யார்?

அவுஸ்திரேலிய அணியா? இந்திய அணியா, இருஅணிகளிலும் முக்கிய மான இரு நட்சத்திர வீர்கள் இல்லாது முதலாவது டெஸ்ட் வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இந்திய அணியை பொறுத்வரையில் அண்மையில் பல தொடர்தோல்விகளை சந்தித்திருந்தாலும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் தீவிரமாக செயற்படுவதுடன் அவர்களைத் திணறடித்த வரலாறாகவே உள்ளது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரையில் இந்திய அணிக்கு எதிராக கடந்த 30 ஆண்டுகளில் டெஸ்ட் தொடரை கைப்பற்ற முடியாத நிலை தொடர்ந்து நீடிப்பதால் அதனை போக்க வேண்டும் என்பதில் குறியாக உள்ளது.

அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது இந்திய அணியின்குறி?

எனவே இப்போட்டித்தொடர் சர்வதேச கவனத்தை ஈர்த்து .மெகா தொடராக மாறிவிட்டுள்ளதற்கு காரணமாக அமைந்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் மானப்பிரச்சினையாக அமைந்துவிட இக் கிரிக்கெட் தொடரில் வெற்றிபெறப போவது யார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# இப்படியும் ஒரு போட்டியா?



உலகில் கிரிக் கெட் ஆட்டத்தில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ள நாடு அவுஸ்திரேலியா என்றால் கால்பந்து விளையாட்டில் முதலிடம் வகிக்கும் நாடு பிரேசில் ஆகும்.

எனினும் கால்பந்தாட்டத்தில் ஆகப் பின்தங்கியிருக்கும் நாடு எது என்பது உங்களுக்குத் தெரியுமா?

இதற்காகவும் போட்டிகள் நடத்தப்பட்டு சர்வதேச கால்ப் பந்தாட்ட நாடுகளில் பின்தங்கிய இரு நாடுகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன அவை மிகச் சிறிய கரீபியன் தீவான "மொனடசெராட்" டும் ஆசிய நாடான பூட்டானும் ஆகும்.

ஒல்லாந்து நாட்டு தனியார் நிறுவனம் ஒன்றின் ஆதரவோடு திம்புவில் நடைபெற்ற போட்டியில் பூட்டான் மொன்ட செராட் அணியை 4-0என்ற கணக்கில் வென்றுள்ளது. எனினும் மிக பின்தங்கிய நாட்டுக்கான பரிசை மொன்டசெராட் தீவு பெற்றுக்கொண்டது. இத்தீவின் பரப்பளவு 103 ச.கி மீற்றராகும். மக்கள் தொகை 7600 பேர் பிலி மவுத் அதன் தலைநகரமாகும்.

இங்குள்ள கால்பந்தாட்ட மைதானங்கள் 150 ஆகும். 680 பாடசாலை சிறார்கள் விளையாட்டில் ஈடுபடுகின்றனர்.



எனினும் சின்னஞ் சிறு மொன்ட செராட் தீவு மிகுந்த எரிமலை அச்சுறுத்தல் நிறைந்த நாடாகும் என்பது மிகவும் கவலையளிக்கின்றது.




## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

காலபோக நெற்செய்கை ஆரம்பமாக உள்ளது. அதற்கான பணிகளில் விவசாயப் பெருமக்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்.

நெற்செய்கை நடவடிக்கைகள் முனைப்புடன் ஆரம்பமாகும் போது தொடர்ந்து வரும் பிரச்சினை கால் நடை தொடர்பானது.

கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை கட்டாக்காலிகளாக அலைய விடுவதால் ஏனைய காலங்களில் ஏற்படும் சேதத்தை விட இத்தகைய காலங்களில் சேதம் அதிகமாக ஏற்ப்டும்.

அதனால்தான் கால்நடை வளர்ப் போர் தமது கால்நடைகள் தொடர்பாக கவனம் எடுக்குமாறு வேண்டப் படுகின்றார்கள்.

இவ்வாறான ஒரு வேண்டுகோள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளைப் பிரதேசத்தில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளைப்பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளரும் முள்ளியவளை கமநல அபிவிருத்தித் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தரும் இணைந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கால்நடை வளர்ப்போர் தங்கள் கால் நடைகளைப் பகல்வேளைகளில் மேய்ப்போர் வைத்து மேய்த்து மாலை 6.00 மணிக்கு அவைகளை கட்டியோ பட்டிகளில் அடைத்தோ வைத்திருந்து மீண்டும் மறுநாள் காலை 6.30 மணிக்கு மேய்ப்போர் மூலம் மேய்ச்சலில் ஈடுபடுத்துமாறு கேட்கப் படுகின்றார்கள்.

இதன் மூலம் கால்நடைகளால் மக்களுக்கோ அன்றி விவசாயிகளுக்கோ தொல்லைகள், இடர்பாடுகள் ஏற்படாது நடந்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பராமரிப்பற்று கட்டாக்காலியாக திரியும் கால்நடைகளைப் பிடியாட்கள் மூலம் பிடித்து விபரம் அறிவிக்கப்பட்டு இரு நாட்களுக்குள் தண்டப்பணம் செலுத்தி உரியவர்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு இரு நாட்களிலும் உரிமை கோராத கால் நடைகள் மூன்றாம் நாள் பொதுச் சேவைக்காக ஏலத்தில் விடப்படும் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

எங்கள் விவசாயத்தை நாங்கள் தான் பாதுகாக்க வேண்டும். அதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். (சி-10044)

## வட்டக்கச்சியில் விவசாயக் கண்காட்சி!

கிளிநொச்சி மாவட்டத்திலே வட்டக்கச்சி கிராமத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் விவசாயக் கண்காட்சி சென்ற மாதம் முதலாம் திகதி முதல் ஐந்தும் திகதி வரை நடைபெற்றது. பெருந்திரளான மக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கமக்கார அமைப்புக்கள், ஆர்வலர்கள் எனப்பலரும் கண் காட்சியை பார்வையிட்டு பயன் பெற்றனர்.

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனமும், விவசாயத் திணைக்களமும், கால்நடை உற்பத்திசுகாதாரத்திணைக்களமும், கைத்தொழில்திணைக்களமும், கமநலசேவைத்திணைக்களமும், யாழ் பல்கலைக்கழக விவசாய பீடம், விஞ்ஞான பீடம் ஆகியன இணைந்து இம் மாபெரும் கண்காட்சியை நடத்தியுள்ளன.

இக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. சி.கரிகாலன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அரசசார்பற்ற நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்கள். பயிர் வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு, அவற்றின் முகாமைத்துவம், நோய்க் கட்டுப்பாடு, நீர்க்கட்டுப்பாடு, விதைத் தெரிவு, விதைஉற்பத்தி போன்ற பல பகுதிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இது மட்டுமல்ல இக்கண் காட்சியில் பூரண தகவல்களை அளிப்பதற்கு ஆக்கங்கள், செய் முறையிலும் ஒளிப்பட, புகைப்படக் காட்சியும், திட்டவிளக்கஉரை களும் நடத்தப்பட்டன. குளம் சம்பந்தமான மாதிரி அமைப்புக்கள், பனைசார் பொருட்கள், கைத்தொழில் சார் பொருட்கள், மற்றும் ஆயுள்வேத மூலிகை மருந்து வகைகள கால்நடை சம்பந்த மான உயர்ந்த இன ஆடு, மாடு, பன்றி, கோழி வகைகள் என்பனவும் செயற் கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் நல்லின மாடு, ஆடுகளைப் பெறலாம் என்ற விளக்கவுரைகளும், இன்னும் பல பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு விறபனையும் நடைபெற்றது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அமைப்பானது தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன அவர்களின் சிந்தனையில் உதித்த தொன்றாகும். கடந்த காலங்களில் பல்வேறுபட்ட இராணுவ அனர்த்தங்களால் பின்னடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனமே பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமாகும். அத்துடன் எமது தேசத்தின் அனைத்து வளங்களையும் ஒன்றிணைத்து அதன் மூலம் உச்சப்பயன்பாட்டைப் பெற்று மக்களின் வாழ்வை உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதற்காக ஏற்படுத்தப் பட்டது. அத்துடன் இந் நிறுவனம் வினைத்திறனுடன் செயற்பட்டு வெற்றியும் கண்டது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நான்கு அம்சங்களை முக்கிய தளமாகக் கொண்டு அவற்றின் வளர்ச்சியைத் தூண்டுவதற்காக அமைக கப்பட்டது. பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, சூழல் பாதுகாப்பு ஆகியவையே ஆகும். இந்த அடிப் படையை வைத்தே இக்கண்காட்சி நடைபெற்றது எனலாம். கண்காட்சி ஆரம்ப விழாவில் கலந்து கொண்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் உரையாற்றுகையில்; எமது தமிழீழ தேசம் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணும் நாள் மிக விரைவில் உருவாகும் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில்; எங்களுடைய தேசத்திலே போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்தே எமது தேசியத் தலைவர் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றவும், துறைசார் வளர்ச்சிகளை ஏற்படுத்திக் கொள்ளவே பல்வேறுபட்ட கட்டமைப்புக்களை போராட்ட சூழலிலே ஏற்படுத்தினார்.

அந்த வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் போராட்டச் சூழலிலும் மக்களுடைய வாழ்வு நிலையினை மேம்படுத்திக் கொள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுககின்ற மக்களுடைய வாழ்வு நிலையை பாதுகாத்துக் கொள்வதற்கு பல் வேறுபட்ட திட்டங்களை முன்னெடுத்தது. உணவுத்தடை, எரிபொருள் தடை, கோரமான யுத்தம் போன்ற பெரும் அவலங்களுக்கு முகம் கொடுத்து எப்படி மக்கள் வாழ்ந்தார்கள் என்பது எல்லோராலும் வியக்கத்தக்க விடயம் தான். இருந்தாலும் இந்தக் கண்காட்சி புதுமையானது ஏனெனில் எந்தவித வளங்களும் இன்றி எமது சுய முயற்சி மூலம் நாங்கள் உயர் வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்றார். பல்வேறு வளங்களையும் நிறைவாகக்கொண்ட எம்பிர தேசத்தில் அவ்வளங்களைக் கொண்டு வாழ நினைத்தால் உன்னத வாழ்க்கை வாழலாம். என்ற செய்தியை மக்கள் மதில் ஊட்டி மக்களது சிந்தனையைத் தூண்டுவதாகவே இக்கண்காட்சி நடத்தப்பட்டது. இதன் மூலம் வன்னிப் பெருநிலப் பரப்பில் பொருளாதாரம் பெரிதும் வளரும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் கண் காட்சி ஏற்பாட்டாளர்களுக்கு மிகுந்திருந்ததை உணர முடிந்தது.

போராட்ட சூழலிலே தென்னை, கமுகு, பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டன. அக்குறை யை நிவர்த்தி செய்யும் முகமாக நல்லினத் தென்னங்கன்றுகளும் பயன்தரு பழமரங்களும் விற்பனை செய்யப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சிவகமலா

(05 பக்கத் தொடர்ச்சி)

இதுவரையிலும் அலசிப்பார்க்கப்பட்ட சிந்தியா, பண்டா, மாற்றாஹரி ஆகிய பெண் உளவாளிகள் தம் உளவுப்பணிகளின் போது இடருக்குள் அகப்பட்டு, படுக்கையறை உறவிற்குள் அல்லல்பட்ட வாழ்க்கையையே சந்தித்தார்கள். அத்துடன் அவர்கள் சுயமரியாதையைப் பலிகொடுத்தும், தம் இளமையைப் பலியிட்டும் பணி யாற்றியிருந்தார்கள்.

இளமையைப் பலியிட்ட மூன்று இளங்கன்னிகளின் பாலியல் இன்பத்தை நுகர்ந்தும், பாலியல் இன்பத்தில் திளைத்தும் ஒய்யாரமாக வாழ்ந்த அரச உயர் மட்டத்தினர்களால் அந்நாடுகளின் ஸ்திரத்தன்மை சீர்குலைந்து போயின. அவர்கள் 'காதல் லீலைகளுக்கு இணையாக உலகில் வேறு ஒன்றுமில்லை' என்கிற பாலியல் மயக்கத்தால், தங்களது நாட்டினது தேசிய நலன்களை பலிகொடுத்தார்கள்.

அந்த அபலைப்பெண்களின் பின்னே இருந்த வேதனை, அவமான வலியென ஏகப்பட்ட துன்பங்கள் இருந்தன. இத்துன்பங்களைச் சுமந்த பெண்களை பன்னாட்டு உளவு நிறுவனங்கள் பயன்படுத்திவிடுவது போன்றே சிங்கள உளவு நிறுவனமும் பெண்களை உளவுப்பணிக்காக களத்தில் இறக்கியுள்ளது.

பெண்களின் படுக்கையறை உறவு இன்ப உணர்ச்சிக்குள் தமிழர்கள் எவரையும் வீழ்த்தும் உளவு உத்தியை சிங்கள உளவு நிறுவனம் நீண்ட காலமாக கைக்கொள்கின்றது.

சிங்களம் தம் உளவு உத்திகளுக்கு ஏற்ப ஈடுபாடு மிக்க கவர்ச்சிமிக்க பெண்களை உளவுப்பணிகளில் ஈடுபடுத்தி தம் அரசின் தேசிய நலன்களை பேணிப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் அதேசமயம் தமிழர் தாயக ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதிலும் அதீத அக்கறை செலுத்துகின்றது.

உளவு நிறுவனங்களினது பெண்ணழகோடு கூடிய உளவுப் பொறிக்குள்ளும், காம சுகம் காட்டும் பெண் உளவாழிகளின் ஆனந்த சுகத்துள்ளும், தமிழர்கள் சிலர் வீழ்ந்து இன்பமயக்கத்தில் மெய்மறந்து கிடக்கின்றனர்.

அந்த இன்ப அலைகள் அவர்கள் மனதில் தோன்றியதனால் தமிழர்தாய்நிலம் பற்றிய தகவல் களை அணுவளவும் கவலை கொள் ளாது கொடுக்கும் ஈனத்துரோகிகளாகி விடுகின்றனர்.

ஈனத்துரோகிகளின் துரோகமானது நெருப்பு உடலுக்கு வாதனை கொடுப்பது போல் அவர்களின் காமத்தீ தமிழர் தாய்நிலத்திற்கு வாதனையைக் கொடுக்கின்றது.

ஆகவே தமிழர்கள் தம் தாயகத்திற்கு துரோகச்சுமைகளைக் கொடுக்கும் ஈனத்துரோகிகளாக மாறி விடாது பகைவர் உளவுச் செருக்கடக்கும் தமிழர்களாக வாழும் போதே வலிமை மிகு தமிழர் தாய் நிலமாக தமிழர் தாயகம் மிளிரும்.

(14 பக்கத் தொடர்ச்சி)

அப்போது ஒரு பெண்போராளி. எதிரியின் குண்டுபட்டு தனது உந்துகணையுடன் மண்ணிலேசரிந்தாள். அதுவேறு யாருமல்ல மாவீரன் 2ம் லெப். வெற்றியரசனின் அக்காவான மாவீரர் கப்டன் ஜெனி. சண்டை நடந்து கொண்டிருக்கும் போதே கப்டன் ஜெனிக்கு முதலுதவிசெய்ய கப்டன் பூங்குழலி தன்னால் இயன்றளவு பாடுபட்டுக் கொண்டிருக்கிறாள்.

அது ஒருபுறம் நடக்க மறுபுறம் , முற்றிலுமாக எதிரி பின்வாங்கிவிட்டான் எம்மிலிருந்து சுமார் 50 - 60 மீற்றர் தூரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் எதிரியை நோக்கி லெப். வெற்றியரசனின் இயந்திரத் துப்பாக்கி சடசடத்த அதே நேரத்தில் அவனை ஒரு குரல் தடுக்கிறது.

டேய் வெற்றி அந்த புற்றில் காப்பெடுத்துச்சுடு என்றதும் அவன் தனது நிலையை மாற்றி தனது தோழியொருத்தியை தாக்கிய எதிரிக்கு பதிலடி கொடுக்க முயற்சிக்கிறான். அவனது இயந்திரத் துப்பாக்கியை ஆவேசமுடன் இயக்கிக் கொண்டிருக்கும் போது எதிரியின் 140 மி.மீ. எறிகணை அவனது உடலில் பல துவாரங்களைப் இட்டது.

2ஆம் லெப். வெற்றியரசன் மெதுவாய் நிலத்தில் சரிகிறான். எந்தவித முனகலோ, அசைவோ அவனிடம் இல்லை.

ஐயோ.. என்ன கொடுமை இது என்னவென்று அவனது காயத்திற்கு மருந்திடுவது. பல துவாரங்களாகிவிட்ட அவனது உடலின் மூச்சு எங்கே சென்று விட்டது. இது என்ன கொடுமை அவனுக்கு பக்கத்திலே 25 யார் தூரத்தில் அவனது அக்காவும் அல்லவா... வீரமரணமடைந்து விட்டாள்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இப்படியும் ஒரு சோகவரலாறா? என நினைக்கவும் முடியாமல் உள்ளது.

2ஆம் லெப்.வெற்றியரசன் போராட்டத்தில் இணைந்த நாள்முதலாய் சிரிக்காத நாளே இல்லை. ஆனால் இப்போது அவனது சிரிப்பு எங்கே போய்விட்டது.

டொக்டர் நான் காயப்பட்டால் எனக்கு மருந்துகட்டுவீங்களா? என்றவன் உண்மையில்தான் தனது நிலையை அன்றே சொல்லி வைத்தானோ?

சண்டையில் வீரச்சாவடைவதற்கு முன் ஒருக்கா அக்காவை பார்க்கவேணும் என்று ஆசைப்பட்டவன் 25யார் தூரத்தில் தனது அக்கா இருந்தும் பார்க்கமுடியாமல் உறங்கிப்போனதேன். யாரோ ஒரு போராளி என்றே நினைத்து எதிரியை சுட்டவனுக்கு தன் கண்முன்னே எதிரி குண்டுபட்டு விழுந்தவள் தனது அக்கா என்று தெரிந்து இருந்தால் அவனது மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று யாரும் எதுவுமே சொல்லமுடியாது, உலக வரலாற்றில் இதற்கு ஏதும் அர்த்தம் இருப்பதாகத்தெரியவில்லை. 'தாய் நாட்டின் விடுதலைக்காக, இரண்டு சகோதரர்கள் ஒரே களத்தில் ஒரே இடத்தில் ஒருவரையொருவர் முகமறியாது வீரகாவியமான வரலாறு நடந்தது.

2ஆம் லெப். வெற்றியரசனின் வீரத்திற்கு இலக்கான அவனது அக்காவினதும் வீரமரணம் ஒரே வீட்டில்; ஒரே மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. வீரம் தமிழரின் தாயகத்தில் செத்துவிடவில்லை என்பதனையும் ஒவ்வொரு தமிழனினதும் இலட்சிய தாகத்தையும் பறைசாற்றிநிற்கிறது.

# கடைக்காரரும் கொஞ்சம் சுதேசியத்தையும்;
## —சகவாசத்தையும் பற்றி சிந்தியுங்கோ—

வணக்கம் பிள்ளையள்! சுகமெல்லாம் எப்பிடி? என்ன அப்பிடிப் புதினமாப் பார்க்கிறீங்கள்? குந்தில இருந்து நியாயம் அளக்கிற மனுசன், சைக்கிள் ஓடினபடி கதைச்சுக் கொண்டு வருகுதெண்டு பார்க்கிறீங்களாக்கும். நீங்களும் ஒரு விசயம் அவதானிச்சிருப்பியள், என்னடா உந்த மனுசன் உந்த வயசிலையும் ஏற்றமான றோட்டில கூட உந்த வேகத்திலை மிதிக்கி தெண்டு! காணுற சனம் எல்லாம் உதைப்பற்றித்தான் ஒரே கேள்வி, "ஹலோ ஏரம்பர் என்ன திடீரெண்டு லேகியம் ஏதாவது சாப்பிட்டனீரோ, இளந்தாரிப் பொடியளே முக்கிற ஏற்றத்தில, உப்பிடி வேகமா மிதிக் கிறீர்?" எண்டு கேள்வி கேட்டு ஒரே கரைச்சல் விளம்பர நிறுவனங்கள் தான் கலைக்காத ஒருகுறை. நான் ஒருத் தருக்கும் விசயத்தை அவிழ்க்கேல் லை ஆனால், நீங்கள் ஆர்? என்ரை பிள்ளையள் எல்லோ! உங்களுக்கு ஏதாவது நான் மறைப்பனோ? இப்ப கொழும்பில கண்டகிண்ட பாட்டுக்கு சிலதுகள் எங்கட இனத்தைப் பற்றி யும், போராட்டத்தைப்பற்றியும் கருத் துக் கூற வெளிக்கிட்டு விட்டிதுகள், அ·. றிஞ்சிருப்பியள் இப்பை என்னெண்டால் றோட் எவ்வளவு ஏற்றமோ அதுக்கேற்ற மாதிரி, அந்த அறிணையளில இரண்டு மோசமானதுகளின்ர மூஞ்சையள் தான் உங்கட சைக்கிள் 'பெடல்' எண்டு நினைச்சுக்கொள்ளுங்கோ! அதுக்குப் பிறகு என்ன? 'விடு' எண்டாலும் விடேலாத அளவுக்கு உழக்குவீங்கள். பிறேக் பண்ணவே மனம் விடாது. அப்ப கேட்பியள் நீங்கள், இறக்கமான றோட் வந்தால் என்ன செய்யிறதெண்டு. கீழ்ப்பந்திக்கு வாங்கோ சொல்லிறன்!

முந்தின காலத்தில முனிவர்மார் காட்டிலபோய் 'ஓம்...ஓம்' எண்டு தவங்கள் எல்லாம் செய்யிறவை. யோகாசனத்திலையும் மூச்சுப்பயிற்சியில் 'ஓம்' வருகுது. அதென்னடாண்டால் பாருங்கோ 'ஓம்' எண்டு நாங்கள் உச்சரிக்கேக்கிள்ளை, உடலில் இருக்கிற அணுக்களெல்லாம் சேர்ந்து நெஞ்சக் கூட்டின்ர அடியில இருந்து, ஒன்றாகி உச்சரிக்கப்படுகிற உயிர் நாதம் தான் அதுவா இருக்கிது. மற்றச் சொல்லுகள் மாதிரி கண்டபாட்டுக்கு 'வெறுமனே' உச்சரிக்கப் படிற சொல் இல்லை இந்த 'ஓம்'. நாங்கள் ஆருக்கும் 'ஓம்' எண்டு வாக்குக்கொடுத்தோமாயிருந்தால், ஒட்டுமொத்த உயிர்நாதமான அந்த வெளிப்பாட்டை, எங்கட வாக்கை நாங்கள் காப்பாற்ற வேணும். அப்பிடி இல்லாத எனக்குத் தெரிஞ்ச சில ஆக்கள், இறக்கமான றோட்டில எனக்குப் பயன்படுவினம். அதாவது பாருங்கோ, விட்டுவிட்டு உழக்க வேண்டிய ஆக்கள் அவையள்! இந்த வகையில கூடிய வேகம், குறைஞ்ச வேகம் எண்டு எல்லா வேகத்துக்கும் ஏற்றமாதிரி எண்டு சகல தரப்பும் என்னட்டை இருக்கிது. உள்ளூர், சர்வதேசம் எண்டு ஒரு அல்பமே இருக்குதெண்டால் பாருங்கோவன்! என்ர செல்லங்கள், இந்த வேகரகசியம் உங்களோடையே இருக்கட்டும், வெளியால விட்டுவிட வேண்டாம்! பேந்து ஒருசிலருக்குத் தெரியவந்தால், அதுக்குப் பிறகு அவையள் எங்கேயாவது வெளிக்கிடுற நேரத்தில, செருப்பை மறந்தாலும் மறப்பினம். ஆனால் என்னோட ரகசியத்தைப் பாவிச்சு, என்ர மூஞ்சியையே நினைச்சுக் கொண்டு, படுவேகமா அவையள் சுற்றித்திரிவினம்.

நேற்றொரு கவிதை பார்த்தனான். அதைப்பற்றி உங்களுக்கு சொல்லவேணும். ஆரது? அந்த நடிகையின்ர பேரும் அயத்துப் போச்சு ஆ.....ஆ.....ஆரோ ஒரு 'த்ரீசா வாம்! அவாவைப் பற்றித்தான்

ஓ...த்ரீசா (3xசா) ! உன்னைப் பார்ப்பதால் சா,
உன் பேச்சைக் கேட்பதால் சா, இரண்டும் இல்லாது போனால் இன்னுமொரு சா!
இவை மூன்றும் சேர்ந்ததாலோ நீ த்ரீசா?
இப்படிக்கு ரசிகன்',

எண்டு கிடந்திச்சு. ஆரெண்டும் தெரியேல்லை. என்ரை அப்பு! ரீவியை நிற்பாட்டி வைச்சால் உந்த வியாதிச் சாவில இருந்து தப்பலாம். ஆனால் ஆமிக்காரர் அங்கங்கே தள்ளுபடி விலையில வேண்டிக்குவிக்கிறான். அதுக்கென்ன செய்யலாம் எண்டு கொஞ்சம் யோசிச்சுப்பாரும் கவிஞரே!

எங்கட தெருக்களின்ரை அழகை ரசிச்சுக்கொண்டு இப்பிடி உலாத்திறதே ஒரு தனி இன்பம் பாருங்கோ! அங்கே பாருங்கோ,3,4 எருமை மாடுகளுக்கு ஆக்கள் வயலுக்குள்ள வைச்சுக்குளிப்பாட்டினம். எட! அவையளும் நல்ல குசாலா உடம்பு தேய்க்க விட்டிட்டு படுத்திருக்கினம். நல்ல வேலைவெட்டி வேற இல்லாத போல ஒரு மினைக்கேடு! நிண்டு கழுவிக் கொண்டிருக்கிற ஆக்களைப் பார்க்கப் பாவமா இருந்திச்சு. தங்கட வயலுக்குள்ளை நிற்கிற எருமையள் நல்ல மாதிரி இருக்கோணும் எண்டு அவையள் விரும்பிறது, உந்த எருமையளுக்கு விளங்குதோ என்னவோ? ஆண்டவனே! ஆ....! பொறுங்கோ "ஆர் உவன் கண்ணுக்குள்ளை லைற் அடிக்கிறது? எட.... வெட்டி வெட்டி அடிக்கிறாங்கள்"! என்ன சிக்கலாக் கிடக்கிது! எடடட இப்பதான் விளங்குது! அது எனக்கில்லை, பின்னால பறந்து வந்து கொண்டிருந்த விமானிக்கு, முன்னால் வாகனக்காறன் சிக்னல் கொடுக்கிறான். எங்கட 'குண்டுத்தம்பி' Speed-Gun ஓட வீதியோரமா நிக்கிறார் போல! உங்க பாருங்கோ! எனக்குப் பின்னால றோட்டில பறந்து வந்து கொண்டிருந்த விமானி வேகத்தைக் குறைச்சு மனுசர் மாதிரிப் போறார்; அங்கால கொஞ்சத்தூரம்.

"என்று அடையாளமிடப்பட்ட ஏரி தலைப்பாக வரும்! போனாப்பிறகு திரும்ப பறக்கத் தொடங்கிடுவார். இவர் ஊருக்குச் செய்யிற உந்த நற்பணிக்கு சகட்ரைவர் ஒத்துழைக்கிறார். எட கொஞ்சமாவது யோசிச்சுப்பாருங்கோவன்! உப்பிடிப்பட்டதுகளை நாலுதரம் மறிச்சு ரிக்கற் குடுத்தால் எல்லே கொஞ்சமாவது புத்திவரும். அதை விட்டுட்டு ஒருத்தருக்கொருத்தர் உந்த விதத்தில ஒத்துழைச்சால், ஏதோ தாங்கள் பெரிய விண்ணர்மார், காவல் துறைக்கே தண்ணி காட்டிட்டம் எண்டு இன்னும் துள்ளிக் கொண்டெல்லே திரிவினம். எங்கட காவல்துறை காசு செலவழிச்சு வாங்கி வைச்சிருக்கிதெண்டால் என்னத்துக்கு? நாலு மனிசர் வீதியால சாவுப்பயம் இல்லாமல் நடந்து வரக்கூடியதா இருக்கோணும் எண்டெல்லே! அதை விளங்கிக் கொள்ளாமல் சே! உப்பிடி கண்கடை தெரியாமல் ஓடிறத்தால ஒவ்வொரு வருஷமும் ஆசியாவில மட்டும் 6 லட்சம் சனம் கொல்லப் படுகுதுகள். தயவு செய்து எல்லாரும் வாகனங்கள் ஓடேக்கிள்ளை உங்கட பிள்ளை, குட்டியள், சகோதரங்கள், பெத்ததுகள் எல்லாத்தையும் நினைச்சுக் கொண்டு நிதானமாய் ஓடுங்கோ!

'ஏ9' இல புத்தகக்கடைப் பக்கம் போக வேணும், ஒருக்கால். ஆனால் அதுக்கு முன்னால வயித்தைக் கொஞ்சம் கவனிக்கோணும். அந்தமாதிரி கடையொண்டு இஞ்ச பக்கத்தில இருக்கு! சைக்கிளை ஓரமா சாத்திப்போட்டு உள்ளுக்குள்ளை போய் இருந்தன். கடையில பெரிசா சனமில்லை. ஆரோ கொழும்புக்காரர் போல 3,4 பேர் மூலை மேசையில இருந்திச்சினம். " அப்புக்கு என்ன வேணும்?" குரல் வந்து திரும்பினேன். "ஓ.... வெளியால வெய்யில் படுமோசம். நல்ல இளநீர் ஒண்டும், சாப்பிட வடை நெடுகலும் சாப்பிடுறதெல்லே...ஆ... யாழ்ப்பாணத்தில போனமாசம் சோக்கான பனங்காய்ப்பணியாரம் சாப்பிட்டனான்....அதுமாதிரி வேணும். இரண்டையும் போடுங்கோ!" "அப்பு என்ன நீங்கள் உதுகளைக் கேட்கிறீயள். பணியாரம் எல்லாம் நாங்கள் விக்கிறேல்லை றோல்ஸ், கட்லெற், பற்றிஸ், மிதிவெடி எதுவேணும்?" "சரி மிதிவெடியைப் போடுங்கோ!" "என்னது குடிக்கப்போறீங்கள்? இளநீர் இஞ்சை இல்லை. வேற கோலா, பண்டா, பெப்சி என்ன வேணும்?" "ஆரோக்கியமானதுகளை விக்காதீங்கோ! ஏதாவது கலப்படங்கள் கலந்த அவங்கள் ஏற்றுமதி செய்யிற ரசாயணங்கள் எண்டால் மூலைக்கு மூலை கிடக்கும். சரி தேசிக்காய்த்தண்ணீர் கொண்டுவாங்கோ!" "அப்பு! என்ன நீங்கள் இல்லாததுகளைத்தான் கேக்கிறீயள் தேசிக்காய்த் தண்ணி நாங்கள் விக்கிறேல்லை." " இதென்ன அப்பிடி தேசிக்காய்க்குப் பஞ்சமோ? பண்டா, ஸ்பிரைட் அவங்கள் ஏதாவது உடம்புக்குக் கெடுதல் விளைவிக்கிற ரசாயனங்களைக் கலந்து, தேசிக்காய் ருசியில வித்தால் வேண்டுவீங்கள். வீட்டு வளவுக்குள்ளை நிக்கிற அசலை ஆதரிக்காதீங்கோ! சரி ஏதாவது இயற்கை முறையில தயாரிக்கப்பட்ட யூஸ் இருக்குதோ?" "கிறேப்ஸ் யூஸ் இருக்கிது!" "ஆ....பேந்தென்ன அதைக் கொண்டுவாங்கோ!"




கொஞ்ச நேரத்தில ரெண்டும் வந்திச்சு. சும்மா சொல்லக்கூடாது 6,7 முந்திரிகைப்பழத்தைப் போட்டு நல்லா அடிச்சு செய்திருந்திச்சு. இப்படி இயற்கையா இருந்தால் எவ்வளவு ஆரோக்கியம்! எங்கடை சனம் வருத்தம் வந்தால் தான் இளணியைப்பற்றி யோசிக்கும். தேசிக்காய்த்தண்ணீர், ஆ.... நெல்லி-யூஸ் எல்லாம் எவ்வளவு திறம்! ஒரு நெல்லிக்காயே எவ்வளவு மருந் துகளுக்குச் சமன்! ஒளவையாரே வியந்து சொல்லியிருக்கிறா! ஏதோ எங்கட தலைவிதியை, தலையிடியை நாங்கள் தான் தீர்மானிக்கிறோம். சரி.... நேரமும் போகுது, கெதியாச் சாப்பிட்டிட்டு புத்தக அலுவலையும் முடிச்சிட்டு வீட்டை போகோணும். "தங்கச்சியவை! கணக்கைப் போடிறியளே!" கொஞ்ச நேரத்தில 'பில்' வந்திச்சு. இதென்ன கரைச்சல்? அங்கால மேசையில சாப்பிட்ட கொழும்புக்காரரின்ரை பில் மாறி வந்திட்டிதோ! மிதிவெடி-1, கிறேப்ஸ் யூஸ்-1, 135- ரூபா மொத்தம். 6,7 முந்திரிகைப்பழத்துக்கு 75, ரூபா- போட்டிருக்கு லாபம் வ்வைக்கத்தான் வேணும்.... ஆனா உந்த மிதி வெடி யில என்ர பேர்ஸ் எல்லே சிதைஞ்சு போச்சிது.... 50ரூபாவாம். வடிவாய் கண்ணைக்கசக்கி திருப்ப ஒருக்கால் பார்த்துப்போட்டு, புத்தகத்துக்கு வைச் சிருந்த காசிலையும் எடுத்துக் குடுத் துப்போட்டு வெளியில வந்தன். உப் பிடி ஆக்கள் கூடிற இடங்களில, கேள்வி கேட்டால் பார்க்கிற சனம் என்னைப்பற்றி என்ன நினைக்கும்? ஆனால் நல்ல காலம் புத்தகத்துக்கும் சேர்த்து காசு எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டிரா விட்டால், காசு காணா மல் போய் மரியாதை கெட்டிருக்க வேண்டி இருந்திருக்கும். ஏரம்பர் மாவாட்டினதா செய்தி பரவி யிருக் கும். ஆனாப் பாருங்கோ உந்த விலை யில வித்தால், சனம் குறைஞ்சு எல் லாரும் இலையான் அடிக்க வேண்டி வந்திடும். பேந்து தென்றலில விளம் பரம் போட்டு, கொழும்புச்சனத்தைத் தான் இங்க சாப்பிட வரச்செய்யோணும். ஆனால் அதுவும் சரிவராது. இஞ்சை கிடைக்காத தமிழ்ச் சாப்பாடெல்லாம் அங்க கிடைக்கிது தானே! அந்தப் பிள்ளை ஒண்டின்ர "கொஞ்சம் மனக் கண்களைத் திறவுங்களேன்" எண்ட சிறுகதைத் தொகுப்பு வாங்க வைச்சிருந்த காசில, என்ர கௌரவம் காப்பாற்றப்பட்டிச்சு. உந்த இளங்கோ அடிகளின்ர தமையன் இமயமலையில கல்லெடுத்து, ஆரிய மன்னன் ஒருவரின்ர நெற்றியில வைச்சு சுமந்து கொண்டுவந்து, கண்ணகிக்கு கோயில் கட்டினவன். அது எங்களுக்குப் பெருமை பாருங்கோ! கடையளில சாப்பிடிற ஆக்களும், கடைக்காரரும் கொஞ்சம் சுதேசியத்தையும், சுகவாசத்தையும் (உடல் ஆரோக்கியம்) பற்றிச் சிந்திச்சுச் செயற்படுங்கோ!

"சரி! புத்தகத்துக்கு வைச்சிருந்த காசில கைவைச்சாச்சு. அதைப பேந்தொருக்கால் வாறநேரம் வேண்டுவோம். இப்ப வீட்டை போகேக்கிள்ளை 4வடை வேண்டிக் கொண்டு போவம்." அந்தக் கடைக்கு ஒரு கும்பிடு போட்டிட்டு, வேற ஒரு கடையில முதலே விலையை விசாரிச்சுப் போட்டு 4 வடையைக் கட்டச் சொன்னன். 28-ரூபாவுக்கு 4 வடை.... நியாயமான விலை...காசைக் கொடுத்துப்போட்டு பார்சலைக் கையில வேண்டினன். ஏதோ மனசில ஏற்பட்ட சந்தேகத்தில வடைப்பார்சலைப் பிரிச்சுப் பார்க்கிறன்.... 'என்ர கடவுளே!' ஏன் நாங்கள் உப்பிடிக் கண்கெட்டுப் போறோம்! அந்த வடைப்பார்சல் சுத்திறதுக்குப் பாவிக்கப்பட்டிருந்த பேப்பர் சிங்கள நியூஸ் பேப்பர்! அப்ப கழிவுப் பேப்பர் கூட எங்களுக்கு அங்கையிருந்து தான் வருகுதோ? இஞ்ச வெளியாகிற எங்கட தினசரியள் வாரப்பத்திரிகை யள், ஏனைய கழிவுப் பேப்பரெல்லாத் துக்கும் என்ன நடக்கிது? சிங்களச் சனம் மாதிரி எங்கட சனம் உதுகளைச் சேர்த்துப் பயன்படுத்தாமலி ருக்கிதோ? மரங்களைத் தறிச் செல்லேகாகி தங்கள் செய்யிறது! காற்றில பறந்து வந்த பேப்பர் ஒரு துண்டு அங்கங்கு சடசடத்துவிட்டு, என்ர காலடியில தட்டுப்பட்டு நிண்டிச்சு. அதில...."ஏ9 ஏரம்பு" எண்டு இருந்திச்சு. எனக்கு அந்த வடை பிடிக்கேல்லை; சைக்கிள் உழக்கப் பிடிக்கேல்லை; ஏன் என்ர காலையே எனக்குப் பிடிக்கேல்லை. மனமெல்லாம் வேதனையாய் இருக்கிது. உதிலை கொஞ்ச நேரம் குந்தப் போறன், என்னை விடுங்கோ!!



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 03**

**பகுதி -16**



# மூடுபனிக்குள் ஒரு தேடல்

**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

"அதற்காக நன்றி கூறுகின்றேன். ஆனால் இது தொடர்பான கொடுப்பனவுகள் எதையும் நான் பெறப்போவதில்லை. உங்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம்,டிப்ஸ் சுகயீன மாக இருந்தாலொழிய சரியான நேரத்துக்கு வழிகாட்டல் மையத்துக்கு அவனை ஒழுங்காக அனுப்பிவைக்கவேண்டும் என்பதை மட்டும் தான்.....அத்தோடு எங்கள் ஆய்வுக்கென இந்த சந்திப்புகளில் நிகழ்வதையெல்லாம் முழுமை யாகப் பதிவு செய்வதற்கு உங்கள் எழுத்து மூலமான அனுமதியையும் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவரங்கள் எப் போதாவது கற்பித்தலுக்கு அல்லது செய்தி யாக்கப்படுதலுக்கு பயன்படுத்தப்பட்டால் அல் லது பிரசுரிக்கப்பட்டால், டிப்ஸ்சின் உண்மை யான அடையாளத்தை எவரும் அறிந்து கொள்ள அல்லது ஊகிக்க முடியாத அளவுக்கு அவனை அடையாளம் காட்டக் கூடிய தகவல்கள் முழுமையாகவே மாற்றியமைக்கப் படும் என்ற உறுதிப்பாட்டை எழுத்திலேயே நான் தருவேன்" என்றேன் நான்.


இந்த சந்திப்புக்கு முன்னதாகவே தயாரிக்கப்பட்டுவிட்ட மேற்படி உறுதிமொழி அடங்கியதாளை அவளிடம் நீட்டினேன். அவள் அதனை அவதானமாக வாசித்தாள்.

" மிகவும் நல்லது" என்றாள் இறுதி யாக. "நான் இதை வைத்துக்கொள்ளலாமா?"

"ஆம். அத்தோடு நீங்களும் உங்கள் கணவரும் டிப்ஸ்சுடனான சந்திப்புகளின் விவ ரங்களை முழுமையாக பதிவு செய்வதற்கான உங்கள் அனுமதியை தரும்விதத்தில் இந்தக் கூற்றில் ஒப்பமிட்டுத் தரவேண்டும். இந்த விவரங்கள் வெளியிடப்படுமானால் தனிப்பட்ட தகவல்கள் மாற்றியமைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையையும் அதில் உள்ளடக்கலாம்"

அவள் அந்தத் தாளை வாங்கி மிக அவதானமாக வாசித்தாள்."நான் இதை வைத் திருந்து எனது கணவரோடு ஆலோசித்து இதை நாங்கள் தொடரவிரும்பினால் உங்களுக்கு தபாலில் அனுப்பலாமா?"

"நிச்சயமாக அப்படிச் செய்யலாம்" என்ற நான் "நீங்கள் எப்படி முடிவு செய்தாலும் அதை முடிந்தளவு விரைவில் எனக்கு அறியத் தந்தால் மிகவும் உதவியாகவிருக்கும்" என்றேன்.



அவள் அந்தத் தாளை மிக எச்சரிக்கையுடன் பிடித் துக்கொண்டிருந்தாள். உதடு களை ஒருமுறை ஈரமாக் கிக்கொண்டாள். வழமை யாக, தாய்மாருடன் இடம்பெறும் ஆரம்பச் சந்திப்புக்களைவிட இது நிச்சயமாக மிகவும் வேறுபட்டதாக இருந்தது. வீட்டிலேயே உள்ள விளையாட்டு அறையில் அவனை பார்க்க மறுத்தது எனக்கு சிறிது அசௌகரியமாகத்தான் இருந்தது. அவளுக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். நான் இதில் கொஞ்சம் இறுக்கமாக இருக்க வேண்டியிருந்தது. அப்படிச் செய்யா விட்டால் டிப்ஸ் வழிகாட்டல் மையத்துக்கு வரமாட்டான்.

"நாங்கள் முடிவு செய்ததும் உங்க ளுக்கு அறிவிக்கிறேன்" என்றாள் அவள்.

எனது மனதில் உற்சாகம் சிறிது குன்றியது போலிருந்தது. தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கு அவள் இதையே ஒரு சாட்டாகப் பயன்படுத்தக்கூடும். ஆனால் அவள் இதற்கு ஒப்புக் கொண்டால் இந்த முயற்சியை இறுதிவரை முன்னெடுக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு விடுவாள். அவர்கள் இந்த உறுதி மொழியில் ஒப்பமிட்டு விட்டால் தங்களுக்குரிய பங்கைக் கட்டாயம் நிறை வேற்று வார்கள் என்று நான் நிச்சயமாக நினைத்தேன். அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளா விட்டால் எனது முயற்சிக்குத் தேவையாக இருக்கும் டிப்ஸ்சின் கிரம மான வரவை எதிர் பார்க்க முடியாது.

நீண்ட நேர மௌனத்தை கலைத்துக் கொண்ட அவள், "கொடுப்பனவுகளை தர இயலாத குழந்தை ஒன்றை நீங்கள் பார்க்கக்கூடிய விதத்தில் வசதியுள்ள ஒரு குடும்பத்தினர் போதுமானளவு கொடுப்பனவை தர முன்வரும் போது நீங்கள் ஏன் அதை பெற மறுக்கிறீர்கள் என்று எனக்கும் புரிய வில்லை"என்றாள்.

" எனது பணியின் முக்கியமான அம்சமாக குழந்தைகளைப் பற்றிய புரிந்து ணர்வை அதிகரிப்பதற்கான ஆய்வுகளில் ஈடுபடுவது இருப்பதுதான் அதற்குக் காரணம்" என்று விளக்கினேன்.

(தொடரும்....)

---



## திரைவிமர்சனம்



# குடைக்குள் மழை

குடைக்குள் மழையா? பார்த்தீபன் அப்படித்தான் யோசித் திருக்கிறார். மாறுதலாக எதையோ செய்துபார்க்க வேண்டும் என்ற ஆவல் பொங்க 'குடைக்குள் மழை'யை எடுத்திருக் கிறார்.

முன்னர், ஒன்றரை அடி நீளத்தில், வித்தியாசமான அமைப்பில் கிறுக்கல்கள் என்றொரு கவிதைப் புத்தகத்தை வெளியிட்டவர் பார்த் தீபன். தமிழ்ச்சினிமாவில் ஓரளவுக்கு நம்பிக்கையூட்டக்கூடிய அடையாளங் களில் பார்த்தீபனும் ஒருவர். பார்த் தீபன் நடித்த படங்களில் பல ஓரள வுக்கு பார்க்கக் கூடியவை. அவற்றில் தமிழ்ச்சினிமாவின் வாடை அடித் தாலும் அதற்கப்பாலும் கவனம் கொள்ளக்கூடிய அளவுக்கு அவை இருந்தன; அவற்றில் பார்த்தீபன் இருந்தார்.

இப்போது பார்த்தீபன் எழுதி, இயக்கி, நடித்து மிருக்கிற புதிய படம் 'குடைக்குள் மழை' கொஞ்சம் கூடுதலாக எதிர்பார்க்கப்பட்ட படம். ஏதாவது புதிதாக இருக்குமென்று ஒவ்வொருவரும் நினைத்திருந்த படம்.

மிகக் குறைவான நடிகர்க ளைக் கொண்டு கூடுதலான பாத்திரங் களை அறிமுகப்படுத்தி ஒரு காதற் கதையை சொல்லியிருக்கிறார் பார்த்தீபன்.

ஒருவகையில் இந்தப் படத்தைப் பார்த்தால், காதற் கதையைச் சொல்லும் படம் போலத் தோன்றும். ஆனால், மறுவளமாகப் பார்த்தால் இது இன்று புதிதாக உருவாகியிருக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான எதிர்வினை என்று தெரியும்.

காதலிப்பதாக நடிக்கிற பெண்ணை நம்பி ஏமாறும் இளை ஞனின் காதற்கதை ஒன்று.

பார்வையாளர்களைக் கவர்ந்திழுத்துக் குஷிப்படுத்தி, லாபமீட்ட முனைகிற தொலைக் காட்சி அலைவரிசைகளின் ஏமாற்று மற்றது.

ஓட்டோ ட்றைவராக வரு கிற பார்த்தீபன் அம்மா, அப்பா, சகோதரங்கள் இல்லாத தனி ஆள். இருக்கிற வீட்டிலிருந்து வைத்தி ருக்கிற ஓட்டோ வரையில் எல்லா வற்றிலும் ஒழுங்கையும் அழகையும் நேர்த்தியையும் விரும்புகிறவர்.

தனியார் தொலைக் காட்சியொன்றுக்காக நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் மதுமிதா புதிய நிகழ்ச்சி யொன்றுக்காக 'இளைஞர்கள் பெண்க ளிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள்' என்பதைக்காட்ட பார்த்தீபனுடன் பழ கத்தொடங்குகிறார். வெறும் ஓட்டோ சாரதியான பார்த்தீபனுக்கு மதுமிதாவின் நோக்கங்கள் தெரியாது. அவர் அப்பா வித் தனமாக, மதுமிதாவின் அணுகு தலை, நெருக்கத்தை காதல் என்று நம்பிவிடுகிறார். இறுதிவரை தனது உள்நோக்கங்களைத் தெரியப்படுத் தாமல் காரியத்தைச் சாதித்துக் கொண்டு போய்விடுகிறார் மதுமிதா. மதுமிதாவின் நெருக்கம் அவருடைய தொலைக்காட்சித் தொழில்சார்ந்தது என்று நம்பவே முடியாமல் உண் மையான உறவுதான் அது என்ற ஏமாற்றத்தை ஜீரணிக்கமுடியாமல் சிதைகிற இளைஞனாக பார்த்தீபன்.

இன்று மீடியாக்கள் தமது போட்டிகளுக்காக எப்படியெல்லாம் பொதுமக்களின் வாழ்வை வைத்து தந்திரங்களைக் கையாள்கின்றன என்பதற்கு இது நல்ல சாட்சி.

ஒரு விதமான குரூர ரச னையை வளர்ப்பதில்தான் இன்று பெரும் முதலீடுகளைச் செய்கின்றன வணிக மீடியாக்கள். அவற்றுக்கு மனித உணர்வுகளின் சிதைவுக ளைப் பற்றியோ சமூக உளவியலின் பாதிப்புப்பற்றியோ அதிக கவன மிருப்பதில்லை.

இங்கே மதுமிதா செய்வ தும் அதுதான். மிகவும் அப்பாவித் தனமாக வாழுகிற நல்ல தொரு இளைஞனைச் சீண்டி கொதிப் படையவைத்து சிதைத்துவிடுகிறார்.

இது ஒரு வேடிக்கை நிகழ் ச்சி என்ற தோரணையில் ரசிப்ப தற்கு சுவாரஸ்யமான அளவுக்கு காட்சிகளை படம்பிடித்து விட்டு அதன் பிறகு அந்த ஏமாற்றத்தாலும், அவமானத்தாலும் அழிகிறவன் பற்றி எந்தக் கவலையுமின்றி அடுத்த நிகழ்ச்சிக்குத் தாவுகிற அயோக்கி யத்தனத்தின் அரசி யலை நம் முன் வைத்து நிமிர்கிறார் பார்த்தீபன்.

ஏமாந்து போகிற இளைஞர்க ளுக்கு ஒரு பாடமா கவும் குடைக்குள் மழையிருக்கிறது.

தீவிரமாகவோ வெளிப்படையாகவோ சொல்லாமல்மெதுவாக உள்ளு ணர்த்துகிற விதமாக தன்பார்வையை முன்வைக்கிற பார்த்தீபன் சறுக்கி யிருப்பது வணிக சினிமாவின் உத்தி களை மடியில் வைத்திருப்பதால்.

காதல் நினைவுகளைக் காண்பிக்கப்படும்போது முத்தக் காட்சிகளும் உடல் ரீதியான பாலுணர் வுடன் சம்பந்தமான விடயங்களுமா அடையாளம் பெறவேண்டும். பக்கு வமான நிலையிலிருக்கும் இளை ஞனின் மனதிலும் வெறும் தன் துணையை பெண்ணைப் பற்றிய சித்திரம் பாலுணர்வுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதா?

இதே போல மனநெருக் கடிக்குள்ளாகும் போது பார்த்தீபனின் மனவெளிப்பாடாக வரும் (உளவி யல்) உருவம் பொருத்தமில்லாத வீண் முயற்சியும் வீண் சேர்ப்பும். தலையை நீளவளர்த்து, சிகரட்புகைத் தபடி சிங்கப்பூரிலிருந்து வருகிற தாகக் காண்பிக்கப்படும் நகர்ப்புறத்து 'கில்லாடி' இளைஞனாக வரும் பார்த் தீபனை சகிக்க முடியவில்லை என் பதே உண்மை. இந்தக் கற்பனையும் அதனைக் கையாண்ட விதமும்தான் படத்தை மிகவும் பலவீனப் படுத்து கின்றன.

காதல் கிறுக்கனைப்போல, குடைக்குள் மழையிலும் வேறு விதமான ஒரு அடையாளத்துடன் முயன்றிருக்கும் பார்த்தீபனுக்கு இந் தப் படம் ஒரு பரீட்சைக் களம்தான்.

படத்திலுள்ள மேலும் சில சிறப்புகளையும் சொல்லியாக வேண்டும்.

அரங்கு, கலை என்பவற் றில் பார்த்தீபன் எடுத்த கவனம் பாராட் டப்படவேண்டியது. நாசர், மணிரத்னம், கமலஹாசன், பாலச்சந்தர், பாலு மகேந்திரா, மகேந்திரன், ஜெயகாந்தன் போன்றோர் இந்தவிடயத்தில் கூடுதல் கவனத்தோடியங்கியிருக்கிறார்கள்.

இந்தப்படத்தில் இசையும் புதிய கவனிப்புக்குரியதாகிறது. கார்த் திக்ராஜாவின் இசை ரெயில்வே லைனின் அருகாக பார்த்தீபனின் வீடு இருக்கிறது என்பதைச் சொல்கிறது- கமரா காட்டாமலே. ஒரு பாடலிலும் இதைக் கேட்கலாம். இப்படிப்பல.

உளவியல் சார்ந்த படமாக உருவாக்க முனைந்த பார்த்தீபன் தமிழ்ச் சினிமாவின் வழமையான விளிம்போரங்களில் உலாவிய தேயுண்மை.

— **ஆரதி**

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

*பாவலா!*

*எனக்கு சினிமாவில் கதாநாயகி நடிக்கும் வாய்ப்பு கிடைந்துள்ளது. தங்களின் அறிவுரை என்ன?*

**சுமதி. கிளிநொச்சி.**

அறிவுரையா? அனுதாப உரைவேண்டுமானால் கூறுகிறேன்....!

*பாவலன்! அவர்களுக்கு வணக்கம்.*

*அமெரிக்கா விண்கலத்தை இடைவானில் பிடிக்க வெளிக்கிட்ட முயற்சி தோல்வியானது பற்றி?*

**விதுரன்.**
**யாழ்ப்பாணம்.**

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.... தோல்விகள் வெற்றிக்கான பாதையை செப்பனிடவே உதவுகின்றன.

*கிரிக்கெட்மினி உலகக் கிண்ணத்தை மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றிக் கொண்டது ஒரு சாதனையா பாவலரே?*

பழைய புகழ்பெற்ற வரலாற்று பெருமைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் வெற்றி பெறுதல் சாதனைதானே...! இது வேறு சிலருக்கு வேதனையானால் அதற்கு நாமென்ன செய்வது?

**ஜெயந்திரன்**
**வட்டக்கச்சி.**

எழுதுங்கள்... மீண்டும் எழுதுங்கள்... தொடர்ந்து எழுதுங்கள்... எழுத்து உங்கள் வசமாகிவிடும்.

**சதீஸ்.**
**புதுக்குடியிருப்பு.**

*மண்டைதீவு சாட்டியில் எடுக்கப்படுகின்ற தொல்லியல் பொருட்களைப் பார்வையிட்டீர்களா பாவலரே?*

படங்களில் பார்வையிட்டேன். நேரில் சென்று பார்த்தால் புரிந்து கொள்ளும் அளவிற்கு பாவலனுக்குத் தொல்லியல் அறிவு போதாது.

**ஜனகன்.**
**விசுவமடு.**

*பாவலா!*

*ஐ.நாவில் சனாதிபதி ஆற்றிய உரை பற்றி தங்களுடைய கருத்து என்ன?*

ஐ.நா சபைக்கென்ன ... ஆண்டவனின் சபைக்கே போனாலும் அம்மணி பொய்யைத்தவிர எதையும் பேசமாட்டார் போதுமா?

**சாரணியன்,**
**மண்டைதீவு.**

*பாவலரே!*

*கனடா "பொங்குதமிழ்" சொல்லும் செய்தி என்ன?*



# பாவலன் பதில்கள்

*பாவலரே!*

*தங்களுக்கு தெரிந்த தெருக்குரல் ஒன்று சொல்லுங்களேன் (நகைச்சுவையாக)*

*அ.சுதன்,*
*சாவகச்சேரி.*

சுற்றும் உலகத்தை சுற்றியபின் நான் கற்றேன் சுற்றிலிற் சுற்றாமை நன்று.

*பாவலா!*

*மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தாக்கப்பட்டதைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்?*

'சிறிலங்கா பொலிசார் மனித உரிமைகளுக்கும்- மனித உரிமைகளின் பாதுகாவலர்களுக்கும் மரண அடி கொடுக்கத் தயங்கமாட்டார்கள் என்பதை உலகம். புரிந்து கொள்ளவேண்டும்' அவ்வளவுதான்.

**வதனி.**
**ஜெயந்திநகர்.**

*அன்பின் பாவலரே...!*

*சமாதானபேச்சு வார்த்தையில் இந்தியாவின் பங்களிப்பு என்ன? ஜப்பான் இதில் ஏன் மும்முரமாக ஈடுபடுகின்றது?*

இந்தியாவின் பங்களிப்பு சமாதான முயற்சிகளை குழப்புவோர்க்கு உற்சாகமளித்து உதவுவது... ஜப்பானின் நோக்கம் ... தமது அரசியல் வர்த்தக நலன்களை மேம்படுத்திக்கொள்வதே... எல்லாமே சுயநலத்தின் அடிப்படையிலான ஈடுபாடுகளே...

**ஜெசிதா.**
**உருத்திரபுரம்.**

*பாவலா!*

*நான் சிறுகதை எழுத முயற்சி செய்கிறேன். எனக்குத் தங்களின் அறிவுரை என்ன?*

பொங்குதமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் வரிகளை கனேடிய தமிழர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

**குணா.**
**மாதகல்.**

*கொழும்புக்கு இரவில் ரயிலில் பயணம் செய்த அனுபவம் உண்டா?*

முன்னொரு காலத்தில்...

**தர்மேந்திரா.**
**புதுக்குடியிருப்பு**

*பாரதி கண்ட புதுமைப்பெண்ணைக் காணத்துடிக்கும் நெஞ்சங்களுக்குத்தங்களின் பதில்?*

செங்களம் வென்று சிரிக்கும் எங்கள் பெண் போராளிகளைப் பார்த்துப் பூரித்துப் பிரமிப்படையுங்கள்...

**அயன்சன்**
**புதுக்குடியிருப்பு**




வவுனியா நகரம் கச்சான் விற்பவரிடம் ஒருவர்

"ஐயா பொட்டலம் ஒண்டுதாங்கோ"
"ம்.. எங்கயிருந்து வாறீங்க?"
"யாழ்ப்பாணம்."
"கொஞ்சம் இருங்க-சாமான் எடுத்துக் கொண்டு வரவேணும்.. தம்பீ.. வறுத்தகச்சானைக் கொண்டா ஆள்வந்திருக்கு..."
"என்ன விலை ஐயா! பதினைஞ்சுதானே."
"ம்... எத்தினை அ..இந்தாங்க அங்கால போங்க-"
"ஐயா... எனக்கு கொஞ்சம் தொகையா வேணும் கிடைக்குமோ..?"
"பின்நேரம் போல மரத்தடிக்கு வாங்க..இப்ப சட்டெண்டு போங்க.. கச்சான் கச்சான் கச்சான் ஓடிவாங்க சுடச்சுட கச்சான்..."
"ஐயா...ரெண்டு பொட்டலம்..."
அங்குமிங்கும் பார்த்துவிட்டு "ஐயாஇரு சிறு பொட்டலங்களைக் கொடுத்து முப்பது ரூபாய்கள் பெறுகிறார்.
"அதென்ன கச்சான் அப்படியே கிடக்கு சனம் வந்து ஏதோ வாங்கிக் கொண்டு போகுது"
"உஸ்....சத்தம் போடவேண்டாம் அது கஞ்சாப்பொட்டலம்."
வவுனியா நகரம் வேல்கபேக்கு அருகில் இந்த கஞ்சா மன்னிக்கவும் கடலை வியாபாரம் நடக்கிறது. சுடச்சுடக் கச்சான்.


* * *

"வெள்ளிக்கிழமையில எங்க போறாய் கோவிலுக்கு போறதில்லையே."
ஏன் மற்ற நாளுகள்ள கோவிலுக்குப் போனா ஆகாதே. நான் ஏதும் கறிக்கு வாங்கிக் கொண்டரப்போறன்.
போ...இண்டைக்கு சந்தையில மீனிறைச்சி வாங்கேலாது. என்னத்தை வாங்கிறாய் எண்டு பாப்பம்."
"ஏன், சந்தைக்காறரும் ஒட்டு மொத்தமா சைவக்காறராப் போட்டினமோ- அப்ப கருவாடு வாங்குவம்-

* * *

"கீரை என்ன விலை?"
"பத்து ரூபாச் சொன்னான்- விடாப்பிடியா நிண்டு எட்டுரூபாக்கு வாங்கினன்."
"அது சரி நல்ல சாறியொண்டு கட்டியிருக்கிறீர். என்னவிலை."
"எழுநூற்றைம்பது ரூவாத்தான் நல்லா யிருக்கே-"
"என்ன எழுநூற்றைம்பதோ- நாகேசு அறுநூறு ரூவாக்குத்தானே எடுத்தவளாம்- அது நல்ல கவரும்"
"மெய்யாவோ- இவன் என்னை ஏமாத்திப் போட்டானோ? கடவுளே நூற்றைம்பது ரூவாக் கூட எடுத்திட்டான்."
"சரி சரி, மிளகு போறடம் தெரியா கடுகு போறதக் கண்டு பிடிப்பாய் பாவம் கீரைக்காறி."

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -88



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -88

........................................................................
........................................................................
........................................................................
........................................................................

பெயர் : ........................................................ ஈழநாதம்
முகவரி : ........................................................ யாழ்சாலை,
........................................................ கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -87



**த.கோகுலராஜ்,**
**சுமையுந்துப்பிரிவு,**
**ஆயப்பகுதி,**
**புளியங்குளம்.**

## பரிசுக்குரிய வரிகள்

*சிறுவர் உரிமைக்காய் வாதாடும் சிறப்பான நாளிதனில்*
*கொடிய போரின் வடுக்கள்; எம்மினம் மீது நடத்திய கோர*
*யுத்தத்தின் அழிவுகளால் உறவுகளை இழந்து வாடும் இச்*
*சிறுவர்களின் உரிமைக்காய் வாதிடுவோம்!*

## பாராட்டுக்குரிய வரிகள்

*தளிர்களே! உறவை பகைவர்தின்றனரோ?*
*வெந்திடாதீர், வென்றவர் உம் ஏக்கத்திற்கு ஊக்கமளிப்பர்*
*சாலைகளில் திரிந்திடாது ஈழச் சோலை தனில் சேர்ந்து*
*பொங்கு(ம்) தமிழீழத்தில் சாதனை பல படைத்திடவாரீர்.*

அ.யாழ்மதன்,
கிளிநொச்சி.

*போசாக்கை உறுஞ்சி, மருத்துவத்தை தடுத்து,*
*கலாசாரத்தை சீரழித்து சிறார்களை பழியாக்க*
*சிங்கள தேசம் முனைகிறது. நாகர் கோவிலில்*
*அதன் நச்சு முகம் தெரிந்தது நாளை துயர் நீங்கும்.*

கா.ஓவியா,
கிளிநொச்சி.

*எமது தாய் மண்ணில் வளரும் சிப்பிகளே காலில்*
*செருப்பின்றி ஆடையின்றி யாரைபார்த்து களங்குகின்றீர்*
*ஏன் தயக்கம்? தயக்கம் வேண்டாம்! நீங்கள்*
*எம் மண்ணில் அனாதைகள் அல்ல வருங்கால முத்துக்கள்.*

க.பிரியா,
பூநகரி.

*போரில் பங்கு கொள்ள உரிமையில்லை உங்களுக்கு -இதனால்*
*ஊரில் உள்ள பள்ளியில் தொடருங்கள் கல்வியை -எம்மைத்*
*தேடிப்போர்வந்தால் உடனே*
*ஓடி வாருங்கள் இது உங்கள் கடமை.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*அஞ்சியும் கெஞ்சியும் கூடி நின்று பார்ப்பதற்கு*
*நேரம் இதுவல்ல, நேயமிகு இளையோரே*
*ஐப்பசி மலரும் இந்த இனிய தினத்தினிலே*
*ஐக்கியமாய் உறுதி கொள்வீர் கல்வியதில் உயர்ந்திடவே*

வே.பிரியநிலா,
கண்டாவளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.








இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.